
# ஆதாரக் கல்வி

3 7-8

நவம்பர், டிசம்பர், 1950




கல்வி 3 | விக்ருதி, ஐப்பசி—நவம்பர் 1950 | கலை 7

# உலக அரங்கிலே

பண்டிட் ஜவஹர்லால் நேரு சமாதானப் பிரியர். உலக சமாதானத்திற்காக உழைப்பவரும் சுதந்திரம், உரிமை இவற்றிற்காகத் தைரியமாகப் போராடுபவருமான பண்டிட் நேருவின் கையில் இந்தியாவின் எதிர்காலம் இருப்பதுபற்றி மனித சங்கமே மகிழ்ச்சியடைகிறது. இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கை இன்று உலக சமாதானத்திற்கு உதவுகிறது. மூன்றுவது உலக யுத்தம் உலக மக்கள் மீது சூழ்ந்து வருவதை அவர் காண்கிறார். இந்த சோக முடிவைத் தடுப்பதற்காகத் தேவையான எல்லாவற்றையும் செய்யவேண்டுமென மனப்பூர்வமாக, உறுதியாக நம்புகிறார். உலக யுத்தம் நேரிடுமாயின் நடு நிலைமை வகிக்க முயற்சிப்பதென நேரு அரசாங்கம் திட்ட வட்டமான முடிவைச் செய்துள்ளது. அச்சத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ எவருக்கும் இந்தியா பணிந்து நடக்கப்போவதில்லை. ஒவ்வொரு பிரச்னையையும் அதன் அதன் தராதரத்திற்கேற்ப ஆராய்ந்து ஐ. நாவின் சமாதான லட்சியத்திற்கிணங்க தனி வாழ்வையே ஆச்ரயிக்கும் என்பதே நம் நாட்டில் அயல்நாட்டுக் கொள்கையாகும்

இக் கொள்கையை ஒட்டியே கோரியாவிற்கும், சீனுவிற்கும், திபேத்திற்கும், காஷ்மீருக்கும் இந்தியா தனது யோசனைகளைக் ...றிற்று. கோரியாவில் ஐ. நா. படை அனுப்பக்கூடாது; ஐ. நா. ...பையில் சீனுவிற்கு இடந்தரவேண்டும் என்ற நேருஜி வற்புறுத் ...கள் ...கொள்கை அனுஷ்டிக்கப்பட்டிருந்தால் இன்று கோரியாபோரில், ...வே... இறங்கி, மேலும் போரை மூர்க்கத்தண்யமாக்கியிருக்க முடியாது. ... தனது எல்லைகளைக் காத்துக்கொள்ள சர்வதேச நியதி எதற்கும் ...ப்படாமல் திடீரென்று தீபேத்மீது போர் நடவடிக்கை எடுத்துக்

# தீபாவளி—இருள் நீக்கும் ஒளி

ச. ரா. கச்சபேஸ்வரன், சைதாப்பேட்டை, சென்னை.

தீபாவளிப் பண்டிகையாகிய இந் நன்னளில் மக்களைத் துன்புறுத்தி அல்லலுறச் செய்துவந்த நரகாசுரனைத் திருமால் அழித்ததாகப் புராணம் கூறும்.

நாமும் இந்நன்னாளில் காரிருள் நீங்கிக் கதிரவன் தோன்று முன்னம் கங்குல் வைகறையில் எண்ணெய் நீராடி உடலழுக்கைப் போக்கி, தூயவிளக்கை ஏற்றி, புத்தாடை புனைந்து, புதிய அணி அணிந்து, நல்விருந்து அருந்தி, இப்பண்டிகையைக் கொண்டாடுவோம்.

மக்களகத்தேயுள்ள ஆணவ அகங்காரமென்னும் அழுக்கை யகற்ற நீராடுவதும், மனதிலுள்ள அறியாமையாகிய இருளை நீக்க தீப ஒளியை யேற்றுவதும் பொருத்தமேயல்லவா!

ஆயினும் வெறும் உடலழுக்கைப் போக்குவதும், புறவிருளை ஒளியினால் நீக்குவதும் போதுமா? அடிமைத் தளையினின்று விடுபட்டோம். ஆயினும் நாட்டினின்று பஞ்சமும் பிணியும் இன்னம் நீங்கவில்லை. மடமை, சுயநலப் பேராசை, பதவி மோகம் முதலிய அசுரசக்திகள் நாட்டின் நாசவேலைக்கு அடிகோலுகின்றன. இச்சமயம் நாம் செய்ய வேண்டுவது யாது? மக்கள் அனைவரும் மக்களாய் வாழவும், பாரத சமுதாயம் முன்னேற்ற மடையவும் வேண்டி, இந்நாட்டு மக்கள் யாவரும் ஏழையாயினும், பெருநிதி படைத்த செல்வராயினும், மாணவராயினும், ஆசிரியராயினும், பாட்டாளியாயினும், முதலாளியாயினும், விவசாயியாயினும், அரசியல் அரங்கத்தில் அழகுறப் பேசும் அறிஞராயினும், யாவரும் உள்ளும் புறமும் கருத்தொத்து அவரவர்களின் முழுச்சக்தியுடனும் வேலைசெய்வோமென்றும், இம்முன்னேற்றத்திற்கெதிராக வேலைசெய்யும் அசுரசக்திகள் அனைத்தையும் வேருடன் அழித்து மக்களிடைப் புத்தொளி புகுத்தி, நாட்டு மக்கள் நலமுடன் வாழவகை செய்வோமென்றும், இந் நாளில் நாம் உறுதிகொள்வோமாக, மறம்மடியவும் அறம் வளரவும் இறைவன் அருளை வேண்டுவோமாக.

## தீபாவளித் திருநாள்

1 பார்புகழ் பாரதத்தின்
  பாங்குறு மக்கள்நாமும்
சீர்பெறு சுதந்திரத்தை
  சிறக்கவே அடைந்தோம்மேலும்
ஏர்தரு கல்விச்செல்வம்
  எங்கணும் பரவிப்பெருகி
நேர்மையும் நீதியோடும்
  நலங்களும் நிறைந்துவாழ,

2 மடமையும் மதவெறியுடனே
  மமதையும் மாண்டுபோக
கொடுமையும் நாட்டினின்று
  கடியவே நீங்குமாறும்
அடிமையாம் தளையறுத்த
  அண்ணலை வேண்டிநாமும்
திடமுடன் திருவுங்கொண்டு
  தேவராய் வாழ்ந்திடுவோம்.

---

கொள்ளக் கூடிய நிலையிருந்திருக்காது. காஷ்மீரைப்பற்றி இந்தியாமீது பாகிஸ்தான் புனிதப்போர் தொடுக்கவேண்டுமே என்று கூ... மளவுமட்டும் வார்த்தைகள் பெருகி யிருக்காது. எது நேரினு இந்தியா உள்ளங் கலங்காது அண்ணலின் ஆணைவழி நடக்கு சக்தியனைத்தும் சேர்த்து ஆபத்தைச் சமாளிக்கும். இந்தியாவ் யோசனைகளைச் சமாதான வழி என்று உலக நாடுகள், வல்லரசு உள்பட உணர ஆரம்பித்துவிட்டன. ஐ. நா. இதை உணருமா



# சென்னை சர்க்காரின் சாதனைகள்

## ஆதாரக்கல்வி

இந்தியா முன்னேற வேண்டுமானால் சென்ற 50 ஆண்டுகளில் நாம் கற்றவற்றை மறக்கவேண்டுமென்று ஓர் சமயம் காந்தியடிகள் கூறியுள்ளார். நோக்கங்களிலும் போக்கிலும் தேசிய மல்லாதோர் அன்னியக் கல்வி முறையைப் பயிலும்படியான நிர்ப்பந்தத்துக்கு, இந்தியாவின் எதிர்காலச் செல்வங்களாகிய நமது மாணவர்கள் உட்படுத்தப் பட்டிருந்தது மகாத்மாவுக்கு மிகவும் மனவருத்தத்தைத் தந்துவந்தது. இக் கல்வி திட்டத்துக்குப் பதிலாக ஒரு தேசீயக் கல்வித் திட்டத்தை மக்களுக்கு வகுத்துக் கொடுக்கவே மகாத்மா ஆதாரக் கல்வி திட்டத்தைத் தயாரித்தார். இதுவே, இதன் சிருஷ்டி கர்த்தாவுக்கு நன்றி செலுத்தும் ரீதியில் வார்தாக் கல்வித் திட்டம் எனப் பிரபலப்பட்டுள்ள கல்வி முறை. வார்தா கல்வி முறையின் புத்தகப் படிப்பும், ஒரு தொழிலில் ஞானமும், பயிற்சியும் ஒருங்கே இணைக்கப் பட்டிருக்கின்றன. இதனால் ஒரு மாணவன் தன்னம்பிக்கை கொண்டவனாக ஆகிறான்; சமூகத்தில் பிரயோஜனமான ஒரு பிரஜையாக மிளிர்வான். இது உன்னத லட்சியம், காரிய சாத்தியமானதுமான ஒரு திட்டமாகும். கூடுமான வரையில் நமது ராஜ்யம் பூராவிலும் ஆதாரக் கல்வி முறையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது என்ற ...ள் கையைச் சர்க்கார் ஏற்றுக் ...டனர். தற்சமயமுள்ள உபாத் இ... பயிற்சிப் பள்ளிக்கூடங்களை ச...கல்விப் பயிற்சிப் பள்ளிக் ...ளாக மாற்றி அமைப்பதற் உ...கான திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு நடந்துவருகிறது.

ஆதாரக் கல்வி முறையை அமுலுக்குக் கொண்டுவந்திருப்பதுடன் சர்க்கார் நின்றுவிடவில்லை. கல்வித் திட்டம் பூராவையுமே புதுப்பித்துள்ளார்கள்; அதே சமயத்தில் இச் சீர்திருத்தங்களைச் செய்வதில் அவசரமோ ஆத்திரமோ காட்டவும் இல்லை. மாறுதல்கள் நிதானமாகவேகொண்டு வரப்படுகின்றன. தாய் பாஷையே போதனு மொழியாக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்துக்கும் உரிய ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது. நமது மாகாணத்தில் வயது வந்தோர்களில் 184.9 லட்சம் பேர்கள் எழுத்தறிவில்லாதவர்களா யிருக்கிறார்கள்; இந்தராஜ்ய ஜனத்தொகையில் இதுபோன்றவர்கள் எண்ணிக்கை 43 சதவீதமாகும். இவ்வாறு வயது வந்தோரின் கல்வி அறிவின்மையைப் போக்கி அவர்களையும் எழுத்தறிவுள்ளவர்களாகச் செய்வதற்கான 10 வருஷத் திட்டமொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. "ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டும்" என்பதே இப்பொழுதுள்ள கோஷம். இப் மாபெரும் காரியத்தை நிறைவேற்றி வைப்பதற்காக மாணவர்கள், சமூக சேவையாளர்கள், இன்னும் உத்தியோகச் சார்பற்ற இதர ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உதவியையும் தீவிர ஒத்துழைப்பையும் அடைவதற்காகத் தீவிர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

# முதியோர்க் கல்விப் பயிற்சி

A. V. தியாகராஜ சாஸ்திரி.

சென்னை அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட முதியோர்க் கல்வித்திட்டம் கீழ்க்கண்டவற்றிக்கு இடமளிக்கிறது. (1) முதியோர்க் கல்விச் சாலைகள். (2) முதியோர்க் கல்வி வேலைக்காக சிப்பந்திகளுக்குப் பயிற்சி. (3) சமூக ஊழியர்களுக்கு பயிற்சி முகாம்கள். (4) இளைஞர்களுக்கும் தொண்டர்களுக்கும் பயிற்சி முகாம்கள். (5) சிறிது பள்ளிக்கூட அறிவுடையவர்களுக்கு உயர்தரப் படிப்பு அளிக்க கல்லூரிகள் ஆகியவைகளாம். தஞ்சை ஜில்லாவில் தற்போது சுமார் 50 முதியோர்க் கல்விச் சாலைகள் உள்ளன. அதிகமாக ஏற்படக்கூடிய சூழ்நிலையும் உள்ளது. சமூக ஊழியர்களுக்கு இதுவரை நான்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. பல்வேறுபட்ட தமிழ்நாடு ஜில்லாக்களிலிருந்து மிக்க தொகையினர் சேரவே பெண்களுக்காக ஒரு முதியோர்க் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிர்மாணிப்பு ஊழியர்கள் சந்தித்து அவரவர்கள் எண்ணங்கள், அனுபவங்கள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொண்டனர். திருக்காட்டுப் பள்ளியில் சிடிஸன்ஷிப் பயிற்சிக்காக ஒரு முகாம் நடத்தப்பட்டது. ஜில்லாபோர்டு எவ்வளவோ முதியோர்க் கல்வி வேலை செய்துள்ளது. முதியவர்கள் மிக சிரத்தையுடன் அவர்களுக்குக் காண்பிக்கப்படும் போதனைப் படங்களை ஏராளமான தொகையில் வந்து பார்க்கிறார்கள்.

முதியோர்க்கல்வி பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக சர்தார் A. வேதரத்னம் பிள்ளை வேதாரண்யத்தில் வாடகையில்லாத ஒரு வீட்டைத் தந்துள்ளார். இப்பயிற்சிகளை நடத்தும் ஆசிரியர்கள் ஒரு தலைமை உபாத்தியாயர், ஒரு உதவி உபாத்தியார், இரண்டு பாதி நேர போதகர்கள் கொண்டது. இப்பாதி நேரவேலை செய்பவர்களில் ஒருவர் பயிற்சி பெறுபவர்களை ஸ்லைடு தயாரிப்பதில் உதவி புரிவார், மற்றொருவர் பாடங்கள் போதிப்பார். ஆறுவாரங்கொண்ட ஒவ்வொரு பயிற்சிக்கும் சுமார் நாற்பது பயிற்சி பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு பயிற்சியிலும் லாபாக்கின் சீக்கிர முதியோர்க்கல்வி திட்டம், சமூகக் கல்விச்சங்கங்கள் ஏற்படுத்தும் முறைகள், பாடங்களைப் பொதுவாக போதிக்கும் முறைகள், முதியவர் இயற்கை முதலியவை சொல்லப்படுகின்றன. பயிற்சியின் நடைமுறைப்பகுதியில் படிக்கும் பேபர்கள், ஸ்லைடுகள், படங்கள், சித்திரங்கள் முதலியவை செய்யப்படுகின்றன.

படிக்கும் பாடங்கள் மகாத்மா காந்தி, தமிழ்க்கவி பாரதியார், டாக்டர் லாபாக் பண்டிட் ஜவஹர்லால் நேரு, ராமலிங்க சுவாமிகள், திருவள்ளுவர், சுபாஷ் சந்திர போஸ் முதலியவர்களின் வேலைகளைப் பற்றியும், காந்திஜீயினுடைய நிர்மாணத் திட்டம், தீண்டாமை ஒழிப்பு, கோசம்ரக்ஷணை, பெண் கல்வி, [illegible] உணவு உற்பத்தி, கிணற்றைப் [illegible]ரிக்கப்பகாத்தல், வியாதிகளை எதிர்தனிப்[illegible] முதலுதவி, ஏழ்மையின் காரண [illegible] ஒழிப்பும், பயிர் பற்றிய முறை[illegible] கரும்பு, நெல், பருத்தி உற்[illegible]ப்பு காய்ச்சுதல், பூந்தோட்டம் வைத்தல் முதலியவற்றைப் பற்றியும், திருவையாறு வேதாரண்யம் மற்றும் பயிற்சி பெறுபவர்களின் சொந்த இடங்கள் ஆகியவற்றின் முக்கியத்தைப் பற்றியும் தேசியக் கொடியின் தத்துவம், பெரிய மனிதர்களின் வாக்குகள், பழமொழிகள் ஆகியவற்றைப் பற்றியும் கூறப்படுகின்றன.

நிறைய சமூக கல்விச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு வெற்றிகரமாக நடந்துவருகின்றன. இவற்றில் வழக்கமாக இரவு 8 முதல் 11 வரை தற்கால விஷயங்களான விலைவாசிகள், மழைபற்றிய பேச்சுகளும், அவற்றைத் தொடர்ந்து ஒவ்வொருவரும் ஒருவரைப் படிக்க வையுங்கள் என்ற விஷயமும், நடைபெறும். பின்னர் படம் காண்பிக்கப்படும். ஸ்ரீ அனந்தராஜன் நயினாருடைய ஸ்வஸ்திக் புகையிலை தொழிற்சாலையின் முதியோர்க் கல்வி வேலை மிக்க வெற்றியாகும். ஏனெனில் நூற்றுக்கு மேற்பட்ட ஆண் பெண்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களானார்கள். இந்த இடத்தைப் பள்ளி பிரவிடெண்ட் ஸ்டாக் எடுத்த பிறகு நூற்றாண்டுகளாக அறியாமையில் மூழ்கிக்கிடந்த ஹரிஜனங்களுக்கும் ஒரு புது வாழ் வளிக்கக்கூடிய புரட்சி ஏற்பட்டது.

முதியோர் கல்விச்சாலைகளில் 'பள்ளிக்கூடம்' என்பதைவிட 'நிலையம்' என்பதும் 'ஆசிரியர்' என்பதைவிட 'ஊழியர்' என்பதும் பொருத்தமாக இருக்கும். முதியோர்க் கல்விச் சாலைகள் தற்சமயம் ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர்களால் நடத்தப்படு[illegible]றன. வேறுவித உபாத்தியாயர் [illegible]கப்படுவதில்லை. முதியோர்க [illegible] ஏடுபட ஆரம்பப்பள்ளி ஆசி[illegible] உ[illegible] தகுதியானவரா? என்பதும் அதிகப்படி உழைப்புக்கு அவர் சக்தியும் நேரமும் இடம் தருமா? என்பதும் அனுபவத்தில் பரீக்ஷிக்கப்படவேண்டிய கேள்விகள். முதியோர்க் கல்வி பரப்ப தகுதியானவர் கிடைக்கும்வரை ஆரம்ப ஆசிரியர்கள்தான் பொறுப்பை வகிக்கவேண்டும். முதியோர் கல்விக்காக அவர் உழைக்கிறார் என்ற புகழ்தான் அவருக்கு உண்டாகும்

முதியோர்க் கல்வி பயிற்சி பெறுபவர்கள் ஏராளமாக வேலை செய்ய வேண்டும். ஆகார வார்த்தைகள் (அரிச்சுவடி) தயாரித்தலும், படங்கள் பார்த்து படிப்பதற்கு காகிதப் படங்களும், தொடர்ச்சியான படங்களும், படிக்கும் சிறு புத்தகங்களும், பிரசாரத் தாள்களும், சுவரொட்டிகளும் ஏராளமான ஸ்லைடுகளும் தயாரித்தலும் உதாரணங்களாகும். இவ்விதம் செய்வதில் அவர்கள் எண்ணம் வலுப்படுகிறது; புது முறைகள் உற்பத்தியாகின்றன. தவிர காலை நேரங்களில் தாங்கள் படிப்பதை மாலையில் சங்கங்களில் நடைமுறையில் அனுபவப்படவும் முடிகிறது எல்லா நேரமும் சமூக சங்கங்களில் உபயோகமான விஷயங்களுக்கே செலவிடப் படுவதில்லை. அண்ணாமலை நகரில் நடத்தியது போல் பல பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இதனால் பரீக்ஷிக்கப்பட்ட அனுபவமும் பயிற்சி பெறுபவர்களுக்குக் கிடைக்கிறது. சினிமா தியேட்டர்கள், வானொலி ஆகியவை முதியோர்க்கல்வி திட்டத்தினைப் பரவச் செய்கின்றன. இனி அதிகப்பட்ட விதங்களில் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

எந்த இடங்களில் சமூகக் கல்விச் சங்கங்கள் ஏற்படுத்த முடியுமோ அந்த இடங்களில்தான் முதியோர்க் கல்வி பயிற்சி சாலைகள் ஏற்படுத்தப்

படவேண்டும். அது ஆசைப்படத் தக்கதுமட்டுமல்ல; தேவையானதுமாகும் அந்தத் தொடர்பு முதியோர்க் கல்வி வேலையை எளிதில் நடக்கச்செய்து அந்தப் பிரதேசத்தில் சமூக வளர்ச்சிக்கு உதவும் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் நோயாளி தன்னுடன் நேரே தலைமை டாக்டர் பேசி தன்னைப் பரிசோதித்தால் திருப்தி அடைவதுபோல், படிப்பு கற்றுக்கொள்ள முன் வரும் ஒவ்வொரு முதியவரும்தான் முதியோர்க்கல்வி பயிற்சிபெற்ற ஊழியரால் நேரே கற்றுத் தரப்படல்வேண்டும் வேண்டும் என்கிறார். இதனால் ஊழியருக்குச் சிலநாள் நிறைய கஷ்டமாயிருக்கும். அதை அவர் பொறுத்துக்கொள்ளவேண்டும், அவரைப்போல பல ஊழியர்கள் இவ்வேலையை முணுமுணுக்காது ஏற்றுக்கொள்ளும்வரை. எழுதப் படிக்கவும் வாசிக்கவும் வரும் முதியவர் தன்னுடைய தாழ்நிலை கருதி தயங்குவதையும் வெட்கப்படுவதையும் சமாளிப்பதைவிட தனியே ஒருவருக்கு போதிப்பதால் உண்டாகும் சிரமத்தைச் சமாளிக்கலாம்.

எல்லா காலத்துக்கும் தேவையான முதியோர்க் கல்வியும் முதியோர் படிப்பும் நமது ஜனநாயகத்தை ஸ்தாபிக்கும் அஸ்திவாரமாக இப்போது தேவை. ஜனநாயகம் வெறும் அரசியல் காரணங்களில்மட்டும் அமைக்கப்படுவது மட்டு மல்ல. காந்தி சொல்லியபடி இதற்கு நேர்மாறு நமது தேசீய வாழ்வில் வளர்ந்து பெருகும் நியாயமான ஆத்மீக சக்தியால்தான் அமைக்கப்படுவது அ[illegible] சக்தி ஜனங்களின் கல்வி யறிவுக்குத் தக்கபடிதான் வளருவது. நாம் ஒரு நல்ல ஜனநாயகம்மட்டும் ஏற்படுத்த வேண்டியவர்களல்ல; அகில உலக சமாதானத்திற்கும் நம்தேசம் உழைக்கும்படி செய்யவேண்டும். படித்த ஒவ்வொரு முதியவரும் உலக சமாதானக் கோட்டைக்கு வேண்டிய ஒவ்வொரு கல் ஆவர். ஆகவே நாம் படிப்பின்மையைப் போக்க எடுத்துள்ள இந்த யுத்தம், உலகத்தையே ஆட்டி யுத்தங்களில் ஈடுபடச்செய்து கவனிக்காது விட்டால் அணுசக்தியால் உலகத்தையே பாழ் செய்யக் கூடிய தீமையை எதிர்க்கும் யுத்தமே ஆகும். வர்ஜீனியாவின் கவர்னர் "படிப்பு அடங்காமையை உண்டாக்கிவிட்டது. அச்சு இதைஅதிகப்படுத்தி[illegible] கடவுள் இவற்றிலிருந்து காப்பா[illegible]றட்டும்" என்று சொன்னதுபோல் [illegible] மோசமான எண்ணங்களுக்கு இடமில்லை. முதியோர்க் கல்வி முதியோர் படிப்புமட்டு மல்லாது வேறு ஒன்றை நாம் குறியாய்க் கொண்டுள்ளோம். சாதாரண மனிதனுக்குச் செல்வ வாழ்க்கை, மதிப்பின் மாற்றம், மனிதரில் 3/5 பாகம் கல்வியறிவில்லாது அறியாமையில் கிடப்பதை மீட்பது ஆகியவற்றையே நாம் குறியாய்க் கொண்டிருக்கிறோம்.

---

ஸ்தல ஸ்தாபனங்களின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோர் கல்வி பள்ளிக்கூடங்களுக்கும் பண உதவி செய்ய வேண்டுமென சர்க்கார் கரு[illegible]கிறார்கள். ஏற்கனவே உள்ள விதிகளின்படி இவ்விதம் அளிக்கப்ப[illegible] ஸ்தல ஸ்தாபனங்களின் கீழுள்ள பள்ளிக்கூடங்கள் தனிப்ப[illegible] பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையும் அவற்றிற்கு ஆ[illegible]படும் பண உதவியும், அந்தந்த வருஷத்திற்கென நிர்ணயிக்கப்ப[illegible]த்து அதிகபக்ஷ எண்ணிக்கைக்கும் தொகைக்கும் மேல் போகக்கூடாது



## கவர்ன்மென்ட் ஆர்டர் 2270
## எடுகேஷன் 11—11—50.

ஆதாரக் கல்வி—ஆதார எலிமென்டரி பாடசாலைகள்—ஆதாரப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை.

உத்தரவு:—பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டைரக்டர் தெரிவித்துள்ள இந்த ஸ்திதியில், அரசாங்கம் பள்ளிக்கூட டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களுக்கு, புது ஆதாரக் கல்விப் பாடசாலைகளுக்கு உத்தரவு சாங்ஷன் செய்யவும் ஏற்கெனவேயுள்ள எலிமென்டரி பள்ளிகளை ஆதாரக் கல்வி பாடசாலைகளாக்கவும் அதிகாரம் வழங்கியுள்ளது.

அறிவிப்பு:—ஆதாரக் கல்வி தேர்ச்சிபெற்ற உபாத்தியாயர்கள் நன்கு பயன் படுத்தப்படுவதில்லையெனவும், அதனால் அவர்களில் பலர் வேலையற்றோ அல்லது ஆதாரக் கல்வி பாடசாலையல்லாதவற்றில் வேலை செய்பவர்களாகவோ கிடக்கிறார்களென்று தெரியவருகிறது. எனவே அரசாங்கம் அவர்கள் அதிகப்படி ஆதாரக் கல்வி பாடசாலைகள் ஏற்படுத்துவதன் மூலம் உபயோகிக்கப்படவேண்டும் என்று கருதுகிறது.

ஆகவே, டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் பொருத்தமான இடங்களில் பல எலிமென்டரி பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஆதாரப் பாடசாலைகளாக்க வேண்டப்படுகிறார்கள். இப்படி செய்தால் எல்லா ஆதாரக் கல்வி பயிற்சிபெற்றவர்களும் சேர்த்துக்கொள்ளப் படலாம். இவற்றில் மேற்கொண்டு இருக்கும் காலி யிடங்களுக்கு ஆதாரக் கல்வி பயிற்சி பெற்றவர்களே கூடியவரை அமர்த்தப்படவேண்டும். எனவே சம்பந்தப்பட்ட மானேஜர்கள் மனுதாரர்களை ஆதாரக் கல்வி பயிற்சிபெற விட வேண்டும் என்று சொல்லப்பட வேண்டும். இப்படி பயிற்சி பெறுபவர்கள் ரிடையர் ஆகிறவர்களுக்காகவும் புதிதாய்தோன்றும் பள்ளிகளுக்காகவும் உபயோகம் ஆவார்கள். இப்பொழுது வேலையிலிருக்கும் ஆதாரக் கல்வி பயிற்சிபெறாத உபாத்தியார்கள் ஆதாரக் கல்வி விவரங்களைத் தெரிந்துகொள்ள வசதியளிக்கப்படவேண்டும். இப்படி தாங்களாகவே முயற்சி செய்து கற்றதும் லீவ் காலங்களில் மறு பயிற்சிக்குப் போய் தேறவும் மேற்படியார்களுக்குத் தருணங்கள் அளிக்கப்படவேண்டும். இப்படிப்பட்ட மறு பயிற்சிகள் அடிக்கடி நடைபெறும்.

ஜில்லா கல்வி அதிகாரி ஆதாரக் கல்வி பயிற்சிபெற்ற உபாத்தியாயர்களுக்காக ஒவ்வொரு ஆதாரக் கல்விப் பாடசாலையிலும் தனி ரிஜிஸ்தர் வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுவார். இதில் அவர்கள் வேலை பற்றி கண்காணிக்க சௌகரியமாயிருக்கும்.

இந்த ரிஜிஸ்தர் 2 வருஷ டிரெயினிங் சென்றவர்கள் லிஸ்டும், குன்றவான காலம் பயிற்சி பெற்றவர்கள் லிஸ்டும் கொண்

டிருக்கவேண்டும். இந்த ரிஜிஸ்தர் ஆதாரக் கல்வி பயிற்சி பள்ளிக்கூடங்களுக்காக ஆண் பெண் இருபாலார்க்கும் வைத்துக் கொள்ளப்படவேண்டும்.

ஆதாரக் கல்வி பாடசாலைக தேர்ந்தெடுக்கப்பக்கப்படும் எலிமென்டரி பாடசாலைகள் கூடிய சீக்கிரத்தில் தேவையான இடம், தோட்ட வெளி, தொழில் முஸ்தீப்பு முதலிய வசதிகள் கூடியதாக செய்யப்படவேண்டும்.

இப்பொழுது ஆதாரக் கல்வி பயிற்சிபெறுபவர் பயிற்சி முடிந்ததும் எங்கு போவோமெனத் தெரியாது உள்ளனர். அவர்களுடைய பயிற்சியே முக்கியமாகவும், சீக்கிரத்தில் வேலைகிடைக்கச் செய்யும் ஜில்லா கல்வி அதிகாரிகள் ஜில்லா போர்டு பிரவிடென்டுடனும் சம்பந்தப்பட்ட மற்ற மானேஜ்மென்டுகளுடனும் தொடர்பு கொண்டு பயிற்சி முடிந்ததும் ஆசிரியர்கள் வேலை செய்யவேண்டிய பள்ளிக்கூடங்களைக் குறிப்பிட்டுவிடவேண்டும்.

வருங்காலத்தில் ஆதாரக்கல்வி பயிற்சிக்கு மனுதாரைத் தேர்ந்தெடுக்க வேறொரு முறை சொல்லப்படுகிறது. மனுதார்கள் பயிற்சிமுடிந்ததும் வேலை செய்ய வேண்டிய இடம் முதலிலேயே அட்மிஷனுக்கு முன்னால் தெரிவிக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்படவேண்டும் அங்ஙனம் செய்ய சாத்தியமற்று மனுதாரர்களுக்கு பயிற்சி முடிவதற்கு முன் 3வது பாராவில் சொல்வது போன்ற முறை பின்பற்றப் படவேண்டும்.

பெண்கள் ஆதாரக் கல்வி பயிற்சி பெறும்போது அவர்களுக்குப் பள்ளிக்கூடம் நிர்ணயிக்க ஜில்லா கல்வி அதிகாரி பெண்கள் பள்ளிக்கூட இன்ஸ்பெக்ட்ரஸ்ஸுடன் கலந்து பள்ளிக்கூடங்களைக் குறிப்பிடுவார்.

ஜில்லா கல்வி அதிகாரி எலிமென்டரி பாடசாலைகளை ஆதாரக் கல்வி பாடசாலைகளாக்கவும் புது ஆதாரக் கல்வி பாடசாலைகள் உண்டாக்கவும், தீர்மானத்தை டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் சம்மதத்திற்காக அனுப்புமாறு வேண்டிக்கொள்ளப்படுவார்.

---

## வாழ்க்கையும் மனோதத்துவமும்

ஆசிரியர்: முல்லை முத்தையா.

கிடைக்குமிடம்:—ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் சென்னை.

மனோதத்துவம் என்ன என்பதைத் தெளிவாக அறியாத வகையில் இக்காலத்தியக் கல்வி போதிக்கப்படுகிறது. வாழ்க்கையின் இன்றியமையாத வளர்ச்சிக்கு மனோதத்துவம் ஒரு தூண்டுகோல் என்பதை உணர்ந்து மக்கள் மனோதத்துவ நிலையை அடைதல்வேண்டும். இதற்குத் திரு முல்லை முத்தையா அவர்கள் எழுதியுள்ள "வாழ்க்கையும் மனோதத்துவமும்'. என்ற இச்சிறு நூல் பெரிதும் பயன்படும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை' எனவே முத்தையா அவர்களின் முயற்சிக்கு—இந்நூலிற்கு—மக்களின் மகத்தான ஆதரவு கிடைக்குமென்றும், இதனை அனைவரும் பயன் படுத்துவார்கள் என்றும் நம்புகிறோம்.



# எடுகேஷனல் டிபார்ட்மெண்ட்

## சர்க்கார் (G. O.) உத்தரவுகள்

### ஆரம்பப் பாடசாலைகளை அங்கீகாரம் செய்வதுபற்றியும் உதவி செய்வதுபற்றியும் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் திருத்தம்.

**G. O. Ms. No. 2691, எடுகேஷன் 26 செப்டம்பர் 1950.**

21-8-50ந் தேதிய எடுகேஷன் டிபார்ட்மெண்ட்நோடீஸ் 243உடன் 29-8-50 தேதி போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் 1-பி பிரிவில் 556–568 பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட, ஆரம்பப்பாடசாலைகளை அங்கீகாரம் செய்வதுபற்றியும் உதவி செய்வதுபற்றியும் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்குக் கீழ்க்கண்ட திருத்தம் செய்யப்படவேண்டும்.

### திருத்தம்

அதிகாரம் 1. அங்கீகாரம் செய்வதற்கான சட்டங்கள்:—

விதி 12-A—கீழ்க்கண்டதை விதி 12-A வாக சேர்த்துக்கொள்ளுக.

"தனி மானேஜ்மெண்டின் நிர்வா ...க்தின் கீழுள்ள ஆரம்பப் பாட ...லயின் மானேஜர் படித்தவராக ... கல்வி முன்னேற்றத்தில் போ ... அக்கறை கொண்டவராயும் ...ந்தல்வேண்டும்; அவர் பெருங் ...ளியாக இல்லாமல் (அதாவது ...வாய்வென்டாக இல்லாமல்) ...தல்வேண்டும்; அவர் சர்க்கா ...முழுநேர ஊழியராக இருக்கக் ...து; பள்ளிக்கூடம் எந்தத் தாலு ...் இருக்கிறதோ அந்தத் தாலு ...லேயே மானேஜரும் வசிக்க ...டும்.

...ஆல் சென்னை நகரத்தில் ஜில்லா ...வி அதிகாரியும் மற்ற ஜில் ...க்களில் டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களும் மேற்கண்ட எல்லா விதிகளுக்குமோ அல்லது எதாவதொன்றுக்கோ எந்த மானேஜருக்காவது 1 வருஷம்வரை விதிவிலக்கு அளிக்கலாம்.

குறிப்பு:—இந்த விதி 1951 எப்பிரல் 1-ந்தேதி முதல் அமுலுக்கு வரும்.

ஆரம்பப் பள்ளிகளை அங்கீகாரம் செய்வதுபற்றியும் உதவி செய்வது பற்றியும் உள்ள சட்டங்களுக்குத் திருத்தங்கள். 4-10-50.

1. விதி 22க்குப் பதில் கீழ்க்கண்டதைக் கொள்க.

"22. கிராண்ட் வழங்கல்—கீழ்க்கண்ட நிரல்படி டீச்சிங் கிராண்டும் பஞ்சப்படியும் பள்ளிக்கூடங்களுக்கு மாதா மாதம் கொடுக்கப்படும். பிப்ரவரியில் டீச்சிங் கிராண்டுடன் வருஷாவருஷம் நிர்வாக கிராண்ட் (Maintenance Grant) தரப்படும்.

மாத முடிவில் மானேஜ்மெண்டார் மாத வரவு பற்று சமர்ப்பிக்க வேண்டும். இதை மறுமாத 10-ந் தேதிக்குள் டெபுடி இன்ஸ்பெக்டரிடம் தரவேண்டும். இதை அவர் 20-ந் தேதிக்குள் ஜில்லா கல்வி அதிகாரியிடம் சமர்ப்பிப்பார். இதைப் பார்வையிட்டு அவர் மறுமாத 5-ந் தேதிக்குள் கிராண்ட் தர அனுமதிப்பார். கிராண்ட் பில் அவரால் தயாரிக்கப்படும். அனுபந்தம் 9ல் கண்டவாறு.

சென்னை நகரில் பில்கள் மூலமாக கிராண்ட் வழங்கப்படும். மற்ற ஜில்லாக்களில் மணியார்டர் மூலமும் அனுப்பப்படும்.

பில்களையும் மணியார்டர்களையும் அனுப்பக் கமிஷன் மேனேஜ்மெண்டார் மேற்கொள்ளவேண்டும். அவர்கள் அதை உபாத்தியாயர்களிடமிருந்து வசூலிக்கக்கூடும்.

பல மாதங்களில் கிராண்ட் அளிப்பு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

ஜனவரி—கணக்கு பார்க்குங் காலம்.

பிப்ரவரி—நவம்பர், டிசம்பர் டீச்சிங் கிராண்டும், நிர்வாகக் கிராண்டும் (Maintenance Grant.)

மார்ச்—ஜனவரி கிராண்ட்பாக்கி.

எப்ரல்—பிப்ரவரி கிராண்ட் பாக்கி.

மே—மார்ச் கிராண்ட் பாக்கி

ஜூன்—எப்ரல் கிராண்ட் பாக்கி.

ஜூலை—மே கிராண்ட் பாக்கி.

ஆகஸ்ட்—ஜூன் கிராண்ட் பாக்கி

செப்டம்பர்—ஜூலை கிராண்ட் பாக்கி.

அக்டோபர்—ஆகஸ்ட் கிராண்ட் பாக்கி.

நவம்பர்—செப்டம்பர் கிராண்ட் பாக்கி.

டிசம்பர்—அக்டோபர் கிராண்ட் பாக்கி.

சென்னை அக். 13—சர்க்கார் உதவிபெற்று நடந்துவரும் கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம்பற்றி கல்வி மந்திரி ஸ்ரீ கே. மாதவமேனன் இன்று சென்னை மேல் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது : அம்மாதிரி கல்லூரி ஆசிரியர்களின் சம்பளம், சர்வீஸ் நிலைமைகள் ஆகிய விஷயத்தைச் சர்வகலாசாலைகள் கவனிக்கின்றன. சென்னை சர்வகலாசாலைக்கு உட்பட்டிருக்கும் பல்வேறு கல்லூரிகள் சர்வகலாசாலைக் கமிஷன் செய்த சிபார்சுப்படியே ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கிவருகின்றன. ஆந்திரா சர்வகலாசாலைக்குட்பட்ட கல்லூரிகளிலும் அதேபோல் நடவடிக்கை எடுத்திருக்கும் என சர்க்கார் நம்புகிறது.

சர்க்கார் உதவிபெறும் கல்வி நிலையங்கள் சர்க்கார் விகிதப்படி சிப்பந்திகளுக்குக் கிராக்கிப்படி வழங்காதிருந்தால் சம்பந்தப்பட்ட கல்வி நிலையத்தின் நிதிநிலையைக் கண்டறிய கல்வி டைரக்டருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சர்க்கார் விகிதப்படி கிராக்கிப்படி வழங்க சம்பந்தப்பட்ட கல்வி நிலயத்திற்குச் சக்தி உண்டு எனத் தெரியவரின், அவ்விகிதப்படி வழங்குமாறு கல்வி டைரக்டர் உத்தரவிடலாம். அதற்குப் பிறகும் அவ்விதம் வழங்காவிடில் சம்பந்தப்பட்ட கல்வி நிலையத்தின் கிராண்ட் தொகையைக் கல்வி டைரக்டர் வழங்காதிருக்கலாம். கிராக்கிப்படி வழங்குவதற்கு அந்த நடவடிக்கை போதுமானது என்றே சர்க்கார் கருதுகிறது.

## பிரைவேட் அபேக்ஷகர்கள் மனுப்போடுவதற்கான கேடு

1951 ம் வருஷம் ஏப்ரல் மா வாரத்தில் 8-வது வகுப்பைப் பூர்த்தி செய்கிறவர்களுக்கான பரீக்ஷைக்கு ஆஜராக விரும்பும் பிரைவேட் அபேக்ஷகர்கள் 30-11-50 க்குள் கவர்ன்மெண்ட் பரீக்ஷை ஆபீஸுக்குத் தங்களது மனுக்களை அனுப்ப வேண்டும்.

எக்காரணத்தை முன்னிட்டும் கெடு ஒத்தி வைக்கப்பட மாட்டா 1942-ம் வருஷத்திற்கு முன்பு வழங்கப்பட்ட ஈ. எஸ். எல். ஸி. சர்டிபிகேட் உடையவர்களும் சர்க்கார் ட்ரெயினிங் கோர்ஸ் பெற்ற ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் மூலமாக ஒரு முறை பரீக்ஷைக்கு ஆஜரானவர்களும் 2 ரூ. பரீக்ஷைக்கட்டணம் செலுத்த வேண்டும். மற்றவர்கள் 4 ரூ. பரீக்ஷைக் கட்டணமாகச் செலுத்தவேண்டும். ஆங்கிலத்திற்கு மட்டும் போகிறவர்கள் 0-8-0 கட்டவேண்டும். இக் கட்டணம் வேறெதற்கும் மாற்றப்படமாட்டாது. மனுபாரம் டெபுடி இன்ஸ்பெக்டர்களிடமிருந்துபெற்று செக்ரடரி, கவர்ன்மெண்ட் பரீக்ஷை கமிஷனர் ஆபீஸ், கதீட்ரல் P. O. சென்னைக்கு அனுப்பவேண்டும். 1951 பிப்ரவரியில் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பரீட்சையின் கால அட்டவணை பிரசுரிக்கப்படும்.

## மதராஸ் எடுகேஷனல் ரூல்ஸ்

மதராஸ் எடுகேஷனல் ரூல்ஸில் 154 விதிக்குப் பதிலாக கீழ்க்கண்டதை வைத்துக்கொள்ள வேண்டும்.

"154—ஜில்லா கல்வி அதிகாரியின் வசத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் வேலையாயிருக்கும் ஆசிரியர்களுடைய சர்டிபிகேட்டுகளில் கல்லூரி சம்பந்தமானது தவிர மற்ற எல்லா கிரேடுகளும் டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களால் எப்பொழுது வேண்டுமானாலும் தகுதியற்றதாக்கப்படலாம். (Suspended) கீழ்க்கண்டவற்றிக்காக. உபாத்தியாயர்களுடைய நடத்தையோ, குணமோ மோசமென்று காண்பிக்கப்படுதல்; நாசவேலைகளில் உபாத்தியாயர்கள் கலந்து கொள்வதோ, ஈடுபடுவதோ, உழைப்பதோ நிரூபிக்கப்படுதல், உபாத்தியார் அவருடைய கடமைகளில் அலக்ஷியமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்படுதல்.

இதேகாரணங்களுக்காக எந்த கிரேட் சர்டிபிகேட்டையும் டைரக்டர் தள்ளிவைக்கவோ ரத்துசெய்யவோ கூடும்.

இம்மாதிரியாகத் தள்ளிவைப்பதோ ரத்து செய்வதோ, கோர்ட் மூலம் உபாத்தியாயரைக் குற்றஞ் சாட்டியும், டிவிஷனல் இன்ஸ்பெக்டர், டைரக்டர் அல்லது அவர்களுக்கான மற்றவர்கள் விஷயத்தை உபாத்தியாயருக்குத் தெரிவித்த பிறகும்தான் செய்ய உத்தரவிடலாம்.

(G. O. Ms. 2737, எடுகேஷன் 3 அக்டோபர் 50) மதருஸ் எடுகேஷனல் ரூல்ஸ்களில் 13-வது விதியின் 5 வது பாராவிற்குப்பதில் பின்வருவதைக் கொள்க.

"5—மதருஸ் யூனிவர்சிடியில் இந்திய சங்கீதத்தில் டிப்ளமாவோ அல்லது அண்ணமலை யூனிவர்சிடியின் சங்கீதபூஷண மென்னும் பட்டமோ அல்லது மதருஸ் யூனிவர்சிடி, மூன்றாவது பிரிவில் இந்திய சங்கீதம் கொண்ட B. A., டிக்ரி கோர்ஸ் பட்டமோ அல்லது மதருஸ் யூனிவர்சிடியின் சங்கீத சிரோன்மணி என்ற பட்டமோ இருப்பதோடுகூட எந்தகிரேட்உபாத்தியாயர் சர்டிபிகேட்டோ அல்லது ஹையர் கிரேட் டெக்னிகல் சர்டிபிகேட்டோ இருப்பது தேர்ந்தெடுக்கத்தக்கதாகும். S. S. L. C. முடித்தவரானால், அபேக்ஷகர் கவர்ன்மெண்ட் பரீக்ஷைக்காக கமிஷனாது செக்ரடரி வழங்கும் இந்திய சங்கீத சர்டிபிகேட்டு வைத்திருந்தாலும் சங்கீத உபாத்தியாயர் வேலைக்குத் தகுதியாவார்.

## ஆங்கிலோ இந்திய பள்ளிகள் ஒழுங்கு சட்டத்திற்குத் திருத்தங்கள்.

1. ஆர்டிகிள் 99—இவ்விதியில் முதல் வாக்கியத்தில் உள்ள "பழைய F. A. முடித்தவர்களும், மதருஸ் பிரஸிடென்ஸியில் தற்போது இன்டர் மீடியட் முடித்தவர்களும், கேம்

பிரிட்ஜ் ஹைஸ்கூல் சர்டிபிகேட் பரீக்ஷை தேறியவர்களும் 1 வருஷ பயிற்சி (Training) அடைந்தால் போதும்'' என்ற வார்த்தைகள் நீக்கப்படவேண்டும்.

2. ரூல் 115- இந்த விதியில் முதல் வாக்கியத்தில்வரும் ''முதல் கிளாஸில் 70 சதவீதமும், இரண்டாவது கிளாஸில் 55 சதவீதமும்'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக ''முதல் கிளாஸில் 60 சதவீதமும் இரண்டாவது கிளாஸில் 50 சதவீதமும்'' என்று சேர்க்கவேண்டும்.

(G. O. Ms. No. 2792 எடுகேஷன் அக்டோபர் 50) இதில் ஆர்டிகிள் 69ன் கடைசி வாக்கியம் அடிக்கப்படவேண்டும்.

## லோயர்கிரேட் ஆசிரியர்கள் ஹையர்கிரேட் பரீட்சைக்குப் போகலாம்.

### டைரக்டர் சுற்றறிக்கை.

R. C. No. 499. 1-9-50.

லோயர் கிரேட் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் போதனா முறைப்பாடசாலையில் சேர்ந்து வாசிக்காமலே, நேரடியாக 1951, 1952 மார்ச்சு மாதங்களில் நடைபெறவிருக்கும் ஹையர் கிரேட் பரீட்சைக்கு எழுதலாம். அதற்குச் செலுத்தவேண்டிய கட்டணம் ரூ. 6 10-11-50 க்குள் கட்டவேண்டும். அப்படித் தவறினால் பெனலிடித் தொகையோடு 25-11-50 க்குள் கட்டவேண்டும். தற்போது ஹையர்கிரேட் பரீக்ஷைக்குத் திருத்தி யமைக்கப்பட்ட பாடத்திட்டப்படி பாடங்களில் கேள்விகள் கேட்கப்படும்.

## ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு கிராண்டு உயர்வு.

G. O. No. 2478. 2-9-50.

மேற்குறித்த உத்தரவில் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு 25—½—30 ஆக கிரேட் ஏற்பாடுசெய்து, 25 ரூபாயோடு மானேஜ்மெண்டார் ரூ. 5 சேர்த்து ரூ, 30 ஆக ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கும் படி குறிப்பிட்டிருந்தது. ஆனால் நடைமுறையில் மானேஜ்மெண்டுகள் ஆசிரியர்களுக்கு ரூ. 30 மாதம் கொடுக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக அரசாங்கத்தாரையே ரூ. 5 அதிகப்படுத்திக் கொடுக்கும்படி பல தூதுகோஷ்டிகளின் மூலம் வற்புறுத்தினர்.

அரசாங்கத்தார் அவைகளைப் பரிசீலனை செய்து துண்டுவிழும் ரூ. 5 முழுத்தொகையும் அரசாங்கத்தில் பணம் இல்லாத காரணத்தால் கொடுக்க வசதி யில்லையென்றும், ரூ. 2 மட்டும் உயர்த்தி 27—½—30 ஆக கிராண்டு 1-4-50 முதல் உயர்த்திக் கொடுப்பதாக உத்தரவிட்டுள்ளனர். பாக்கித் தொகை ரூ. 3 மானேஜ்மெண்டுகளே கொடுக்கும்படி வற்புறுத்தப்படுகின்றனர்.

பள்ளிக்கூட வயது G. O. No. 2097 எடுகேஷன் 21-7-50

செக்ஷன் 3 (xii) பள்ளிக்கூட வயது என்ற தலைப்பிலுள்ள சட்டங்களில் கீழ்க்கண்ட விதி சேர்க்கப்படவேண்டும்.

''பள்ளிக்கூட வயது'' என்றால் ஒரு பெண் அல்லது பையன் ஆறு வயது முதல் ஆரம்பக் கல்வியை ஐந்தாவது உள்பட முடிக்கும் வரை ஆகும் வயது, அல்லது பெண் அல்லது ஆணுக்கு 12 வயது ஆகும்வரை என்பதாம். டைரக்டர் சென்னை அரசாங்க உத்தரவுடன் எந்த ஜாதி பெண் அல்லது பிள்ளைக்காவது உத்திரவிடினும் இச்சட்டம் அமுலுக்கு வரும்.

ஆகஸ்ட் 1உ 1945 முதல் எந்த ஜில்லா போர்டாவது கட்டாய ஆரம்பக் கல்வி வைத்திருந்தால் அல்லது வயது 14 என்று நிர்ணயம் செய்து இருந்தாலும் இச்சட்டம் அமுலுக்கு வரும்.



# இந்தியாவும் ஆரம்பக் கல்வியும்

By
V. C. Ka[illegible]ppan, Vice President, Tamil Nad Ele- Teacher's Federation.

இந்தியா:—இந்தியாவில் சுமார் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களும், விவசாயமும் மிகுந்த நாட்டில் கிராமப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு கிராம முன்னேற்றம் அவசியம். தேசத்தின் ஜீவநாடி கிராமங்கள்தான்.

வாழ்க்கைத்தரம்:—மூன்று பிரிவுகளையுடையது. (உணவு, உடை, வீடு).

1. வாழ்க்கையின் கஷ்டங்களையும், குறைகளையும் தீர்க்கக்கூடியவை.

2. வாழ்க்கையின் பெருமையையும், இன்பத்தையும், பெருக்கக்கூடிய வசதிகள்.

3. விஞ்ஞான ஆராய்ச்சிக் கலைகள், விநோத விளையாட்டுகள், உல்லாசப் பொருள்கள்.

இந்தியாவில் நூற்றுக்கு ஒருவனுக்கு 3 வசதிகளும், 10ல் ஒருவனுக்கு சுகாதாரம், கல்வி, வைத்தியம் இவை கிடைக்கின்றன

கல்விச் செலவு:—இதர நாடுகளில் ஒரு பையனுக்கு வருடத்திய சராசரி கல்விச் செலவு 33%ம் இந்தியாவில் 0-8-9ம் செலவழிக்கப்படுகிறது.

25 வருடங்களுக்கு முன் ரஷ்யாவில் 100க்கு 4 பேர்தான் படித்தவர்கள். இப்பொழுது 100க்கு 96 பேர் படித்தவர்களா யிருக்கிறார்கள். ஜப்பானில் 8 வயதிலேயே ராணுவப் பயிற்சித் திட்டம் அளிக்கப்படுகிறது. ஆகையால் அங்கு படித்தவர்கள் 100க்கு 99.6 பேர். இந்தியாவில் கிராமவாசிகளின் தொகை 82% விவசாயம் செய்பவர்கள். விவசாய நாட்டில் மக்கள் நன்றாகவும், அமைதியாகவும், இன்பமாகவும் இருக்கவும், சாந்தி நிலவவும், ஜனநாயகம் வெற்றிபெறவும் யாவரும் ஆரம்பக் கல்வியாவது கட்டாயமாய்க் கற்று, மற்ற நாடுகளுடன் சரிநிகர் சமானமாக வாழவேண்டிய தவசியம்.

தற்காலக் கல்வி:—கல்வி போதனை விஷயமாக இந்தியாவில் இப்போதைய முறை மாறியாக வேண்டும்.

1. இந்திய மக்களின் வாழ்க்கை நலத்துக்கு ஒவ்வாததாகவும் மிகவும் குறுகிய நோக்கத்துடனும் அமைக்கப்பட்டிருக்கிறது.

2. ஒவ்வாத படிப்பை ஏற்றுக் கொண்டிருப்பதால் ஏழைகளாயிருக்கிறார்கள்.

3. ஆரம்பக் கல்வியே எவ்வகைக் கல்விக்கும் அஸ்திவாரமானது அது பலமில்லையாயின் யாவும் பிரயோஜனப்படாது.

4. உலகில் வருங்காலம் நன்கு கல்வி அறிவு பெற்றவர்களையே பொறுத்திருக்கிறது. கல்வி லட்சியங்கள் இந்தியாவில் அடியோடு மாறி, பிரிட்டனில் இருப்பதுபோல் ஆரம்பக் கல்வி சிலாக்கியமாக்கப்படவேண்டும். இந்தியா போன்ற நாட்டைப் பிரிட்டனுடன் ஒப்பிடாமல் காந்திஜி வகுத்த திட்டப்படி ஆதாரக் கல்வியைப் பரப்பவேண்டும்.

மானேஜ்மெண்டுகளின் கீழ் விடாமல் யாவருக்கும் கட்டாயக் கல்வி கிடைக்கும்படிக்கும், தர்ம ஸ்தாபனங்கள் கையில் விடாமலும் ஆரம்ப, ஆதார, அடிப்படைக் கல்வியைமட்டும் சர்க்கார் நேர் பார்வையில் எடுத்து நடத்தவேண்டும். கல்வி அபிவிருத்திக்கென்று பிரத்தியேக

மான கல்வி போர்டுகளை ஒவ்வொரு ஜில்லாவுக்கும் சட்ட பூர்வமாக நிறுவி அவற்றிடம் கல்வி நிர்வாகத்தை ஒப்படைக்கவேண்டும். ஆசிரியர்களில் அநுபவமும் திறமையுமுள்ளவர்களைப் போர்டுகளில் அங்கத்தினர்களாக நியமனம் செய்ய வேண்டும்.

புதிய அரசியல் திட்டப்படி ஆசிரியர்களுக்கென ஒதுக்கியிருக்கும் ஆறு ஸ்தானங்களில் கிராமப் பள்ளிக்கூட ஆரம்பாசிரியர்களில் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் வேண்டும்.

மானேஜ்மெண்டு குறைகள்:— கல்வி விஷயத்தில் பொதுஜனக் கிளர்ச்சியில்லை. காரணம்—படிப்பில்லை. 100க்கு 12 பேர்தான் படித்தவர்கள். ஆகையால் முதியோர்க் கல்வி துரிதமாகவும் கட்டாயமாகவும் பரப்பவேண்டும். படியாதவர்களிடைப் பிரசாரம் பலிக்கவில்லை. சங்கங்களும் நடைபெறவில்லை. சம்பளக் குறை, இடவசதிக் குறை, செலவு செய்ய சக்தியில்லாமை போன்றவைகள் ஏற்படுகின்றன. பாடசாலை அபிவிருத்தி விஷயத்தில் அநேகமாய் உபாத்தியாயர்கள் பொறுப்பிலே விட்டுவிட்டு சும்மா கையொப்பம் போடத்தானிருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் அல்லல்:—உபாத்திமைத் தொழில் புனிதமானது. ஜனங்களுக்கு அத்தியாவசியமானது. ஆதிகாலத்தில் ஜனங்களால் கௌரவமாக மதிக்கப்பட்டது. தற்காலத்தில் மற்ற இலாக்கா சிப்பந்திகளைப் போலல்லாமல் வித்தியாசப்படுத்தப் படுகிறது. ஆசிரியர்கள் கௌரவம் அவரவர்களின் மானேஜ்மெண்டு, சம்பளம் இவைகளைப் பொறுத்திருக்கிறது.

மக்களின் படிப்பை அபிவிருத்தி செய்யவும், கால் கடுக்க நின்று, நெஞ்சு வலிக்கத் தொண்டை புண்ணாகும்படி கத்தியும், கடைசியில் கண்ட பலன் ஒன்றுமில்லையே யென்று ஏங்கவேண்டியிருக்கிறது.

(Teacher's profession is the noblest of the professions but the sorriest of all the trades).

ஆரம்ப, ஆதார, அடிப்படைக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்கள் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட முடியாத ஊதியங்களைப் பெற்று அல்லலுறுகின்றனர். இங்ஙனமிருப்பின் நாட்டின் முன்னேற்றம் எங்ஙனம் சீர்ப்படும்? ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவேண்டும். கல்வி போதனை இந்தியாவில் முக்கியமான சேவைகளிலொன்று. ஆனால் இந்த வேலை மிகவும் குறைந்த சம்பளம் பெறும் வேலைகளில் ஒன்றாயிருக்கிறது.

ஆசிரியர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் குறைந்த சம்பளத்தில் குடும்பத்தைச் சுவரட்சணை செய்ய முடியாமல் சிரமப்படுகிறார்கள். மேலும் ஆசிரியர்கள் உயிர் உடலில் ஒட்டிக் கொண்டிருக்க பகல் முழுதும் வேலை செய்யவேண்டியிருக்கிறது. சில ஆசிரியர் குடும்பங்கள் எப்பொழுதும் அரைப்பட்டினியே கிடக்கிறார்கள்.

உதாரணமாக:—சில நாட்களுக்கு முன் பம்பாய் மாகாணத்தில் வேலை நிறுத்தம் செய்தார்கள். எத்தனையோ பேர் தற்கொலை செய்துகொண்டார்கள். சிலருக்குப் பைத்தியம் பிடித்தது. சிலர் வகுப்பிலேயே இறந்தார்கள்.

"அன்னமயம் பிராணமயம்"

ஆகார வசதிகள் குறைகள் ஏற்பட்டால் சுகத்துடனிருக்க முடியாது. அன்ன விசாரமே பெரிய விசாரமாயிருக்கையில் லட்சியம் ஒருபுறமிருக்க, வாழ்க்கையில் பற்றுதல், வேலையில் பற்றுதல் எப்படி



# ஆரம்ப ஆசிரியர் சம்பளப் பிரச்னை

என். எஸ். வெங்கடேஸ்வரன், காரியதரிசி.
தாலூகா உதவிபெறும் ஆரம்ப ஆசிரியர் யூனியன், மன்னார்குடி, தஞ்சை ஜில்லா.

உதவி பெறும் ஆரம்பப் பாடசாலைகளில் வேலை செய்யும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு மாதாந்திர மான்யத்தில் இரண்டு ரூபாய் உயர்த்தியிருப்பதாகத் தெரிகிறது. அதாவது 25-$\frac{1}{2}$-30 லிருந்து 27-$\frac{1}{2}$-30 ஆகத்திருத்தி அமைத்திருக்கிறார்கள். இவ்விதம் 1950 எப்ரல் மாதம் முதல் அமுலுக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குக் குறைந்தது ஆரம்பச் சம்பளம் முப்பது ரூபாயாவது கிடைக்கவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு திருத்தி அமைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. சர்க்கார் கொடுக்கும் ஆரம்ப மான்யமாகிய 27 ரூபாயுடன் மானேஜ்மெண்டில் மூன்று ரூபாய் சேர்த்து ரூ. 30

---

ஏற்பட முடியும்? சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுத வேண்டும். வயிறு நிரம்பினால்தான் கை வேலை செய்யும். மூளை உழைக்கும். எல்லா ஆசிரியர்களுக்கும் வாழ்க்கைக்குத் தக்க ஊதியம் கிடைக்கின்றனவா என்று கவனிக்கப்படவேண்டும். இல்லாவிடில் வறுமையுடனும், பட்டினியுடனும், உற்சாகத்துடன் சிறு பாலர்களுக்குச் சிறந்தமுறையில் கல்வி பயிற்றுவிப்பது மிகக் கடினமான வேலையாகும். கவலைகொண்ட ஆசிரியர்களைச் சிறு பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கச் சொல்வதனால் அப்பிள்ளைகளுக்குப் பெருந் தீங்கிழைத்தவர்களாகிறார்கள். எனவே வறுமையற்றிருப்பது ஆசிரியரின் முதல் கடமையாகும்.

பெண் கல்வி குறைந்த நாட்டில் ஆசிரியர்களின் மனைவிமார்கள் படித்தவர்களென்றும், அவர்களும் சம்பாதிக்கிறார்களென்றும் பம்பாய்க் கமிட்டி ஒரு சமயம் கூறியிருப்பது ஆச்சரியத்தை அளித்தது.

ஆசிரியர் தொழில் எந்த நாகரீக சமூகத்தின் நன் மதிப்புக்குப் பாத்திரமாகவேண்டுமானால் அத்தொழிலின் தரம் உயர்த்தப்படவேண்டும். அதாவது சம்பளம், அந்தஸ்து உயர்த்தப்படவேண்டும். முன் கனம் மாஜி கல்வி மந்திரியவர்களின் கேள்வித்தாளில் சம்பளத்தைப்பற்றிய பிரச்னையையே காணாதது வருந்தத்தக்க விஷயமாகும்.

1. வறுமையும், தங்கள் தொழில் முறையில் பிறருடைய இடைஞ்சலுமில்லாமலிருக்க ஆசியர்களின் உரிமையைப் பொதுஜனங்கள் அங்கீகரிக்கவேண்டும்.

2. ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியம் தேவை.

3. ஆசிரியர்களுக்குப் பலர் எதைக் கற்பிக்கவேண்டுமென்றும், எம்மாதிரி கற்பிக்கவேண்டுமென்றும் முன்வருவது தடுக்கப்படவேண்டும்.

4 ஜாதி, மதம், அரசியல், கட்சி வித்தியாசங்கள் ஏற்படாவண்ணம் பாலர் சேவைமட்டும் அமைய வேண்டும்.

மேற்கண்டவை அரசாங்கத்தாரால் கவனிக்கப்பட்டால் ஆசிரியர்கள் சிறந்த முறையில் ஊக்கமாக வேலை செய்து ஆதாரக் கல்வியை யாவரும் அடையப் பாடுபடுவார்கள். நாடு முன்னேற்றமடையும்.

ஆக ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று உத்திரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

மத்தியச் சம்பளக் கமிஷன் சிபார்சுப்படி எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதம் ஏற்படுத்தவேண்டும் என்று பல மாகாண ஆசிரியர்கள் மகாநாடுகளிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உடனடியாக உதவிபெறும் ஆரம்பப் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் எல்லோருக்கும் மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதமாவது உயர்த்தவேண்டும் என்று சர்க்காரிடம் பலமுறை பல யாதாஸ்துகள் ஆசிரியர் சங்கத் தூது கோஷ்டி சமர்ப்பித்து வற்புறுத்தியிருக்கின்றது.

உதவிபெறும் ஆரம்பப் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு: செகண்டரி கிரேடு 6000; ஹையர் கிரேடு 46000; லோயர் கிரேடு 3000. மொத்தம் 55,000 ஆசிரியர்களுக்கும் மாதம் ஐந்து ரூபாய் வீதம் உயர்த்தினால் அதிகப்படியாகும் வருடாந்திர மொத்தச் செலவு 33,00,000. ரூபாயேயாகும். கல்விச்செலவுக்காகச்சர்க்கார் ஒதுக்கியிருக்கும் மொத்தத்தொகையில் இது ஒரு சிறு பகுதியேயாகும். ஆகையால் இம் மிதமான கோரிக்கையையாவது சர்க்கார் ஏற்றுக்கொள்ளாமல் ஹையர்கிரேடு ஆசிரியர்கட்கு மட்டும் இரண்டு ரூபாய் மான்யம் உயர்த்தியிருப்பது நியாயமல்ல என்பதோடு ஆசிரியர்களின் நிலைமையையும் எவ்விதத்திலும் உயர்த்திவிடாது. ஆகையால் எல்லா கிரேடு ஆசிரியர்கட்கும் மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் உடனடியாக உயர்த்திக் குறைந்த சம்பளம் வாங்கும் ஏழை ஆரம்ப ஆசிரியர்களுக்கு உதவிபுரிவதும் சர்க்காரின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டிருப்பதால் விலைவாசி கிராக்கிப்படியும் சர்க்கார் உடனடியாக உயர்த்தவேண்டும். ஆரம்பக் கல்வி முன்னேற்ற மடையவேண்டுமென்று ஜனநாயக சர்க்கார் உண்மையாக விரும்பினால் வறுமையாலும் பொருளாதாரக் கஷ்டத்தாலும் அரைவயிற்று உணவுக்கும் அல்லல்பட்டுக் கடன் தொல்லையால் வாடும் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் காலக்ஷேபத்திற்குப் போதுமான குறைந்தபக்ஷ சம்பளமும், இதர வசதிகளும் அளிக்கப்படவேண்டும். பிற்காலச் செல்வங்களாகிய குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்கும், சீரிய ஒழுக்கத்திற்கும் ஆசிரியர்களே அடிப்படை என்பதை எவரே மறுக்க வல்லார்? ஆகையால் தேச முன்னேற்றத்தைக் கருதியாவது 90 சதவிகிதம் மக்கள் அறியாமைப் பேயிலிருந்து விடுதலை யடைவதற்கு மக்கள் சர்க்கார் இக்கடமையைச் செய்வார்களென்று நம்புகிறேன். சர்க்காரின் நிதிநிலைமை இக்குறைந்த பக்ஷத் தொகையைக்கூட உயர்த்துவதற்கு இடம்தரவில்லை யென்பது நியாயமல்ல என்பதோடு ஒப்புக்கொள்ளக்கூடியதுமன்று. எல்லாப் பத்திரிகைகளும் (ஹிந்து, சுதேசமித்திரன் முதலியன) ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்னும் கோரிக்கையை ஆதரித்து வற்புறுத்தி எழுதி வருவதை இங்கு ஞாபகப்படுத்துகிறேன். சென்னைச் சட்ட சபையிலும் பல அங்கத்தினர்கள் குறைந்தது ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியருக்கும் ஐந்து ரூபாய் வீதமாவது உயர்த்தவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு இருந்தும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு மட்டும் இரண்டு ரூபாய் மான்யம் உயர்த்தி நிர்வாகிகள் மூன்று ரூபாய் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று உத்திரவு பிறப்பித்ததின் நோக்கம் விளங்கவில்லை.



1950ம் ஆண்டு ஏப்ரல்௴ முதல் புதியதாக வேலையில் நியமிக்கப்பட்ட ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு அம்மாதம் முதல் 27 ரூபாய் வீதம் மான்யம் இப்புது உத்தரவின்மூலம் கணக்கிடப்படும். 1947ம் வருஷம் ஜனவரிமாதம் முதல் ஹையர்கிரேடு ஆசிரியர்களுக்கு 25 ரூபாய் வீதம் மான்யம் கணக்கிடப்படுகிறது. 1947௵ ஜனவரி௴ முதல் தொடர்ச்சியாக வேலை செய்யும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு 1950௵ ஜனவரி௴ முதல் (ஆண்டு ஒன்றுக்கு அரை ரூபாய் உயர்வு வீதம் மூன்று ஆண்டிற்கு 1½ ரூபாய்) 26½ ரூபாய் மான்யம் கணக்கிடப்படுகிறது. இவர்களுக்கு 1950௵ ஏப்ரல்௴ முதல் (26½ ரூபாய்—2 ரூபாய்)—28½ரூபாயாக இவ்வுத்திரவுப்படி மான்யம் கணக்கிடுவார்கள் என்று நம்புகிறேன். அதாவது ஹையர்கிரேடு ஆசிரியர்கள் 1950௵ ஏப்ரல்௴ பெறும் மான்யத்தைவிட 2 ரூபாய் அதிகப்படியையும் சேர்த்து மான்யம் கணக்கிட்டுக் கொடுக்கப்படுமென்று நம்புகிறேன்.

உடனடியாகச் சர்க்கார், உதவி பெறும் ஆரம்பப் பாடசாலைகள் சம்பந்தமான மான்ய விகித உத்திரவுகளைத் தெளிவாக விளக்கி, மானேஜ்மெண்டுகள் கிராண்டைவிட அதிகப்படியாக ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் தொகையையும் அங்கீகரிக்கப்பட்ட செலவு கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று விளக்கமான உத்திரவு பிறப்பித்து, நிர்வாகிகளுக்கு அவ்வுத்தரவுகளின் நகல்களை அனுப்பி, உதவிபெறும் ஆரம்பப் பாடசாலைகளின் பொருளாதாரக் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் நீக்கிப் பாடசாலைகள் இன்னும் நன்கு திறமையாக நடைபெற ஜனநாயக சர்க்கார் உதவுவார்களென்று நம்புகிறேன்.

ஹையர்கிரேடு ஆசிரியர்களுக்கு வருடாந்திர மான்ய உயர்வை எட்டணாவிலிருந்து ஒரு ரூபாயாக உயர்த்த முயற்சி செய்யப்படும் என்று கனம் கல்வி மந்திரியால் 27-3-1950ல் சட்ட சபையில் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறப்பட்டது. ஆனால் இப்புதிய சர்க்கார் உத்திரவிலும் அரை ரூபாயே வருடாந்திர உயர்வாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 46000 ஹையர்கிரேடு ஆசிரியர்களுக்கும் இவ் விகிதப்படி உயர்த்தினால் ஆகும் அதிகச் செலவு ரூபா 2,76,000 ஆகும். ஆகையால், கல்வி மந்திரி அவர்கள் சட்ட சபையில் சொல்லியதை நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன்.

---

அஹிம்சையை காந்திஜி வலியுறுத்தினார். ஆனால் இன்றைய உலகிலோ பலாத்காரம் தலைவிரித்தாடுகிறது. சர்க்கார் என்ற முறையில் ராணுவம், கடற்படைகளை நாங்களும் வைத்துக்கொள்ளும்படியாகிறது. எனினும் அவற்றால் பலனில்லை என்பதை உணர்ந்துள்ளோம். பெரும் படை பலம் கொண்ட நாடுகளால் நம் பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டுவிட முடிகிறதா? இல்லையே! ஆகவே தீமைக்குத் தீமை மாற்றல்ல என்பது நிதர்சனம்.

பசிபிக் ஹவுஸ் மகாநாட்டில் நேரு.

# சம்பளம் வழங்குவதில் முறை தவறுவானேன்?

(சேக்கிழார்)

பள்ளிகளில் திங்கள் துவக்கத்திலேயே முந்திய மாதச் சம்பளம் வழங்குதலின் அவசியத்தை ஆட்சியாளர் உணர்ந்திருக்கக்கூடும். நாட்டாண்மைக் கழகங்களில் சிறப்பாக செங்கற்பட்டுக் கோட்டத்தில் பெரும்பாலான பள்ளிகளுக்குக் காலநிலைமை, பண்டங்கள் கட்டுப்பாடு, பங்கீட்டுக் கடைகளின் தொல்லைகள் முதலியவற்றை உணர்ந்து ஐந்து ஆறு தேதிகளுக்குள் ஊதியம் அளிக்கப்படுகின்றன. இதற்குள் சுமார் 635 பள்ளிகளின் பட்டிகளைக் கவனித்தாகவேண்டும். அலுவலக எழுத்தாளர்கள் தங்களுக்கு முதல் தேதியன்றே ஊதியம் பெருவிட்டால் நேரிடும் மனவேதனையை உய்த்துணர்வதால்தான் ஆசிரியர்கள் நிலையையும் எண்ணிப்பார்த்து அவர்கள் பிரச்னையை அவசரமும் அவசியமானதாகக் கொண்டு உதவுகின்றனர். இத்தகைய உதார குணத்தைப் பாராட்டுகின்றோம். அவர்கள் என்றும் ஆசிரியர் பால் அன்பும் மதிப்புங்கொண்டு விளங்குவார்களாக. தங்களைப்போன்ற சுக துக்கங்களையும் அடையக்கூடியவர்கள் ஆசிரியர்கள் என்ற எண்ணம்மட்டும் என்றும் நிலவுவதாகுக.

சாதாரணமாக நகராட்சி மன்றத்தின்கீழ் எழெட்டு பள்ளிகளே இருக்கலாம். அவைகள் போர்டுகளுக்குள்ள கஷ்டம்போல் நகராட்சி மன்றங்களுக்கு இருப்பதற்கில்லை. எனினும் பல நகராட்சிக் கழகங்களில் மாத முதலில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில்லை என்று சொல்லப்படுகிறது. நகராட்சி அலுவலர்கள், பியாத்தாக்கள் மாத முதலிலே சம்பளம் பெற ஆசிரியர்களைமட்டும் ஒதுக்கித் தள்ளுவானேன்? அலுவலர்கள் பெறும் அதே தினத்தில் ஆசிரியர்களும் அடைந்தால் அவர்கள் மரியாதை குறைவுபடுமா? பியாதாக்களிலுமா ஆசிரியர்களைக் குறைத்து மதிப்பிடவேண்டும்? ஏன் இந்த வித்தியாசம்? இந்த ஏற்றத் தாழ்வு முற்றிலும் தவறு. துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம். அநீதிகளுக்கெல்லாம் கோட்டை. பகைக்குப் பிறப்பிடம். இந்த விஷயம் புத்திமான்களின் மனதிலே படுமா?

செங்கற்பட்டு முனிசிபாலிடியில் ஆசிரியர்களுக்குப் பிரதி மாதமும் 10உக்குமேல் சம்பளம் கொடுத்து செல்லுபட்டியில் (Acquittance) தேதி இல்லாமல் கையெழுத்திடச் செய்து பின்னர் நகராட்சி மன்றத்தார் விருப்பப்படி தேதி போட்டுக்கொள்வதாகப் புகார் வருகின்றன. இது உண்மையா என்று மேலிடத்தார் ஆராய்ந்து நகராட்சிமன்ற ஆசிரியர்கள் மாதத் துவக்கத்தில் சம்பளம் பெறவும் பணம் பெற்றுக்கொண்ட தேதியையே குறிக்க வகை செய்யவும் வேண்டுகிறோம். அங்குள்ள ஆசிரிய யூனியன் தங்கள் ஆட்சியாளருக்கு ஆசிரியர்களின் குமுறலை எடுத்துரைக்காமல் வாளா இருப்பதின் மர்மம் என்ன?

திருவள்ளூர் நகராட்சியில் சம்பள உயர்வு கொடுக்காதிருந்து திரு. நரசிம்மன் அவர்கள் முயற்சியால் யூனியன் ஏற்படுத்தி, அதன்மூலம் சம்பள உயர்வை எல்லா ஆசிரியர்களுக்கும் கிடைக்குமாறு செய்திருக்கிறார். ஷை நகராட்சிக்கழக கமிஷனர் அவர்கள் ஷை யூனியன் தீர்மானப்படி சம்பள உயர்வு வழங்கி இருப்பதாக உத்திரவில் குறிப்பிட்டிருக்கிறார். இது மகிழ்வு எய்தற்குரிய செய்தி. கமிஷனர் அவர்கள் யூனியனிடத்தில் கொண்டுள்ள மதிப்பை நோக்குங்கள். அவரது கூர்ந்த மதியையும் பெரு நோக்கையும் கண்டு பாராட்டாமலிருக்க முடியுமா? அவர்களுக்கு நம் நன்றி உரித்தாகுக.

எங்கும் விழிப்பு ஏற்பட்டுள்ளது. பத்தாம் பசலி தில்லுமல்லு செய்கையை விட்டு சகல மனிதரும் சகோதரர்; மனித வர்க்கம்; ஒருயிர் ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தியுண்டு; ஐந்து புலன்கள் உண்டு என்று எண்ணவேண்டும். சாதாரணமாக ஆசிரியர்களும் ஏனைய உத்தியோகஸ்தர்களைப் போலவேதான். மேற்கொண்டுள்ள அலுவலிலேதான் மாறுதல்; ஆத்மா ஒரேமாதிரி, தேவையும் அவ்வாறே. இதனை மறந்து சம்பளம் கொடுப்பதிலும் வேற்றுமை கருதுவது தவறாகாதா? அதிலும் செங்கற்பட்டு முனிசிபாலிடி ஆசிரியர்களிடையே நிலவும் வதந்தி உண்மையாயிருக்குமானால் அரசியலார்தான் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மூலாதார உரிமைக்கு வெடி வைப்பதா அழகு? பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம் வழங்கியுள்ள குடியரசு நாட்டிலா தில்லுமல்லு செய்கைக்கு இடம் கொடுப்பது? உண்மை வெளியாகட்டும்.

# செங்கற்பட்டுக் கோட்டம் மாநாட்டுக் குழுவின் கூட்டு அறிக்கை

நமது செங்கற்பட்டு ஜில்லாவில் எல்லாவகை (போர்டு, லேபர், முனிசிபல், எயிடட், பஞ்சாயத்து) ஆசிரி யூனியன்களின் நிர்வாகஸ்தர்கள் கொண்ட ஜில்லா ஆசிரியர் குழு ஒன்று அமைக்க திரு சி. பாலசுப்பிரமணியம் பல வட்டங்கள்தோறும் சென்று சென்டர் செயலாளர்கள், யூனியன் நிர்வாகஸ்தர்கள், தனிப்பட்ட ஆசிரியர்கள் முதலியோருடன் கலந்து பேசிவருவதைப் பல்லோரும் அறிவார்கள். யூனியன் வளர்ச்சிக்கான வழிகள் முதலிய விஷயமாக ஆதாரக் கல்வி, ஆரம்பக் கல்வி, செய்தித்தாள் மூலமாகக் கட்டுரைகள், அபிப்பிராயங்கள் முதலியன எழுதியும் வருகிறார், சென்டர் செயலாளர்கள் அக்கரையுடன் ஒத்துழைத்தாலன்றி சக்திவாய்ந்த ஜில்லாக் குழு அமைக்க இயலாது, சமூக முன்னேற்றமும் காண முடியாது. ஆகவே வரும் டிசம்பர் மாதத்திற்குள் மானேஜ்மெண்டு வாரியாக யூனியன்களை ஏற்படுத்துங்கள். இருப்பவைகள் துருப்பிடித்திருக்கின்றன. விழித்தெழுந்து புனர் ஜன்மம் காண கச்சைக் கட்டிக்கொள்ளுங்கள். மலைப்பாம்பு கதைபோல குறட்டைவிட்டுத் தூங்கும் காலம் மலை ஏறிவிட்டது. சமூகம் செல்லரித்துக்கொண்டே போகின்றது. ஒளியும் சிறப்பும் காண வகை காணுங்கள். உலகம் பார்த்து வியப்படையுமாறு சக்திவாய்ந்த ஜில்லாக் குழுவையும், தமிழ்நாடு இணைப்பும் பெற்று, காலமாறுதலுக்கு ஏற்ப பழையபோக்கை மாற்றிக்கொண்டு நிலை குலையாத சக்திக் களஞ்சியமாய் விளங்க விதை ஊன்றுங்கள். உழைப்பின்றி முன்னேற முடியாது. அரசாங்கம் பல வகையிலும் ஆசிரியர்களை ஒதுக்கித் தள்ளியும் பல ரகங்களாக கூறுபாடு செய்தும் வருகிறது. இந்த உண்

மையை உணர உங்களுக்கு விருப்பமில்லையா?

தன்மான முள்ளவர்களே! அரசியல் சட்டத்தின் 19 (1) எ பிரிவில் உறுதி அளிக்கப்பட்டிருக்கும் பேச்சு எழுத்து சுதந்தரத்துக்கு போராட வேண்டாமா? தப்பான கற்பனை கொண்டு எமாந்து போகற்க. தோட்டிமுதல் சங்கரீதியிலே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்ள விரும்பும்போது ஆசிரியர்களிடத்தில்மட்டும் கட்டுப்பாடுகள் தளர்ந்திருப்பதேன்? இன்று நாம் சாவுக்கும் வாழ்வுக்குமிடையே மல்லாடிக் கொண்டிருக்கிறோம். சோர்வு மனப்பான்மைவிட்டு வீறு கொண்டு எழுங்கள். யூனியன்களை விரைவில் தயார் செய்யுங்கள். உரிமையைக் காத்துக்கொள்ள இது பொன்போன்ற சந்தர்ப்பம். விரைவில் எழுமின்! விழுமின்! குறிசாரும்வரை நில்லாது செல்மின்!

மேன்மை தங்கிய சமூகத்தார்களே!

செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தாலூகா ஆசிரிய யூனியன்களின் தேர்தல்களை நடத்திக்கொள்ள அனுகுணமாகவிருக்க செங்கற்பட்டு மாவட்டக் கழகத் துணைத்தலைவர் உயர் திரு. வி. கோவிந்தசாமி நாயுடு காரு ஆதாவில் அன்னவர் வதியும் பாண்டேஸ்வரத்தில் தக்கார் தலைமையில் 7-வது ஜில்லா மாநாட்டை வரும் டிசம்பரில் நடத்த யூனியன்களின் தலைவர்கள், காரியதரிசிகள், சென்டர் செயலாளர்கள் முதலியோர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் பாண்டேஸ்வரத்தில் 1-10-50ல்கூடி திருவாளர்கள் சி. பாலசுப்பிரமணியம், எ இராதாகிருஷ்ணன் இவர்களை அமைப்பாளர்களாகவும், திரு. வி. சுப்பைய்ய நாயுடு, யூனியன்களின் தலைவர்கள் செயலாளர்கள் முதலியோர் அடங்கிய குழுவை மாநாட்டுக் குழுவாக விருக்கவும், ஒவ்வொரு ஆசிரியரும் மாநாட்டுக் கட்டணமாக அணா நான்கு அந்தந்த சென்டர் செயலாளர்கள் அல்லது சென்டர் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் கடமையை உணர்ந்து சந்தா செலுத்தக் கோரியும், டை யார்கள் (அ) வசூலான சந்தாத் தொகை (ஆ) மாநாட்டிற்குத் தவறாது வருபவர்கள் எண்ணிக்கை (இ) சென்டரில் விவாதிக்கத் தீர்மானங்கள் (ஈ) 1951-ம் ஆண்டுக்கு தாலூகா யூனியன் கமிட்டியில் அங்கம் வகிக்க ஊக்கமும் தீரமுள்ள இரண்டு கழகப் பிரதிநிதிகள் (முகவரியுடன்) தேர்ந்தெடுத்தல் முதலியவற்றை நவம்பர் 20க்குள் கன்வீனர் திரு. சி. பாலசுப்பிரமணியம், பென்னலூர், ஸ்ரீபெரும்பூதூர் தபால் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும், கல்வி, கைத்தொழில் சம்பந்தமான பொருட்காட்சி யமைக்கவும், சிறந்தவைகளுக்கு வெள்ளிப் பதக்கங்களும் ஏனையவற்றிற்கு நற்சான்றுத் தாள்கள் வழங்கவும் தீர்மானித்துள்ளனர். இவைகள் செய்தித் தாள்களிலும் ஆரம்பக் கல்வியிலும் சர்க்குலர் மூலமும் சென்டர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆகவே வரும் தீர்மானங்களை மாநாட்டு நிர்வாகிக்குரு. 26-11-50 பகல் 1 மணிக்கு சென்னை ஆரம்பக் கல்வி அலுவலகத்தில் (94-95 புதுத் தெரு, மண்ணடி போலீஸ் ஸ்டேஷனுக்கு சமீபம்) ஆரம்பக்கல்வி, ஆதாரக்கல்வி பத்திராதிபர்கள் துணைக்கொண்டு பரிசீலித்து, பின்னர் அதை மாநாட்டுப் பேரவையின் விவாதத்திற்குச் செப்பனிட்டு வைப்பதற்கும், மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு உணவு முதலிய வசதிகள் செய்வதற்கும், தாலூகா யூனியன்களுக்குத் தகுந்த தலைவர் செயலாளர் ஏற்படுத்த முயற்சிக்கவும் அனுசரணையாக விருக்க குறித்த காலத்தில் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கும்படி எல்லா ஆசிரியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காலத்தில் வாராதவைகள் கவனம் பெறாது. மாநாடு இனிது நடைபெற அன்பர்கள் தரும் ஊக்கமும், உதவிகளும், திருவருளும் முன்னிற்பதாகுக.

வாருங்கள், நண்பர்களே! வாருங்கள், சென்டர் செயலாளர்களே! யூனியன் நிர்வாகஸ்தர்களே! வர அசௌகரியங்கள் ஏற்படலாம். விலக்குக. நேர்மை வழியில் செல்ல மூலாதார உரிமைகள் பெற திட்டங்கள் தீட்ட வாருங்கள். பழைய கொள்கைகளுக்கு வெடி வைப்போம். எழுங்கள் அனைவோரும் கூட்டமாக 26௳ நவம்பர் சென்னைக்கு. மறு அழைப்பில்லை. தேதியில் மாற்றம் இல்லை. குறித்த காலத்தில் குறித்தபடி நடவடிக்கைகளைக் கவனிக்க வாருங்கள். வரவேற்புக் கமிட்டி நிறுவவும் மாநாடு நடத்த வழி வகைகள் வகுத்துக் கொடுக்கவும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். வாருங்கள் வர இயலாதார் இருக்க மாட்டார். இருப்பின் உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவியுங்கள். வருபவர்கள் சொந்தச் செலவிலோ சென்டர் பிரத்தியேகச் செலவிலோ வருதல் வேண்டும். மாநாட்டுச் சந்தா குறைவுபடக்கூடாது. அவ்வப்போது ஆதாரக்கல்வி, ஆரம்பக்கல்வி சுதேசமித்திரன், பாரததேவி முதலியவைகளில் மாநாடு சம்பந்தமான அறிக்கைகளுக்கு எதிர் பாருங்கள். சமூக நலம் காண உழைப்பவர்கள் எம்மை இகழார். சிறுமை உணர்ச்சிக்கு இடங்கொடார். உங்களுடைய கம்பீரமான தியாகத்துக்கு எங்களது பணிவான வணக்கம். உங்கள் வருகை வீண் அன்று. பரிபூரணத் திருப்திக்கு உகந்தபடி கடமையைப் பூர்த்தி செய்ய போதிய பலத்தையும் அயரா உழைப்பையும் தன்னம்பிக்கையும் இறைவன் அனைவருக்கும் அருள்வாராக'

(N. B.—26-11-50 பிற்பகல் 1 மணிக்கு சென்னையில் நடக்கவிருக்கும் கூட்டத்திற்கு வருபவர்கள் முன்கூட்டித் தெரிவிக்க வேண்டப்படுகிறார்கள்.)

அன்பும் பிரிவுமுள்ள,

வி. சீனிவாசப் பிள்ளை,
—ஸ்ரீபெரும்பூதூர்.

வி. சுப்பைய்ய நாயுடு,
—திருவள்ளூர்.

எ. இராதாகிருஷ்ணன்,
—சைதாப்பேட்டை.

டி. சிங்காரம்,
—பொன்னேரி.

B. சீனிவாசன்,
—காஞ்சீபுரம்.

டி. கோவிந்தசாமி,
—மதுராந்தகம்.

டி. கோவிந்தசாமி,
—செங்கற்பட்டு.

---

உயர்ந்தவரும், தாழ்ந்தவரும், பணக்காரரும், படுஏழைகளும், ஜாதி, மத, பிறப்பு, நிறவேற்றுமைகளால் தங்களது கருத்து பிறழாது வாழ்க்கை லட்சியங்கள் குறித்து பிறழாது ஒருமித்த மனப்பாங்கை வளர்த்தாலன்றி காந்தீஜி கனவு கண்ட ராமராஜ்யத்தைச் சிருஷ்டிக்க முடியாது. அனைவரும் பாரதப் புதல்வர்கள் புதல்விகளென்பதை உணர்ந்து பரிபூரண சமத்துவம் எய்த உழைக்கவேண்டும்.

—சர்தார் வல்லபாய் படேல்.

**விஞ்ஞானப் பகுதி.**

# உயிர்த் தோற்றம்

வித்வான். S. R. கச்சபேஸ்வரன்.

## II ஆதி உயிர்களும் அவைகளின் வளர்ச்சியும்.

சில நூறு லட்சம் ஆண்டுகளுக்கு முன் 'அட்லாண்டாஸரஸ்' என்னும் சுமார் 100 அடிகள் நீளமுள்ள மாபெரும் பிராணிகள் இவ்வுலகில் வாழ்ந்துவந்தன. அவைகள் நாம் பார்ப்பதற்கே அச்சத்தைத் தரத்தக்கனவாய் இருந்தன. ஆனால் அவைகளின் வாழ்நாளும் அவைகளைப் போன்ற மிகப் பெரிய உருவத்தைக் கொண்ட பிராணிகளின் வாழ்நாளும் முடிவடைந்து விட்டது. அவைகளின் எலும்புக் கூட்டைத்தான் இந்நாட்களில் சிற்சில கண்காட்சிச் சாலைகளில் (Museum) நாம் பார்க்கலாம். ஆனால் அத்தகைய பிராணிகள் எல்லாம் இவ்வுலகில் தோன்றிய ஆதி உயிர்கள் அல்ல. உயிர் வளர்ச்சிப் பரிணாமத்தில் (Evolution) ஆதி உயிர்கள் மிகவும் தாழ்ந்த நிலையில்தான் இருந்தன. மிக மிகச் சிறியவைகளாகவும் இருந்தன.

அமீபா (Amoeba) என்று கூறப்படும் அணுரூபமான உயிர் இந்த முதல் உயிரினத்தைச் சேர்ந்தது. இதை அணுதரிசினி யென்னும் நுண்பொருள்களைப் பெரிதாகக்காட்டும் கருவி (Microscope) யினால் தான் பார்க்க முடியும். முதன்முதல் தோன்றியஉயிர் இத்தகைய அணுரூபமாகத்தான் இருந்தது. அமீபா என்னும் இவ்வணு உயிர் இப்பொழுதும் உள்ளது. இதுவே நாமறிந்த உயிர்த் தோற்றத்தின் முதற்படி. இது இன்று எப்படிக் காணப்படுகின்றதோ அவ்வாறேதான் ஆதி காலத்திலும் இருந்திருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது. ஆயினும் இத்தகைய அணுத் தோற்றத்தின் பரிணாம வளர்ச்சியினால்தான் (Jelly Fish) போன்ற கடற்பிராணிகள் இவ்வுலகில் தோன்றலாயின.

அமீபா என்னும் முற்கூறிய அணு உயிர், பிராணவாயு (Oxygen) ஜலவாயு (Hydrogen) நைட்ரொஜன் (Nitrogen) கரி (Carbon) என்னும் மூலப் பொருட்களாலான வழுவழுப்பான கடற்பாசி போன்ற (Jelly) ஒரு சிறு அணுவேயாம். இது ஒருகண்ணறையினாலான (one-celled) உயிராகும். மேற்கூறிய மூலப்பொருள்கள் சேர்த்தகலவைப்பொருள். ஆனால் இவ்வமீபா உயிர்கொண்டு வாழ்கின்றது. வளர்கின்றது. கண்களால் நேரிடக் காணமுடியாத அளவு சிறிய தோற்றத்தைப் பெற்றது. கொஞ்சம் சேறுள்ள கலவை நீரினின்றும் சேற்றைப் பிரித்து ஒரு அணுதரிசினியின் உதவியினால் சிலமணிநேரம் பொறுமையுடன் அச் சேற்றைச் சோதித்துப் பார்த்தால் அதை நாம் காணலாம்.

இத்தகைய (Jelly) அணு உயிருடன் வாழ்வதுடன் வளரவும் வளர்கின்றது. இதற்கு கை, கால், வாய் நரம்புகள்போன்ற உறுப்புக்கள் இல்லை. இதனருகே ஒரு துளி நைட்ரிக் திராவகத்தை (Nitric-acid) விடுவோமானால், நாம் வலியையும் நோவையும் உணர்வதுபோல, இவ்வணுவும் பின் வாங்குவதைப் பார்க்கலாம். நாம் சூடான ஒரு தகட்டின் மீது கையைத் தவறிவைக்க நேர்ந்தால் உடனே கையை எடுத்துவிடுகின்றோம். ஏன் என்று சிந்திப்பதில்லை. இதை விஞ்ஞானிகள் (Reflex action) பிரதி பலிக்கிற இச்சைக்கு உட்படாதசெயல் என்று கூறுவர். இத்தகைய செயல்தான் நம் கண்ணுக்கு சாதாரணமாகப் புலப்படாத இவ்வணுவிடமும் நிகழ்கின்றது. இது தன் உடலாகிய உயிர்ப்பொருளைக் (Protoplasm) காத்துக்கொள்வதற்காக மேலே "ஜவ்வு" போன்ற தோலைப் பெற்றுள்ளது. இதன் உடற் பகுதியில் ஒரு சிறு கரும்புள்ளிபோன்றதொரு பகுதி யுள்ளது. இதுவே உயிர்க்கருவாகும். இது மனிதனுடைய வளர்ச்சியுற்ற மூளைக்கு அடிப்படை மூதாதையாகும். இவ்வணுவில் ஆண் பெண் வேற்றுமையில்லை.

இது பசியாகவுள்ள பொழுது மெள்ள இடம்விட்டு நகருகின்றது. கால் கைகளில்லாதபோதும் தான் வாழும் நீரில் இடம்விட்டு இடம் செல்லும் தன்மையைப் பெற்றுள்ளது. ஏற்ற உணவுப் பொருளின் ஒரு துளியைக்காணில் தன்னுடைய வழுவழுப்பான பாசிபோன்ற உடற்பகுதியில் ஒரு பாகத்தை முன்னால் பீச்சுகின்றது; அப்பொருளைச் சுற்றிக்கொள்ளுகின்றது. இதற்கு வாயில்லை, குடலில்லை, கால்களில்லை; ஆயினும் உடலே வாய், குடல், கால் ஆகிய எல்லா உறுப்புக்களும். இது ஒரு விந்தையல்லவா! என்னே ஈசன் படைப்பின் விந்தை!

இனி, இத்தகைய அணு எவ்வாறு தன் இனப்பெருக்கம் செய்கின்றதெனப் பார்ப்போம். உயிருள்ளவைகளெல்லாம் இனப்பெருக்கம் செய்கின்றனவல்லவா? இங்குதான் இன்னும் ஒரு விந்தை உளது. உயிர்த்தோற்றமே விந்தைதான். இவ்வணு, தனக்கு வேண்டிய உணவை (Organic Matter) உண்டு கொழுத்து இனப்பெருக்கம் செய்வதற்கேற்ற நிலையிலுள்ள பொழுது கொஞ்சம் கொஞ்சமாக இடையில் சிறுத்துக் கொண்டே வந்து, பிறகு இரு தனித்தனித் துண்டுகளாகப் பிரிந்து போய்விடுகின்றது. முன்னர் ஒரு அமீபா அணு இழந்த இடத்தில் இப்பொழுது இரு அமீபாக்கள் தோன்றுகின்றன. பிறகு இரண்டு நான்காகவும், நான்கு எட்டாகவும் இவ்வாறே பெருகுகின்றன.

இத்தகைய அமீபாக்கள் ஆதி காலத்து ஆழ்கடலின் கீழ்—அக்கடல்களின் அடியில் வெப்பம் முற்றும் தணியாமலிருந்த நிலையில்—மண்ணும் நீரும் சேர்ந்த சேற்றுக் கலவையில் தோன்றின: தோன்றி வளர ஆரம்பித்தன. காலகதியில் இவ்வமீபாக்கள் தங்களைச் சுற்றிச் சுண்ணாம்பால் ஆனபல சந்துகள் கொண்ட ஒரு கூட்டை (shell) அமைத்துக் கொண்டன. இவ்வமீபாக்களின் வழ வழப்பான உடல் இத்துவாரங்களின் வழியாக வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். இவ்வகை அமீபாக்கள் இன்றும் கடலின் ஆழத்தின் பல லட்சக் கணக்கில் உள்ளன. இங்கிலாந்தில் (Chalk Hills) சுண்ணாம்புக் குன்றுகள் என்று கூறப்படுபவை முன்னொரு காலத்தில் கடலின் கீழ் வசித்த அமீபாக்களின் கூடுகளேயாம். அக்கடற்பகுதி நிலமாக மாறுவதற்கு எவ்வளவு காலம் சென்றிருக்க வேண்டுமென்பதைச் சற்றே சிந்தித்துப் பார்ப்போமானால் இவ்வுலகில் நம் மனதுக்கும் எட்டாத விந்தைகளிருப்பதை யுணரலாகும்.

(தொடரும்)

# பண்புகளை அளவிடல்

மனிதரின் திறனையும் பண்புகளையும் விஞ்ஞான முறைகளில் அளவிடுவது இருபதாம் நூற்றாண்டின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். இவ்வாறு அளவிடுவதற்குத் தூண்டு கோலானவை மூன்றுள்ளன. முதலாவது, ஆதி கால முதல் மனிதர், ஒருவரையொருவர் மதிப்பிட்டு வந்துள்ளனர். நண்பர்கள் கூடிப் பேசும் பொழுதெல்லாம் தமக்குப் பழக்கமானவரைப் பற்றிப் பேசாதொழிவதில்லை. எந்த வேலையைத் தொடங்கினாலும் அதில் சம்பந்தப் படக்கூடியவர்களின் குணங் குறைகளை எவரும் ஆராயாது விடுவதில்லை. அத்தகைய அபிப்ராயங்கள் எந்த அளவுக்குத் திட்டமானது என்று திட்டமாகக் கூற முடியாது. எனினும் பிறரைப் பற்றிய தத்தம் அபிப்ராயங்களைக் கொண்டே காரியங்கள் நிகழ்த்தப்படுகின்றன. தற்கால பரீட்சைகள் ஒருவாறு மாணவரின் திறனை அளவிடுகின்றன. இத்தகைய பரீட்சைகளால் அளவிடப்படும் திறன் சமூக வாழ்க்கைக்குப் போதியதன்று. மதிப்பிடுவதில் பல குறைகள் உள்ளன. ஆதலால் இம்முறையைச் சீர்திருத்தவேண்டும் என்ற எண்ணம் தோன்றி வளர்ந்து வந்துள்ளது. புத்தகம் படித்து மனதில் பதிய வைத்துக்கொள்ளும் திறனைக் காட்டிலும் மிகவும் முக்கியமான பண்புகள் உள்ளன. அவற்றை விஞ்ஞான முறைப்படி அளவிடுவதெவ்வாறு என்பதை ஆராய்ச்சியாளர் சிந்தித்து சோதனைகள் மூலம் தாம் கண்ட உண்மைகளை வெளியிட்டுள்ளனர்.

இரண்டாவதாக தனி நபர்களைப் பற்றிச் சிந்திப்பதோடு நிற்பது மனித இயல்பன்று. மக்களுக்குப் பொதுவான லட்சணங்கள் யாவை? எத்தன்மைத்தானவை? அவை உலக முன்னேற்றத்திற்குத் துணையாவனவா? என்று விசாரிப்பது மனிதர் இயல்பு. பிறநாட்டாரைப் பற்றி மதிப்பிடுவதில் பல குறைகளைக் கண்டே சமுதாய வாழ்க்கையை விஞ்ஞான முறையில் அறிந்து உயர்வு தாழ்வை எடுத்துக் காட்ட உள நூல் வல்லுநரும் சமுதாய விஞ்ஞானிகளும் முனைந்துள்ளனர்.

ஒரு சமூகத்தைப் பற்றிப் பட்சபாதமின்றி அபிப்ராயங்களைக் கூறப் பல சோதனைகள் செய்யவேண்டும். அத்தகைய சோதனைகளின் நுணிபுகளே சமுதாய அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன.

மூன்றாவதாக, உள்ள நிலையை விடமேம்பட்ட நிலையடைய வேண்டும் என்பது எல்லோருடைய விருப்பமாகும். இவ்விருப்பமே மனப்பண்மையையும் பண்புகளையும் அளப்பதற்கு வேண்டும் வழிகளைத் தேடக் காரணமாகியுள்ளது. குற்றவாளிகளான இளம் பிள்ளைகளுக்குள்ள கல்விச் சாலையின் சீர்



திருத்தங்களை நோக்குக. குற்றங்களுக்குக் காரணங்களைக் களைவதே அச்சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கம். உணர்ச்சிகளையும், மனப்பான்மையையும், பழக்க வழக்கங்களையும் ஆராய்வதற்கு அவசியம் உண்டு என்பதை வற்புறுத்துவதே நம் நோக்கமாகும்.

தற்காலப் பரீட்சைகளின் முடிவுகளே நம்பத்தக்கனவல்ல என்ற நிலையில் அளப்பரிய பண்புகளை அளந்தறிவது எளிதா என்ற கேள்வி எழுவது இயல்பு. சமூக முன்னேற்றம சிறந்த நோக்கம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தயங்காதபோது அதற்கு ஆவன செய்வதற்குத் துணை புரிய வேண்டுமல்லவா?

சுதந்திர இந்தியாவின் கல்விக் குறிக்கோள்களுள் முக்கியமான இரண்டை இடைவிடாது மனதிற்கொண்டு ஆசிரியர் ஒழுக வேண்டும். அவ்வாறு ஒழுகுவதுடன் பெற்றோரின் ஒத்துழைப்பையும் பெறவேண்டும்.

இரண்டாவன (1) பரிசளிப்பு முதலியவற்றால் போற்றப்படும் போட்டிக்குப் (Competition) பதிலாக ஒத்துழைப்பு மனப்பான்மையை மாணவரிடம் எழுப்பவேண்டும்.

(2) புதிய சமுதாய வாழ்க்கைக்கு நூலறிவு மாத்திரம் போதாது. கைத்திறனும் அனுபவ ஞானமும் வேண்டும். முக்கியமாக இவ்விரண்டையும் வற்புறுத்தவே கல்விச் சீர்திருத்தம் எழுந்தது. ஆரம்பக் கல்வி வட்டத்தில் ஆதாரக் கல்வியின் நோக்கம் வாழ்க்கைக்கு வேண்டிய பழக்க ஒழுக்கங்களையும், திறனையும், அறிவையும் மாணவர் பெறும்படிச் செய்வதேயாகும். அதன் வெற்றி மாணவரின் பண்புகளை அளந்து பக்குவப்படுத்த ஆசிரியருக்குள்ள திறனைப் பொறுத்ததாகும்

---

தற்காலக் கல்வியினால் இதற்கு முன் இவ்வளவு மோசமான அறிவீனம் மக்களுக்கு இருந்திருக்க முடியாது. புத்தி கூர்மையிருந்தாலும் விசால அறிவுதானில்லை. ஒவ்வொருவரும் குறிப்பிட்ட அம்சத்தில் நிபுணத்வம் பெருகின்றனர். வேறொருவர் படிப்பைப் பற்றிக் கேட்டால் ஒன்றும் தெரிவதில்லை. சிரமம் மிகுந்த இவ்வுலகில் உபயோககரமாக வாழவேண்டுமானால் மனித குடும்பம் பற்றிய பூரா ஞானமும் அவசியம் தெரியவேண்டும். அதற்கேற்ப கல்வி முறையை மாற்றவேண்டும்.

பெர்ட் ராண்ட் ரஸ்ஸல்.

# சிரிக்காத சிரிப்பு!

"சுராகசி"

"சுபா! மணி பத்தாச்சே. இலை போடறயா?" என்றான் மணி பரீக்ஷைப் பேபரைத் திருத்திக்கொண்டே.

"......................"

"ஏய் சுபா! எங்கேடி தொலைஞ்சு போனே? டேய் ராமு! அம்மா சமையல் உள்ளிலே இருக்காளா பாரு. (பையன் போகிறான்.) சீ! இந்தத் தரித்திரம் பிடிச்ச வீட்டைவிட்டு ஒரேயடியாய் ஒழிஞ்சு எப்பத்தான் சந்நியாசியாவேனோ தெரியலை."

சுபாஷிணி கையில் ஒரு கரண்டியில் மிளகாய்ப் பொடியுடன் வந்தவள் மணியைப் பார்த்து "ஏன் இப்படி ராஜபாளையத்து வேட்டை நாயாட்டமா காலங் கார்த்தாலே வள் வள்ளுனு விழறேள்? பக்கத்துவீட்டு பங்கஜத்துகிட்ட மிளகாப் பொடி கொஞ்சம் கடன் வாங்கிண்டு வரப் போயிருந்தேன். அதுக்குள்ளே என்ன அவசரமாம்?" என்று சொல்லிவிட்டு தோள்பட்டையில் முகவாய்க்கட்டையை நக்கென்று இடித்துக்கொண்டாள்.

"ஏண்டி! இவ்வளவுதான் உண்டா? இன்னும் இருக்கா? மணி பத்தாச்சே. ஒருவாய் சோறு திங்கலாம்னு கூப்பிட்டா பத்ரகாளியாட்டமா கரண்டி நாட்டியம் ஆடறயே. இலையைப் போடுடி சீக்கிரம்."

"அதிகாரத்திலே ஒண்ணும் குறைச்சல் இல்லே. சீமை ராஜா மாதிரி. அடுப்புக்கு விறகு வாங்கிப் போடுங்கோன்னு ஆயிரம் தடவை அடிச்சுண்டேனே விறகு வாங்கினீர்களா? விறகு இல்லாமே சாதம்மட்டும் எப்படி வந்து குதிக்கும்?"

"ஏண்டி முந்தாநாள் ஒன் கையிலேதான் துட்டு குடுத்தேனே விறகு வாங்க? இதுக்குள்ளேயா எல்லா விறகும் ஆயிடுத்து?"

"இதென்னடிம்மா கூத்து! ஆகாமல் பின்னே நான் விறகைத் தின்னுட்டேங்கறீளா?"

"பிரம்ம ஹத்தி! உன்னைக் கட்டிண்டத்திலே யிருந்து இந்த எழவுதான் பீடை!"

"ஏன் நிறுத்திவிட்டேள்? இன்னும் சொல்லுங்களேன். ஒங்களுக்கும் பத்துநாள் லீவிலே பொழுது போகவேண்டாமா?" என்று சுபாஷிணி துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள்.

மணி கோபத்துடன் பரீக்ஷைக் கட்டை ஒரு மூலையில் எறிந்துவிட்டு பளார் பளாரென்று சுபாஷிணியின் கன்னத்தில் நாலறைகள் கொடுத்துவிட்டு வெளியே போய்விட்டான். சுபா ரொம்ப நேரம் விசும்பிக்கொண்டே இருந்தாள்.

மணி வீட்டைவிட்டு நேரே கடைத்தெருவிலிருக்கும் நூல் நிலையத்திற்குப் போனான். பாதிதூரம் போவதற்குள் கோபம் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டது. சுபாஷிணியைக் கன்னத்தி லடித்துவிட்டோமே என்ற பச்சாத்தாபம் மேலோங்க வாரம்பித்தது. அவனையறியாமல் அவன் கண்களிலிருந்து ஜலம் வழிந்தது. அவன் நினைவு மெதுவாக பழைய நாட்களை நோக்கிப் பறந்தது.

*  *  *

மணி பள்ளிக்கூட வாத்தியாராக வந்தபோது, பள்ளிக்கூட வாத்தியாராக இருப்பவன் வாழ்க்கையின் இன்பங்களை உணர முடியாத ஒரு ஜடமாகிவிடுவான் என்ற உண்மையை உணரவில்லை. மேலும் நாட்டிற்குத் தொண்டு என்ற வகையில் தன் வேலை இருந்ததுபற்றி அவனுக்கு ரொம்ப சந்தோஷம்.

அப்படி சந்தோஷ தேவதையின் அணைப்பில் அவன் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தபோது ஒருநாள்...

வழக்கம்போல தீபாவளிக்கு அக்காவீட்டிற்குவந்திருந்தான் மணி. விடியற்காலம் எண்ணெய் தேய்த்துக்கொண்டதும் தலையைத் துவட்டிக்கொள்ளமணிமெத்தைக்குச்சென்றான். அங்கே முன்கட்டு குடித்தனக்காரர் பெண் மத்தாப்பு கொளுத்திக்கொண்டிருந்தாள். அரவம் கேட்டதும் திரும்பிப்பார்த்தாள். வெட்கத்தோடு அவனைமறுபடி ஓரைக்கண்களால் விழுங்கிவிடுபவள் போலப் பார்த்தாள். மணிக்கு 'ஷாக்' அடித்த மாதிரி இருந்தது. மார்பு படபடக்க அந்தப் பார்வையைத் தாள முடியாமல் என்னமோ மாதிரியாகக் கீழே இறங்கினான் மணி!

அந்த முன்கட்டு பெண்தான் கொஞ்ச நாட்களில் அவன் வாழ்விலேயே புகுந்துவிட்டாள், வாழ்க்கைத் துணைவியாக!

*  *  *

ஆனால் இன்று? சுபா குறும்புக்காரியாகவோ அன்பானவளாகவோ அவனுக்குத் தோன்றாமல் செய்துவிட்டது அவனுடைய உபாத்தியாயர் தொழில். கட்டிய மனைவியும் வேப்பங் காய்த்துகையலாக ஆகிவிட்டாள். இந்த வேலையினால் இதற்குக் காரணம் நிறைய இருக்கிறது.

கல்யாணம் பண்ணிக்கொண்டபோது பைஞ்சோலையாக இருந்த அவனுள்ளம் இன்று வறுமைப் புயலால் வாடி வதங்கி வெறும் பாலைவனமாகி விட்டது.

பெற்றோன் என்ற பாசம், மனைவி என்ற அன்பு எல்லாம் வறண்ட வெறும் மனிதனாகிவிடவேதான்—இந்த உபாத்தியாயர் தொழிலால் உலகின் அதிசயப் பிரகிருதியாகிவிடவேதான்—இன்று மனைவியையும் அடித்தோம் என்று நினைத்தபோது அவன் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வழிந்தது

நூல் நிலையத்தினருகில் யாரோ இரண்டு பேர்கள் தீபாவளி வரப்போகிறது என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

சோர்ந்துகிடந்த மணியின் உள்ளத்தில் சோபையை ஏற்படுத்தியது அவர்கள் பேச்சு. தான்முதலில் சுபாஷிணியைச் சந்தித்த அந்த தீபாவளி! அதை நினைத்ததும் அவன் உடம்பு முழுவதும் புல்லரித்தது. பக்கத்தில் நாலு பேர்களிருப்பதையும் மறந்து வாய்விட்டுச் சிரித்தான் மணி!

பள்ளிக்கூடத்தில் நாலுவாத்தியார்கள டியூஷன்களை யெல்லாம் பிடித்துக் கொண்டு தன்னை அழவைப்பதற்காகவும், தான் மிகுந்த அனுபவக்காரனாயிருந்தும் தலைமை உபாத்தியாயர் பதவிக்குத் தான் வரவிட்டாது சிலர் தடுப்பதினாலும், மாடுபோல் பையன்களைக் கட்டிக்கொண்டு மாரடிப்பதினாலும் தன்னுடைய மனித ஹிருதயத்தையே இழந்து விடுவதா என்று நினைத்தான் அவன்.

உபாத்தியாயர்களும் வாழப்பிறந்தவர்கள்தான்; அவர்களுக்கும் பாசம், அன்பு, நேசன் எல்லாம் இருக்கத்தான் செய்கிறது. "இது நம் பெண்ணாயிற்றே; நன்றாகக் கல்யாணம் செய்ய வேண்டும்; நாலு பேர் பார்த்து எவ்வளவு நகைகள் போட்டிருக்கிறான் பார் என்று

# கவியுள்ளம்!

S. S. ராகவன், ராஜேந்திரம்.

"நானும், எனது நண்பனும், காற்று வாங்கக் கடற்கரைக்குச் சென்றிருந்தோம். அங்கு ஒருவன் முல்லைப் பூவையும், கதம்பத்தையும், தட்டில் வைத்துக் கொண்டே சென்றான். அந்தப் புஷ்பம் கமகமவென்று நறுமணத்தை யள்ளிவீசிக் கொண்டிருந்தது. அந்த வாசனையோடு தவழ்ந்து நடனம் புரிந்து வந்ததென்றல் காற்று எங்களுக்கு மனதில் இனிமையில் தனிமையான இன்பமுதை யூட்டி சாந்தியளித்த தென்றல் அதன் வசீகரணந்தான் என்னே!

அன்று மாத்திரம் எனது தோழனின் முகத்தில் ஒருவிதமான தெளிவும், கம்பீரமுள்ள தோற்றமும் என்னை பிரமிக்கச் செய்ததுமல்லாமல்; எதையோ நிச்சயமாகக் கேட்கவேண்டுமென்கிற திடமான நம்பிக்கை கலந்த பார்வையும், எப்பொழுது கேட்கலாம் என்ற அவாவும் தெள்ளெனத் தென்பட்டன.

இளமைக்கும், இயற்கைக்கும் அது இருக்கவேண்டியது அவசியந்தானே! என்று என்னுள்ளத்தில் எண்ணியவாறு என்ன சமாசாரம்? ஏதோ கேட்கவேண்டுமென்கிற

---

மயங்கவேண்டும்" என்று அவர்களும் அடங்காத ஆசை கொள்ளத்தான் செய்கிறார்கள். "தங்கள் பிள்ளைகளும் கல்வியில் பல துறைகளில் வல்லவர்களாக என்ஜினியர்களாகவும், அறிஞர்களாகவும், பேராசிரியர்களாகவும் விளங்கமாட்டார்களா?" என்று ஏங்கும் பெற்றோர்கள்தான் அவர்களும். ஆனால் உபாத்தியாயர் தொழில்தான் அவர்களை வேறாக்கி விடுகிறது. பாவம்! உபாத்தியாயர் மாப்பிள்ளையை ஒரு போதும் வேண்டேனே!" என்று பெண்கள் நலுங்குப் பாட்டு பாடுமளவிற்குச் சமூகம் அவர்களைத் தனிப்பிறவிகளாக்கி விட்டது!

"இந்த சமூகத்திற்கு இவ்வளவு துணிச்சலா? பொறுமையே உருவாக காந்தி காட்டிய வழியில் நாங்கள் நடந்தால் உலகமே மூக்கின் மேல் விரலைவைக்க வேண்டாமா?" என்று தனக்குள்ளாகச் சொல்லிச் சிரித்துக் கொண்டான் மணி.

"நீங்களே எல்லா பட்டாளையும் கொளுத்தணுமா? ராமு கையிலே அந்தப் பூவாணத்தைக் கொடுங்கோ." என்றாள் சுபாஷிணி.

"டேய் ராமு! இப்படி வந்து சுடுடா! டேய்! டேய்! தூரமா பிடிடா. மேலே பொறிவிழப் போறது." என்றான் மணி.

சுபாஷிணி ஒரு சிகப்பு மத்தாப்பைக் கொளுத்திக் கையில் பிடித்துக் கொண்டிருந்தாள். "சுபா!" என்று சொல்லிக் கொண்டே அவளை மணி நெருங்கினான்.

"உஷ்! என்னைத் தொடக்கூடாது நான் மடியாக்கும் பட்சணம் இன்ற பிறகுதான் ......" என்றாள் அந்தக் கள்ளி!

அதைக்கேட்டதும் மத்தாப்பு வெளிச்சத்திலே இன்பம் பிரதிபலிக்க, மணி வாய்விட்டுச் சிரித்தான். உபாத்தியாயர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் தங்கள் வாழ்விலே ஒருநாளும் அது மாதிரி ஆனந்தமாகச் சிரித்தது கிடையாது!



ஆசையின் மிகுதியால் வாய் துருதுருவெனத் துடித்துக் கொண்டிருப்பது தெரிகிறதே! உன்னிடம் இன்று ஒரு தனிமையான சோபையையல்லவா காண்கிறேன். எதைப்பற்றி கேட்கவேணுமென்றிருக்கிறதோ அதைத் தாராளமாகக் கேளேன்? இதில் சங்கோஜமெதற்கு? என்றதும்; அவன் பல கேள்விகளைக் கேட்டான் என்னிடம். நானும் முடுக்கிவிட்ட ரேடியோவைப்போல அவனுக்குத் தகுந்தவாறு பதில் சொல்லி மனச்சந்துஷ்டி அடையச் செய்தேன்! மேற்கு மூலையில் பொன்னை உருக்கி வார்த்தது போன்ற அச்செந்நிறக் கிரணங்கள் வெகு அழகாக இருந்தன; அப்பொழுதுதான் அந்தி வானத்தை யணுகிச் சென்றான் அருணன். அவ்வியற்கைக் காட்சியை எனது நண்பன் பார்த்துவிட்டானே என்னவோ, திடீரென்று அவன் வெகுநாட்களாய் அடையமுடியாதிருந்த வஸ்துவை இன்று அடைந்து விடுவோம், இல்லை; அடைந்தேவிட்டோம், என்ற ஆனந்தக் கொந்தளிப்பென்ன அலைகள் மேலிட்டவன்போல் நான் உன்னை ........!

என்ன விஷயம்? உடனே சொல்லேன்; தெளிவுறச் செய்கிறேன். விஷயம் ஒன்றும் இல்லை; முக்கியமானதொரு கேள்வியைக் கேட்கவேணுமென்று இருந்தேன். அதை மறந்துவிட்டேன். அதைக் கேட்டு அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியதாயிற்றே என்ற ஞாபகத்திற்கு வரவே மறுபடி கேட்கலானேன்.

என்; அந்தக்கேள்வியைத் தாராளமாகக் கேட்கலாம் தயக்கம் எதற்கு? இதற்கா தயங்கித் தவிக்கிறாய்? "த்யகதலஜ்ஜஸ்ஸுகீபவேத்" வெட்கத்தைத் தியாகம் செய்த ஒருவன் சுகவானாக ஆவான் என்றபடி வெட்கப்படாமல் இத்தனை கேள்விகளை நீ கேட்கவில்லையா? நானும் சொல்லவில்லையா? இதற்கு மட்டும் நீயேன் இவ்வளவு வெட்கப்படுகிறாய்?.

வெட்கப்படவில்லை. ஆனால் இந்தக்கேள்விகளைக் கேட்டால், நீ படித்தவனல்லவா? உனக்கு இது தெரியாதா!? என்று பரிஹஸிப்பாய். ஆகையால்தான் கேட்காது தயங்கினேன். ஆனாலும் கேட்கவேணுமென்கிற அவாவின் தூண்டுதலால் உன்னைக் கேட்டே விடுகின்றேன்.

ஆமாம்; அலகாபுரி மிக அழகு வாய்ந்தது. அங்கிருக்கும் கூடகோபுரங்கள், மாட மாளிகைகள் யாவும் வானளாவி இருக்கும் என்கிறார்களே! அதைக் காட்டிலும் பதின்மடங்கு அழகு வாய்ந்ததும், வானளாவிய அலகாபுரியை மீறுவதும், எல்லோருக்கும் அளவிலா ஆனந்த அலைகளை அள்ளி அன்பமுதை அனுதினமும் ஊட்டுவதும் எது? கவியின் அபாரமான ஆழ்ந்த அறிவு வளமானதொரு சக்தியும், அழியாது நின்று நிலவும் கற்பனைக் கோயில்களுமல்லவா?

ஆம்; அது உண்மையே! அலகாபுரி அவ்வளவு அழகில்லை என்று சொல்லல் தகுமா?

ஆனால்........!

ஆனால் என்ன? அழகு வாய்ந்தது தான் அதைக்காட்டிலும் பன்மடங்கு அதிக அழகுவாய்ந்ததல்லவா! கவியின் உள்ளத்திலிருந்து எழும்பும் மாசு மறுவற்ற கற்பனைக்கோவில்! அலகாபுரியிலுள்ள கூடகோபுர, மாட மாளிகைகளின் உயரத்தைக் கட்டோடு அதிக்ரமித்து எல்லை மீறித் திகழ்வதில் என்ன ஆச்சர்யம்? அத்தகைய சக்தி அதனிடம் இருப்பதில்தானே யாவர்க்கும் எல்லை மீறின ஆனந்தத்தை யூட்டி இன்புறச் செய்கிறது. ஆஞ்சநேய

ருக்கு சமுத்திரத்தைத்தாண்டும் சக்தியிருந்ததினால்தானே யாவரும் தோத்திரம் செய்ய; அவர் மாபெரும் கடலைக் கடந்து அரக்கனில்லம் ஏகினார்!

கற்பனைக் கோயிலை அமைக்கக் கொத்தனென்ற ஆள் தேவையில்லை. ஜனங்களைப் படைப்பிக்க பிரும்ம தேவன் எவ்வித மிருக்கின்றானோ. அதுபோல் "ஸர்வேஷாமபி காவ்யானாம் கவிரேக ப்ரஜாபதிஹி" எல்லா காவ்வியங்களாகிற கோவிலை நிர்மாணித்து அதற்குக் கற்பனை யென்னும் கலர் பூசி, அதில் அலங்காரமாகும் சித்திரங்கள் அமைத்து, விருத்தமென்னும் விளக்கினால் விளங்கச்செய்து உபமான, உபமேய மென்பவைகளை துவார பாலகர்களாகச் செய்து கவியான தான் அந்தக் கோயிலுக்கு இன்னும் எந்தெந்த விதத்தில் சிறப்பித்து அழகு ஊட்டலாம் எனச் சிந்தித்தவாறு கர்த்தாவாக இருந்து எல்லோருடைய மனதையும் கொள்ளை கொள்ளுகிறானாதலால் கவியே அந்தக் காவியம், நாடகம் முதலிய கற்பனைக் கோயில்களுக்கெல்லாம் கொத்தனை அமைகிறான்!

மேலும்; அந்தக் கோயிலில் ஸ்லோகம் என்னும் தேவதைகளையமைத்து, அதற்கு விஸர்க்கம். குட்டெழுத்து, நெட்டெழுத்து, அநுஸ்வாரம், அனுனாஸிகம் முதலியவைகளை அவயவங்களாகவும், பதம் என்னும் நரம்பினால் பிணைத்தும், ஸ்தாயீ பாவம் முதலான ஹாவிஸ்வினால் அதன் பசி தீர்த்தும், நவரஸம் என்னும் உயிரையும் கொடுத்துவிட்டால் எவ்வளவு அழகாக இருக்கிறது!

காண்பவர்களைக் காந்தம்போல் பற்றி கவர்ச்சியுறச் செய்கிறதே! இதுதான் கவிக்கொத்தனின் கைத்திறன்!

கவிதை யென்றால் கவியின் அபிப்ராயம் (பாவம்) கொண்டதுதான். அதை இங்கு ஸ்லோகம் என்றே வைத்துக்கொள்வோம்.

கற்பனைக் கோவிலை அமைப்பது நமக்கு கடினமேயாயினும், கவியுள்ளம் படைத்தவர்க்குப் புல்லுக்குச் சமமேயாகும். கவியுள்ளம் எவ்விதம் இருக்கும் என்றால் பரந்த நோக்கம் உடையதாகவும், எவ்விதமான கருத்தோவியங்களையும் எழுத்தோவியங்களாக மாற்றி யமைக்கும் சக்தி வாய்ந்ததாகவும், எதிலும் ஒருவிதமான சமத்துவ புத்தியும், பித்தன் பிதற்றுவது போல் பற்பல ஆழ்ந்த கருத்துக்கள் உள்ள கற்பனைக் கவிகளை வெகு அழகாக ரஸம் ததும்ப மொழிந்தவாறு இருப்பதும், இயற்கைக்கே தன்னுள்ளத்தைப் பறிகொடுப்பதும், கவிதை செய்வதிலேயே காலத்தை நடத்துவதும், நமக்கு நன்கு புலப்படாதொரு விஷயங்களையும் அறிய வல்ல தன்மை வாய்ந்ததும்தான் கவி உள்ளம் படைத்தவர்களுக்கு உள்ள இயல்புமிகும் சான்று!

(தொடரும்)

---

கங்கையின் தண்ணீர் நல்லதுதான் ஆனால் சாக்கடைகள் வழியாக அது வந்தால் அருந்தமாட்டோம் அதுபோல் புனித கங்கையான காந்திஜியின் அரிய உபதேசங்கள் நாற்றமெடுத்த நபர்கள் வாயிலாக வந்தால் எப்படி நம்மிடை நம்பிக்கை சுரக்கும்?

—ஆச்சார்ய கிருபலானி.



# மூலாதாரக் கல்வியே முனிவரருளிய உபநிஷத உண்மைகள்.

## தைத்திரிய உபநிஷதம்.

### "ஆசி"

### 1. சிக்ஷாவல்லி - பயிற்றுமுறை.

இறைவணக்கம்—நன்றிகூறல் :

நலம் எமக்கு (ஆகுக) மித்திரன், நலம்வருணன்; நலம் எமக்கு ஆகுக அர்யமா, நலம் எமக்கு இந்திரன்; பிருஹஸ்பதி, நலம் எமக்கு விஷ்ணு—பாரளந்தோன்.

வணக்கம் பிரம்மனுக்கு; வணக்கு உனக்கு வாயுவே! நீதான் கண்கூடான பிரம்மமாக இருக்கிறாய். நீதான் கண்கூடான பிரம்மமென்று கூறியுளேன்: ரிதம் (பேரவு) என்று கூறியுளேன்; ஸத்தியம் என்று கூறியுள்ளேன்.

அது என்னைக் காப்பாற்றியிருக்கிறது; அது உரைப்போனைக் காப்பாற்றியிருக்கிறது என்னை; காப்பாற்றி யிருக்கிறது உரைப்போனை. ஓம் தண்மை (சாந்தி). தண்மை, தண்மை (இலங்குக). (12)

[பதினொன்றாவது அனுவாகத்தில் ஆசான் அண்மை வாழ் சீடனுக்கு உபதேசிக்கவேண்டிய பொன் மொழிகளை எடுத்துக் கூறினார். இதுவரை பரம்பொருளுணர்வு பெறத் தகுதியுற வேண்டுவதற்கான நிலையாகிய மனத்தூய்மையை யடையவேண்டி உபாஸனைகள் பல உபதேசிக்கப் பெற்றன. அவற்றின் பயனை உபாஸகன் நன்கு அடைந்தவனாக இங்கு கருதப்படுகிறது; பயனடைந்தவன் நன்றி கூறவேண்டுவது இன்றியமையாதது என்பதைக் குறிப்பதேபோன்று இந்த பன்னிரண்டாவது அனுவாகம் விளங்குகிறது. நன்றி மறத்தலால் ஏற்படக்கூடிய தீங்கைத் தடுப்பதற்கே முதல் அனுவாகத்தில் வணங்கப்பெற்ற மித்ரன் முதலிய தேவதைகளுக்கு இங்கு நன்றி வணக்கங் கூறப்பெறுகிறது.

இவ்வனுவாகத்தின் பொருள் விளக்கத்தை முதல் அனுவாகத்தின் கீழ்க் காணவும். "கூறுவேன்" என்று முதல் அனுவாகத்தில் உள்ளதற்கு இங்கு "கூறியுளேன்" என்பதும், "காக்குமாக" என்றதற்கு "காப்பாற்றி யிருக்கிறது" என்பதுவுமே மாறுபாடு.

நன்றி கூறுதலுடன் சிக்ஷாவல்லி யெனும் பயிற்றுமுறைப் பகுதி முடிவுறும், அடுத்த இதழில் பிரம்மானந்தவல்லி யெனும் பேரின்பப் பகுதி தொடங்கும்.]

# நாட்டு நடப்பு

ஆசிரியர் சங்கம் திருவொற்றியூர், சைதாப்பேட்டை தாலூகா ஷை சங்கத்தின் ஆதாவில் 1950ஆ செப்டம்பர் 19 முதல் 24உவரை பல ஆசிரியர்கள் சென்னை B. S. அஸ்ஸோஸியேஷன் பயிற்சியாளர் M. G. சாம்பய்யாவால் பயிற்சி அளிக்கப்பட்டனர். அக்டோபர் 20, 21, 22ல் செங்கல்பட்டு ஜி. க. அதிகாரி C. ரகுநாதன் புனர்பயிற்சி திட்டத்தைத் துவக்கினர். அவர் தலைமையில் பலர்பேசினர். ஆசிரியர்களுக்கு சர்டிபிகேட்டுகள் வழங்கப்படுகின்றன.

* * *

ஆரம்ப ஆசிரியர் சங்கம். கொத்தங்குடி சரகம், திருத்துரைப்பூண்டி தாலூகா ஷை சங்கம் 21-10-50 காலை 8-30க்கு தஞ்சை ஜில்லா தேசிய சேமிப்பு உத்யோகஸ்தர் G. கிருஷ்ணமாச்சாரியார் தலைமையில் கூடிற்று. தக்ளிகொண்டு நூல் நூற்றல் நடந்ததும் காட்டுமன்னார் கோவில் உயர்தாப்பள்ளி ஆசிரியர் வெங்கடராகவன் B. A., L, T., ஷை ரேஞ்சு டெபுடி இன்ஸ்பெக்டர் ஆகியோர் பேசினர், முடிவில் தலைவர் தேசிய சேமிப்பின் அவசியத்தைப் பற்றிக் கூறினர். காரியதரிசி ஸ்ரீ R. புருஷோத்தம நாயுடு வந்தனோபசாரம் கூறியதும் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

ஆசிரியர் சங்கம். ஆக்கூர் 1-10-50 அன்று காலை 8-மணி முதல் மாலை 5-மணிவரை ஷை சங்கப் பள்ளிகளின் விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. காலையில் கொடி வணக்கமும் அணிவகுப்பும் நடந்தபின் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. சிறுமிகளும் பங்கெடுத்துக் கொண்டனர். இடைவேளையில் சிற்றுண்டியும் இறுதியில் திண்பண்டமும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு ஆட்டத்திலும் இரண்டு பரிசுகள் வழங்கப்பட்டன. பல ஊர்களின் பள்ளிகள் பங்கெடுத்துக்கொண்டன.

* * *

ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா ஆசிரியர்கள் இரங்கற்கூட்டம். ஸ்ரீபெரும்பூதூர் தாலுகா யூனியன் நிர்வாகக் குழு ஸ்ரீபெரும்பூதூரில் 17-9-50ல் ஸ்ரீ வி. சீனுவாசப்பிள்ளை தலைமையில் கூடிற்று. திரு. மறைமலை அடிகள் தமிழ்க்குச் செய்துள்ள சேவை பற்றி பேசி அன்னார் 15-9-50ல் உயிர் நீத்தது ஈடுசெய்ய முடியா நஷ்டமென்று உணர்வதால் அவர் குடும்பத்திற்குத் தங்களது வருத்தத்தைத் தெரிவித்தனர். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் ஸ்ரீ மறைமலை அடிகளின் நூற்களை சமாஜத்தார் செய்வதுபோல் அடக்க விலையில் வெளியிட்டு அதன் மூலம் அவர் விட்டுப்போன செந்நெறி, தமிழ் வளர்ச்சி முதலியவற்றைக் காக்கவேண்டுமென்று மேற்படியாரை ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா ஆசிரியர் யூனியன் கேட்டுக்கொண்டது.

★ ★



# மன்னார்குடி மாநாடு

சி கி.

சில தலைவர்களும் சில ஆரம்பப் பள்ளி பிரதிநிதிகளும் மயூரத்தில் ஒன்றுகூடி தமிழ் நாடு ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டை மன்னார்குடியில் கூட தீர்மானித்தது மகிழ்ச்சிக்குரியதுதான். ஏற்கனவே விழுப்புரத்திலும் சென்னையிலும் முடிவு செய்தது மீண்டும் மாயவரத்திலும் முடிவாகிறது! இவர்கள் மாயவரத்தில் கூடப்போவதாக முன் அறிவிப்பு உண்டா, போதிய பிரதிநிதிகள் வந்தார்களா, மேலும் மேலும் முடிவாகிக்கொண்டேபோவதற்குக் காரணமென்ன இவை போன்றவைகளை ஆராயப் புகவேண்டியது நம் வேலையல்ல. முனிஸிபாலிடி, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு, லேபர் இலாகா, பிரைவேட் ஏஜன்ஸி முதலிய ஸ்தாபனத்திலிருக்கும் எல்லா ஆரம்ப ஆசிரியர்களையும் ஒன்றுசேர்த்து ஒரே மகாநாடு நடத்த முற்பட்டது குறிப்பிடத்தக்கதாகு மென்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஆனால் இம்மகாநாட்டில் பூரண பிரதிநிதித்வமிருக்கவேண்டு மென்பதுதான் நம் கோரிக்கை. இதுகாறும் நடத்தப்பட்ட மகாநாடுகளில் போதிய பிரதிநிதித்வமில்லை என்பதும், வந்திருந்த ஆரம்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை வருந்தத்தக்க நிலையிலிருந்ததென்றும் மகாநாடு நடக்கும் ஊர் ஆசிரியர்கள்தான் அதிகமாக இருந்தார்களென்று பலர் அறிவர். இம்மகாநாடுகளில் கையாண்ட முறைகளிலுள்ள தவறுகளைக் களைந்து சீரிய முறைகளைக் கைக்கொண்டால்தான் மகாநாடு போதிய பிரதிநிதித்வமுடன் நிலவ முடியும். இதை மகாநாட்டின் பொறுப்பாளர்கள் கவனியாதிருப்பின் மாநாட்டால் நன்மை இல்லை.

### ஆசிரியர் யூனியன்.

சில ரேஞ்சுகளில் யூனியன்களில்லை, இருக்கும் யூனியன்களில் எல்லோரும் அங்கத்தினர்களா அதுவுமில்லை, அங்கத்தினர்களைக் கொண்ட யூனியன்கள்தான் வேலை செய்கின்றனவா? எல்லாம் பெரும்பாலும் பெயாளவில்தான். நல்ல முறையிலிருக்கும் யூனியன் மிகச் சொற்பம்தான், அதுவும் சமீபத்தில் புதிதாக ரேஞ்சு பிரிக்கப்பட்டதிற்கிணங்க யூனியன்களே இல்லை என்றும் சொல்லலாம். இப்பேர்ப்பட்ட யூனியன்கள்மூலம்பிரதிநிதிகள் மகாநாட்டுக்கு வாவேண்டுமென்று சொல்லுதல் சிறந்த முறையாகாது.

### ஆசிரியர் சங்கம்.

புதிதாக ரேஞ்சுகள் பிரிக்கப்பட்டதிற்கிணங்க முறைப்படி ஒழுங்காக நடைபெற்று வருபவை மாதாமாதம் கூடும் ஆரம்ப ஆசிரியர் சங்கங்களே யாகும். இதை மறுக்க முடியாது.

அச்சங்கங்கள் மூலம் பிரதிநிதிகள் ஆஜரானல் சரியான பிரதிநிதித்வம் வாய்ந்த மகாநாடென்று சொல்ல முடியும். இந்த ஆசிரியர் சங்கங்கள்தான் ஒழுங்காகக் கூடுகின்றன. மேலும் இந்த ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களில் ஒரு பிரிவுக்காக கூட்டப்பட்டதல்ல மேலும் கூடப்போகும் தமிழ் நாடு ஆரம்ப ஆசிரியர் மகாநாடு எல்லா ஆசிரியர்களுக்கும் ஏகப்பிரதிநிதி. அந்த அடிப்படையில்தான் ஆசிரியர் சங்கங்கள் இருக்கின்றன. ஆதலால் மகாநாட்டின் பொறுப்பாளர்கள் இதைக் கவனித்துத் தக்கது செய்தல் அவசியமாகும்.

### அரசாங்கம்.

மகாநாட்டின் தீர்மானங்கள் அரசாங்கத்தினிடம் சமர்ப்பிக்கப்பட்ட

## ஆசிரியர்கள் உலக சம்மேளனம்

சுதந்திர நாடுகளில் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து ஒரு உலக சம்மேளனம் நிறுவ ஏற்பாடாகி வருகிறது. கம்யூனிசத்திற்கு அடிமை யாகாத சுதந்திரப்பள்ளிக்கூடங்களில் சுதந்திர ஆசிரியர்களின் நிலைமையை உயர்த்தி அதன் காரணமாக சமாதானம் நிலவும்படிச் செய்வதற்கு இச் சம்மேளனம் வேலை செய்யும். இப்புதிய உலக சம்மேளனம் பின்கண்ட மூன்று ஸ்தாபனங்களையும் ஒன்று இணைத்த பின் ஏற்படும் இணைக்கப்படவிருக்கும் ஸ்தாபனங்கள் வருமாறு:— 1. உலக கல்வித்தொழில் ஸ்தாபனம், 2. எலிமெண்டரி பள்ளிக்கூட ஆசிரியர்களின் சர்வதேச ஸ்தாபனம், 3. செகண்டரி பள்ளிக்கூட ஆசிரியர்களின் சர்வதேச ஸ்தாபனம்.

முதலில் குறிப்பிட்ட உலக கல்வித் தொழில் ஸ்தாபனத்திற்கு 27 நாடுகளில் உறுப்பினர் உள்ளனர். இம் மூன்று ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் பாரிசில் கூடி புதிய உலக கல்வி சம்மேளனம் அமைப்பதற்கான நகல் திட்டத்தை பரிசீலனை செய்வார்கள். இந்தியா இம்மூன்றிலும் சேர்ந்திருக்கிறது

சம்மேளனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:—

சமாதானம், சுதந்திரம்; மனிதனின் கவுரவம், இவற்றைக் காப்பதற்காக, சர்வதேச உடன் பாட்டையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கும் வண்ணம் கல்வியின் நோக்கத்தை உருவாக்குவது.

2. வாலிபர்களின் நலன்களை நன்கு கவனிப்பதற்கேற்ற முறையில், போதனை முறைகளையும் கல்வி ஸ்தாபன அமைப்பையும் ஏற்படுத்துதல்.

3. ஆசிரியத் தொழிலின் உரிமைகளையும், நலன்களையும் காத்தல்.

---


பிறகு ஆராய்வதைவிட மகாநாடு கூடும்பொழுதே அம் மகாநாட்டில் எல்லா ஆசிரியர்களும் கலந்து கொள்ள வசதி செய்யவும் முறைகள் கையாளப்படுகின்றன, பூரண பிரதிநிதித்வம் பொருந்திய மகாநாடு தானா என்பதையும் அறிதல் முக்கியமாகும். சிலர் செய்யும் காரியங்களைப் பலர் செய்வதாக அரசாங்கம் கருதக்கூடாது.

நிலை.

எல்லா ஆரம்ப ஆசிரியர்களுக்கும் ஒரே சம்பளத் திட்டமில்லை, சலுகைகளுமில்லை, இடத்திற்கு இடம் வித்தியாசம். சட்ட சபையில் ஆசிரியர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்கும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தொடர்பில்லை, ஆரம்பக் கல்விக்கும் செகண்டரி கல்விக்கும் தொடர்பில்லை. இவ்வித நிலையில் இம்மகாநாடு கூடுகிறது. ஆசிரியர்களின் பிரதிநிதிகள் சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள்மூலம் மகாநாடு நடைபெற்றால்தான் க்ஷேமம். அஃதில்லாமல் குறைந்த எண்ணிக்கையுடன் ஆசிரியர்களை வைத்துக்கொண்டு மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்றதென்று சொல்லுவதில் பலனில்லை. இவை கவனிக்கப்படுமா?

Edited and Published by Sri A. K. S. Sarma, 87, Acharappan St., Madras
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint St. Madras—1

812



DEC 1950 MADRAS

A-50

# ஆதாரக்கல்வி

கோரியா யுத்தத்தில் அணுகுண்டு வீச அமெரிக்கா ஆலோசித்துவருவது அநீதி. அணுகுண்டை வீச அணுவளவும் நியாயமில்லை. முன்னர் வெற்றி வெறியில் அமெரிக்கா பிரத்தியட்ச உணர்வின்றி தவறு செய்தது. தற்போது காணப்படும் தாறுமாறான நிலையில் அதைவிடப் பன்மடங்கு கோரமான ஒரு தவறை, மனித சமுதாயம் ஒருபோதும் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றத்தைச் செய்ய அமெரிக்கா முன்வருவதைத் தீவிரமாக எதிர்க்கவேண்டும். உலக மக்களும் சமாதானப் பிரியர்களும் தக்கன செய்வார்களாக.

ஆதாரக்கல்வி காரியாலயம்,
நெ. 87, ஆச்சாரப்பன் தெருவு,
ஆண்டு சந்தா ரூ. 3] சென்னை. [தனிப்பிரதி அணா 4

# பொருளடக்கம்


பக்கம்.

1. அரசியலார் சூழ்ச்சி —தலையங்கம் 1
2. எதிரொலி —V. ராதாகிருஷ்ணு 3
3. ஆசிரியர் உள்ளம் —"சிகி" 6
4. நாட்டு நடப்பு 8
5. ஒலிபரப்பு—சி. பாலசுப்பிரமணியம் 9
6. சர்க்கார் உத்தரவுகள் 11
7. முதியோர்க் கல்வி—P. S. சுப்பையா 13
8. குழந்தைக் குற்றவாளிகள்—"சுராகசி" 15
9. ஈயார்த் தேட்டை தீயார் கொள்வர் —P. அண்ணுமலை செட்டியார் 18
10. ஆரம்பப் பள்ளியில் ஆட்சிமுறை —P. N. கல்யாணசுந்தரம் 21
11. மூலாதாரக் கல்வி—"ஆசி" 26
12. கலையரங்கு அட்டை 3
13. நாட்டாண்மைக்கழக மகாநாட்டிற்குத் தீர்மானங்கள் அட்டை 4


(பக்கம் 8 ன் தொடர்ச்சி.)

யர் அ. கி. சு. சர்மா அவர்கள் கிராம புனருத்தாரணத்தில் பெண்கள் கைத்தொழிலைக் கற்றல் முக்கியமான பங்கென்றும் அப்போதே கிராமம் செழிக்கும் என்றும் கூறினர். தலைமைவகித்த "இந்து" துணையாசிரியர் ரகுநாதன் அவர்கள் இவைபோன்ற பள்ளிகளை அரசியலார் ஏற்று நடத்த வேண்டுமென்று கூறினர். வந்தனோபசாரங் கூறிய வைத்தியநாதய்யர் பள்ளி நன்கு நடைபெற தங்களாலியன்ற உதவியைச் செய்யுமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

o o o o

சேவா சங்க மாலைக் கல்லூரி தொடங்கப்பட்டது. T. S. L. C., E. S. L. C., பரீக்ஷைக்குத் தயார் செய்யப்படும். கட்டணம் ரூ. 2-0-0. மற்ற விவரங்கள் ஸ்ரீராமமூர்த்தி சேவா சங்கம், அம்பத்தூர் என்ற முகவரிக்கு எழுதவும்.


SOCIAL PRINTERS,
PRINTERS & BINDERS,
396, MINT ST. G. T. MADRAS.





208924
சென்னை-600 008

கல்வி 3 | விக்ருதி, கார்த்திகை—டிஸம்பர் 1950 | கலை 8

# அரசியலார் சூழ்ச்சி

ஆசிரியர்த் தொகுதியை அபகரிக்கச் செய்த சூழ்ச்சியில் வெற்றி பெற்று விட்டார்கள் சென்னை அரசியல் வாதிகள். எல்லாவற்றிலும் முந்திக் கொள்ளும் சென்னை அரசியல் வாதிகள் இச் சூழ்ச்சியால் மற்ற மாகணங்களுக்கு சூழ்ச்சியில் வல்லவர்கள் என்பதை நிரூபித்துவிட்டார்கள்.

மேல் சட்டசபையில் ஸ்தலஸ்தாபன அங்கத்தினர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் தனித்தனியாகத் தொகுதிகள் அளிக்கப் பட்டுள்ளதுபோல் ஆசிரியர்த் தொகுதியும் கொடுக்கப் பட்டுள்ளது. நாட்டு மக்களை நன்னிலையில் நிற்கச்செய்ய அறிவைப் பெருக்கவும் எதிர்கால மக்களை உருவாக்கவும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு ஒரு தனித்தொகுதி வேண்டுமென்று இந்திய அரசாங்கம் நினைத்து அரசியலமைப்பில் சேர்த்து அளித்தமைக்குப் பாராட்டுகின்றோம்.

என்றாலும் சென்னை சட்டசபையில் ஆசிரியர்த் தொகுதிக்கு சென்னை சர்க்கார் ஒரு திருத்தம் கொண்டு வந்துள்ளது. பட்டதாரிகள் தொகுதி, ஆசிரியர்கள் தொகுதி, ஸ்தலஸ்தாபனத் தொகுதிகளிலிருந்து புதிய அரசியல் சட்டப்படி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கப்படவேண்டியிருப்பதால் இத்தொகுதிகளின் வாக்காளர்களாக இல்லாதவர்களும் அபேட்சகர்களாக நிற்கலாம் என்பதை அனுமதிக்க வேண்டுமென்று சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்து அங்கீகாரமும் பெற்றுவிட்டது. இதனால் அத்தொகுதிக்குரிய வாக்காளர்களும் மற்ற வெளியார்களும், இத்தொகுதிகளில் அபேட்சகர்களாக நிற்கலாம். இதன்மூலம் ஆசிரியர்களின்

ஸ்தாபனங்களில் பதவி வகிப்பவர்களும், மற்றும் ஆசிரியர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களும் அபேட்சகர்களாக நிற்கலாம். ஆகையால் ஆசிரியர்த் தொகுதிகளில் ஆசிரியர்களே தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும் என்ற கட்டுப்பாட்டை நீக்கி அவர்கள் தொகுதியை அபகரிக்க அரசியல் வாதிகள் செய்த சூழ்ச்சியாகக் காணப்படுகிறது. இச்சூழ்ச்சியால் அரசியல் வாதிகள் மெஜாரிட்டியைப் பெறுவதோடன்றி செல்வாக்குள்ளவர்களும், பணமூட்டைகளும் அங்கத்தினர்களாகிறார்கள். இது பணமுள்ளோருக்குப் பவிசும் தவிசும் கொடுத்து பண்பட்ட உள்ளம் படைத்த ஆசிரியர்களைப் படுகுழியில் தள்ளும் சூழ்ச்சி.

சட்ட சபையில் நாட்டின் நல்வாழ்விற்கும் நற்பெயருக்கும் உகந்த வழிமுறைகளையும் துறைகளையும் எடுத்துக் கூறுவதோடு, எக்கட்சி எக்காலத்து எவ்வித ஆதிக்கம் பெற்றாலும் அக்கட்சி, நாட்டின் பண்பாட்டிற்கு முரண்பட்டு, அரைசுகோல் கோடின் அடுக்கும் ஈது அடாது என்று ஆன்ற ஏதுவோடறிவு காட்டி இடித்து எடுத்துரைத்து, அரசியல் வாதிகளின் அகந்தையால் எழும் கோளாறுகளை நீக்கி, அரசியல் போக்கையே திருத்தியமைக்கும் ஆற்றல்பெற்ற அறிவின் சிகரமென விளங்கும் ஆசிரியச் சமூகத்தை சட்ட சபையில் நுழையாவண்ணம் செய்யும் சதி.

நாட்டைப்பற்றியும், நாட்டின் தனி கலாசாரத்தைப்பற்றியும், நாட்டு மக்களுள் நல்லுறவும் நல்லெண்ணமும் ஏற்பட அறிவை வளரச் செய்யவும், நாட்டு மக்கள் வாழ்க்கையில் அச்சமகற்றி ஆண்மையூட்டி, அழுக்காறின்றி ஆதரவு பெறச்செய்து, வறுமை நீக்கி நிறைவுகொண்டு, அறியாமை யிருளற்று அறிவு வொளியுடன் கட்டுப்பாட்டின் வழியில் நின்று மக்கள் வளம்பெற ஆவன செய்து, தாம் நாள்தோறும் நல் வாழ்க்கை வாழாது நலிந்து நவை நீருகுத்துப் பட்டினி கிடந்தபோதிலும் தேச நலனை உணர்ந்து உலகத்தோடு ஒத்துறுத்து உதவிசெய்து வாழும் உயர்ந்த ஆசிரியர்களுக்கு உலைவைக்கும் சூழ்ச்சி.

அரசியல் வாதிகளின் கையில் சிக்கி அவதிபட்டுச் சீரழியும் ஆசிரியர்த் தொகுதியே இப்படி இருக்கிறதென்றால் ஆசிரியர்த் தொகுதி ஏற்பட்டதின் அடிப்படைக் காரணமாக இலங்கும் கல்வி முன்னேற்றம் எங்ஙனமிருக்கு மென்பதைக் கூறுமலேயே! அறியலாம்.

மேலும் இச் சூழ்ச்சியை யறியாது மத்ய சர்க்காரும் சென்னை சர்க்காரின் வேண்டுகோளுக்கு இசைந்தது அறிவீனம். நாடு நன்னிலையில் தனி சிறப்புடன் இலங்க, நாட்டு மக்கள் நல்லறிவுடன் நலம் பல பெற்று நல்வாழ்க்கை வாழ, பொருளாதார நெருக்கடி ஏற்படாது மக்கள் தங்கள் நிலையை யுணர்ந்து தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் சுயதேவைப் பூர்த்தித் திட்டத்துடன்



# எதிரொலி

## "பொருளியல்"

V. ராதாகிருஷ்ணு B. Com.

1. "வெளிநாட்டுப் பண்டங்களை வாங்குவதால், நம் பணம் வெளி நாட்டிற்குப் போகிறது; உள்நாட்டுப் பண்டங்களை வாங்குவதால், பணமும் பண்டமும் இங்கேயே வருகிறது"—என்று அமெரிக்கா படைத்த ஆப்ரஹாம் லிங்கன் கூறிய பொன்மொழிகளை ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு நாட்டுப் பொருளாதாரம் இந்த முறைப்படிதான் அமைந்திருக்கிறது. எந்த நாடு உற்பத்திப் பெருக்கில் மிகவும் பிற்போக்கிலிருக்கின்றதோ அந்தநாடு எடுத்ததற்கெல்லாம் தன் தேவைக்கு வெளி நாட்டைத்தான் எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. வெளிநாட்டுப்பண்டங்களை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டி இருக்கிறது. அதனால் பணம் அங்கு போய்விடுகின்றதே என்ற நோக்கம் மட்டுமல்ல; நம் நாட்டு ஏழை உழைப்பாளிகளை வேலையில்லா நிலையில் தத்தளிக்கவும், அயல் நாட்டுத் தொழிலாளிகள் ஆனந்தமனுபவிக்கவும் நம் அறியாமையை ஏணியாக்கி அதில் நம் பிற்போக்கானப் பண்பாட்டின் காரணமாக இரத்தவேர்வை நிலத்தில் விழ சம்பாதித்த பொன்னை மூட்டைகட்டி யனுப்புகிறோம்; இதைச் சிந்தித்தவருண்டா? சிந்தித்திருந்தால் இரும்புப் பெட்டிகளில் உறங்கிக்கிடக்கும் பணம், எதனெதன் பேராலோ சேர்க்கப்பட்ட பணம், ஏழையின் பசிக்குரலுக்கும் செவிட்டுத் தன்மையுடன் பதுங்கிக்கிடக்கும் பணம் வெளி வந்திருக்க வேண்டும். வெளிவந்து இயந்திர சாலைகளாகவும், ஏழை உழைப்பாளியின் உணவுதரும் உற்பத்திச் சாலைகளாகவும் தோற்ற மளித்திருக்க வேண்டும் அரசியலார் இவ்விஷயத்தில் மக்களுக்குப் போதிய பிரசாரமளித்து உண்மையைவிளக்கவில்லை யென்றே ஓரளவு கூற வேண்டி இருக்கிறது. நாகரீகம் பண்பாடடைய நம் நாட்டுப் பொருளாதாரம் மேன்மையடையவேண்டும். Economy in itself a source of great revenue என்ற தத்துவத்தை மக்கள் மதித்து தம் தம் தனிப்பட்ட வாழ்க்கை நடத்த

சுதந்திரமாக வாழ, உலகத்தோடு ஒத்த அறிவினைப்பெற்று மக்கள் மலர்ச்சிபெற கல்வி, கண்ணியமுள்ளகருந்தனமெனப் போற்றும் அறிஞர்களின்வசம் இருக்கச் செய்யவேண்டும். அரசியல்வாதிகளின் அடக்குமுறையினின்றும் விடுபடவேண்டும். இந்தியக் குடியரசு உதயத்துடன் இந்திய சுப்ரீம் கோர்ட்டுமூலம் நீதி பரிபாலனத்துறையில் நாடு பரிபூரண விடுதலை யெய்தியதுபோல கல்வியும் அரசியல்வாதிகளின் கையினின்றும் பிரிக்கப்பட்டு அறிஞர்கள்வசம் ஒப்புவிக்கப்படல்வேண்டும் அப்பொழுது கல்வி நிலை ஓங்கும். நாடுநாடாக, நல்லறிவு பெற்றமக்களுறையும் நாடாக ஆகும். எனவே கல்வித் தொண்டர்கள் அந்தரங்க சுத்தியுடன் ஆவன செய்வார்களாக

வேண்டும். அயல் நாட்டுப் பொருளாதார அபிவிருத்தியின் காரணமாகத்தான் இன்று அந்நாடுகள் உலக அரங்கில் உன்னத நிலையில் இருக்கின்றன. உதாரணமாகப் பொருளாதாரத் துறையில் இன்று முன்னணியில் நிற்கும் அமெரிக்க நிலை என்ன? "போஸ்டன் டீபார்த்" என்று சொல்லுகின்ற (No taxation, No representation) கிளர்ச்சியே அந்நாட்டு அபிவிருத்திக்குக் காரணம். ஆயிரமாயிர வருஷங்களாகச் சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை. சமூக முற்போக்கில் மக்கள் தங்கள் மதிப்புமிக்கத் தலைவர்கள் தலைமையில் திட்டமிட்டனர், சட்டமாக்கினர், செயல் முறையில் காட்டினர். சரித்திரகாலம் குறுகியதுதான், ஆனால் அவர்களின் ஆவேச மனப்பான்மைதான் பெரிது. நிலப் பரப்பிலும், ஜன சங்கியையிலும் நம் நாட்டிற்கு எவ்வளவோ குறைவாயுள்ள ஜப்பானியர் தம் வளம்மிக்க குடிசைத் தொழிலில் எப்படி நாட்டை முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்தனர் என்பதை ஞாபகமூட்டிக்கொள்ளுங்கள். உலக மகா இரண்டாம் போரில் திறம்மிக்க செயல் புரிந்த இங்கிலாந்தின் பொருளாதார சீர்திருத்தங்கள் எப்படி என்று எண்ணிப்பாருங்கள். இன்று சகிக்க முடியாத சந்தர்ப்பத்திற்குள்ளான திபெத், கொரியா, நேப்பாள நிலையை எண்ணிப் பாருங்கள். பொருளியலில் ஏற்படும் கோளாறுகளின் காரணமாகத்தான் இத்தனை ஏற்றத் தாழ்வுகளும்.

எந்த நாடு சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளாத நிலையில் இருக்கிறதோ, அந்த நாட்டைத்தான், மற்ற நாட்டார் பழிப்பார்கள். நாட்டுப் பொருளாதாரம் முன்னேற்றமடைய தனி மனிதனுடைய ஓயா உழைப்பு அவசியம். இல்லையேல் உறுப்படியாக எதையும் சாதித்துவிட முடியாது. இந்த பொருளியலைப் பாதுகாக்க மக்கள் (Put not your trust in money, but put your money in trust—O. W. Holmes) நம்பிக்கையில் பொருளை யடக்கித் தொழில் புரிய வேண்டும். மக்கள் இன்றைய உலக நிலையை நன்று உணர வேண்டும். (Society is composed of two great classes; those who have more dinners than appetite and those who have appitite than dinners—chamfort.)

கடமை மறந்து மக்கள் கதி கலங்கி நிற்கும் இன்றைய நிலையில் உணர்ச்சிப் பாதைப் புதுப்பிக்கப்படவேண்டும், அதில் மக்கள் உணர்ச்சி ஊற்றெடுத்து ஓட வேண்டும், இதற்காக மக்கள் மன்றம் மதிப்புடன் துணை புரிய வேண்டும்.

நம் நாட்டில் கிடைக்கின்ற அமோகமான மூலப் பொருள்களை நாமே நம்நாட்டில் தேவைப் பொருள்களாக்கிக் கொள்ள வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் அறவே மாற்றப்பட வேண்டும். மக்கள் அனைவரும் கல்வி பயிலவேண்டிய வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.



வியாபாரக் கொள்கைகளில் அதிகமான சலுகைகளைக் கையாளவேண்டும். உற்பத்திப் பெருக்கம் வரி விலக்குடன் நடத்தப்படவேண்டும். விற்பனை வரி ஓர் இடத்தில் அதாவது உற்பத்தியான இடத்திலேயே விதிக்கப்பட்டு மற்ற இடங்களில் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். வருமான வரியைப்போன்றே விற்பனை வரியும் நாடு பூராவும் ஒரேமுறையாக அமைக்கப்படவேண்டும்.

நீர்ப்பாசன திட்டங்கள் முதலில் கவனிக்கப்பட்டு உணவுப் பெருக்கம் பெருமளவில் செய்யப்பட வேண்டும். நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்படுகின்ற அளவிலேயே மின்சார நிலையங்கள் அமைக்கப்பட்டுத் தொழிற்சாலைகளும் நிறுவப்பட வேண்டும். அந்தந்த பிரதேசங்களுக்கு ஆங்காங்குத் தொழில் தரப்பட்டு சுபிக்ஷத்தை நிலை நாட்டவேண்டும்.

இதற்கெல்லாம் மேலாக தற்சமயம் நம் நாட்டில் தொழில் நுணுக்க மறிந்தவர்கள் மிகக் குறைவெனும் விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். சம்பந்தமற்ற நிலையில் இதுவரை பயிற்றுவிக்கப்பட்டக் கல்விபோலல்லாது, கற்கும் கல்விக்கும், எதிர்கால வாழ்க்கைத் திட்டத்திற்கும் தொடர்புள்ள கல்வி கற்பிக்கப்படவேண்டும். கூடியவரை இன்னும் இருபது வருஷங்களுள் பெருமளவில் தொழிற் கல்வி மிகவும் சிரத்தையுடன் போதிக்கப்படவேண்டும். தொழிற் கல்வி கற்ற ஒவ்வொருவரையும் அரசாங்கம் ஏற்று பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இப்படி எல்லாம் செய்தால், தான் நாட்டில் தொழில் பெருகும். தொழில் பெருக்கத்தால் பொருளாதாரம் சீருடன் சிறப்படையும்; மக்கள் வாழ்க்கைத் தரம் உயரும். நாட்டுப் பொருளாதாரத்திற்குத் தொழில் பெருக்கம் எவ்வளவு முக்கியமோ, போக்குவரத்துக்கள் ஏற்படுத்துவதும் அவ்வளவு முக்கியமாகும். கப்பல்கள் கட்டப்படவேண்டும். நம் நாட்டுப் பண்டங்கள் வெளி நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். நம் தொழில் பெருக்கத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற யந்திரங்கள் முதலானவை இறக்குமதி செய்யப்படவேண்டும்.

தனிப்பட்டோர் தொழில்கள் அரசாங்கத்து உதவியால் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அயல் நாட்டில் பாங்குகள் அந்நாட்டுத் தொழில் பெருக்கத்திற்குச் செய்யும் வசதிகள் போன்று நம் நாட்டிலும் செய்யப்படவேண்டும். தொழில்கள் அரசாங்க மயமாக்கப்படுவது அவ்வளவு சிறந்ததல்ல. அரசாங்கம் மிகவும் ஜாக்கிரதையான கண்காணிப்பு கொண்டிருக்கலாமே யல்லாது எல்லாம் தான் ஏற்று நடத்துவதென்றால் அவ்வளவு பொருத்தமாகாது. நம் நாட்டு உயிர்ப் பொருள்கள் விற்கப்படும்போது அத்தியாவசிய தேவைப் பொருள்களையும் உத்தேசித்துப் பண்டமாற்று முறையை அனுசரிக்கலாம்.

# ஆசிரியர் உள்ளம்

"சிகி"

வணக்கம் வாருங்கள், சென்ற மாதத்தில் உங்களைப் பார்க்க முடியவில்லை, மன்னிக்க வேண்டும்!

எப்படிப் பார்க்கமுடியும்! நீங்கள் மன்னார் குடியைப்பற்றி நினைத்துக்கொண்டே இருக்கிறீர்கள்! மன்னார்குடியோ...

என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? மூன்று இடங்களில் தலைவர்கள் கூடி மன்னார் குடியில் மகாநாடு நடத்துவதென்று முடிவு செய்திருக்கிறார்கள்! எப்படி நடக்காமலிருக்கும்? ஒத்திவைக்கப்பட்டு வரும் அம் மகாநாடு ஒரு நாள் நடந்தே தீரும்!

சரி, நடக்கட்டும், யார் வேண்டாமென்றார்கள்? இதைப் பார்த்தீர்களா? சென்னை எய்டெட் பாடசாலை ஆரம்ப ஆசிரியர் மகாநாடு! இதுவும் மகாநாடொன்றை நடத்தப் போகிறதாம்!

நடக்கட்டுமே! மூலைக்கு மூலை ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாட்டை நடத்தி குறைகளை அரசாங்கத்தினிடம் முறையிட்டால் தானே நல்லது!. ஒன்றும் சொல்லாது மௌனமாக இருந்து கொண்டு கஷ்டம் கஷ்டமென்று ஜபம் செய்தால் போதுமா! இன்னொன்று பாருங்கள், இதுதான் சுவாரஸ்யம்! ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு

சீக்கிரமே நடைபெற இருக்கின்ற வாக்கு கணிப்பின்போது மக்கள் தங்கள் உரிமையை எளிதில் பலிகொடுத்து விடக்கூடாது. தியாக புத்தியுள்ள தன்னம்பிக்கைக் கொண்டத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். கல்வியறிவு, உலக அநுபவம், பாராளு மன்றத்தில் கருத்தெடுத்துச் சொல்லக் கண்ணியமான பேசுந் திறன், நல்லது கெட்டது உணர்ந்து நடக்கும் பண்பாடு முதலியன கொண்ட தலைவர்களைத்தான் வரவேற்கவேண்டும். வியாபார சங்கங்களின் பிரதிநிதிகளாகப் பாராளும் மன்றம் புகும் தோழர்கள் தப் பணியை எள்ளளவும் தவறுமல் செய்யும் சங்கல்ப சித்தி பெற்றிருக்கவேண்டும். மக்கள் தங்கள் உரிமைப் போரில் உண்மை வெற்றியடைய ஆவன செய்யவேண்டும். [அங்கு பொருளியலின் ஒரு கிளை தாமாகப் பொறுப்பேற்கலாம். அதை அவ்வளவிற்கு விடாமல் அடக்கி உள்ளமை உழைப்பைப் பயன்படுத்தவேண்டும்.]

நாட்டில் மக்கள் தங்கள் வாழ்க்கையை செம்மையாய்நடத்த ஆங்காங்குப் பாங்குகள் ஏற்படுத்தி அவரவர்கள் உற்பத்திப்பொருள்கள்மேல் முன் கூட்டியே குறைந்த வட்டிக்குப் பணம் தந்து உதவிசெய்யவேண்டும். ஏழை எளியவனும் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்ற முறையில் ஆகூநிமுறை அமைக்கப்படவேண்டும். இப்படியெல்லாம் செப்பனிடப்பட்ட திட்டங்கள் அமல் நடத்தப்பட்டால் தான் நாட்டுப் பொருளாதாரம் மிகவும் சீர்தூக்கி நிற்கும்.



வரும் சம்பளத் திட்டத்தைக் காட்டிலும் கார்ப்பரேஷனில் அதிகம். கார்ப்பரேஷனில் ஆசிரியரின் ஆரம்பச் சம்பளமும் உயர்வு, வருட உயர்வும் அதிகம். அதே மாதிரி எய்டெட் பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லை. எல்லா எய்டெட் பள்ளிகளுக்கும் மான்யம் கொடுபடுவது போலவே தான் சென்னை எய்டெட் பள்ளிகளுக்கும். இதில் ஏன் வித்தியாசமில்லை? கார்ப்பரேஷன் ஆசிரியர்களுக்கு இதர ஸ்தலஸ்தாபன ஆசிரியர்களைக்காட்டிலும் கொஞ்சம் அதிகமாக கொடுப்பதற்கிருக்கும் காரணம் சென்னை எய்டெட் பாடசாலைகளுக்கும் பொருந்தாதா? ஒரு ஊரிலே இரண்டு விகிதம்! இதை சென்னை எய்டெட் பாடசாலை ஆசிரியர் மகாநாடு கவனிக்குமா?

கவனிக்காமலா இருக்கும்? இன்னொரு விஷயம். சென்னையில், முதலில் ஒரு யூனியன், பேஞ்சு பிரிக்கப்பட்ட பிறகு அந்த யூனியன் சின்ன பின்னமாகி விட்டது. குறுகிய எல்லையைக் கொண்ட யூனியன் சென்னை முழுதும் பாதகியதை கொண்டாட வேண்டுமாயின், முதலில் கூட்டம் போட்டு புதிய தேர்தல் நடத்தினுல்தான் நல்லது. அதுதான் முறை. முறையுடன் நம் குறைகளைச் சொல்ல வேண்டும்.

"குறை" என்று சொன்னவுடன் நம் ஆபீசர்களின் ஞாபகம் வருகிறது!.

என்ன ஐயா? ஆபீசர்களுக்கு? பூசைவேளையில் கரடியை விட்டு ஓட்டுகிறீர்களே!

ஒன்றுமில்லை, அதோ பாருங்கள் மார்கட்டுக்குப் போய் அந்த ஆபீசரே காய், கறி வாங்கிவருகிறார்? பாருங்கள்!

விஷயம் தெரியாதா உங்களுக்கு! ஆபீஸ்பியூன்கள் ஆபீசு வேலைக்காக சம்பளம் பெற்றுக் கொண்டு ஆபீசர்களின் வீட்டு வேலை செய்ய வேண்டிய நிலையிலிருந்தார்கள். ஆபீசர்களின் வாக்கு வேத வாக்கு! வீட்டு வேலை சரிவர செய்யவில்லை என்று ஆபீசர்களின் வீட்டில் சொல்லப்பட்டு விட்டால் அந்தப் பியூன் நிலை சொல்ல முடியாது. எப்படியோ அரசாங்கம் பியூன் தொல்லையை ஒழிக்க முற்பட்டு விட்டது. இனிமேல் பியூன்கள் அரசாங்க சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு ஆபீசர்களுக்கும் ஆபீசர் மனைவிமார்களுக்கும் ஆபீசர்களின் உறவினர்களுக்கும் வேலை செய்யக் கூடாதென்று உத்திரவு வந்து விட்டது. அதை மீறி நடக்கும் ஆபீசர்களை அரசாங்கம் கவனிக்கும்! புரிந்ததா? இதனால் அந்த ஆபீசர் பையைத் தூக்கிக்கொண்டு மார்க்கட்டுக்குப் போகிறார்! ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றி ஒரு உத்திரவு வந்திருந்ததே பார்த்தீர்களா?

இது தானே! ஆசிரியர்கள் நாக வேலை செய்யும் கட்சிகளில்....

ஆமாம், ஆமாம், ஆசிரியர்களுக்குக் கட்சி எதற்கு! கல்விக்கு உழைப்பவர்கள் கட்சியில் சேரலாமா? அப்படிச் சேர்ந்தால் பள்ளிகளின் நிலை என்னாகும்? கட்சி வாதிகளிடம் கல்வி பாரப்பும் பொறுப்பு இருந்தால்

நாட்டுக்கு நல்லதாகுமா? கட்சி சார்பற்று ஆசிரியர்கள் கல்விக்கு உழைத்தல் அவசியம். கல்வி இலாகா டைரக்டர் போட்ட உத்திரவை நான் வரவேற்பவன்.

சரி, பெரிய பெரிய ஆபீசர்கள் எல்லாம் கட்சியை வைத்துத்தானே நடக்கிறார்கள்.

ஆபீசர்கள் பகிரங்கமாக கட்சியில் சேர்ந்து பேச முற்பட்டால் அவர்கள் நிலை என்னாகும்? வேறு வேலை பார்த்துக் கொள்ள வேண்டும்! ஆபீசர்களெல்லாம் படித்தவர்களல்லவா? திரைமறைவில் அப்படி இப்படிச் செய்வார்கள். அரசாங்கத்துக்குத் தெரிந்து விட்டாலும் சரி, நம்மைப் போன்றவர்கள் இவர்களை வெளிக்குக் கொணர்ந்தாலும் சரி அவர்கள் கதி அதோ கதிதான்! ஞாபகமிருக்கட்டும்!

சரிசரி, வேஷத்தைக் கலைத்து விட்டால், எல்லாம் சரியாகப் போய்விடும். ஒரு வேஷம்பாருங்கள். மேலிருக்கும் அதிகாரிகள் எந்த வேஷத்தில் தோற்றமளிக்கிறார்களோ, அந்த சாயத்தைப் பூசிக்கொண்டு கீழ் அதிகாரிகளும் ஆடுகிறார்கள். மேலிருப்பவர்கள் சரியானவர்களாக இருந்தால் கீழ் எல்லாம் சரியாகிவிடும். நாழிகையாகிறது, வருகிறேன்.

# நாட்டு நடப்பு

சேலம் நகர ஆரம்ப ஆசிரியர்க் கூட்டம் 11-11-50 சனிக்கிழமையன்று சேலம் ரேஞ்சு சீனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் உயர் திரு. S. சுப்பிரமணிய சாஸ்திரிகள் B. A., L. T., தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கங்கவள்ளி சர்க்கார் ஆதாரக் கல்வி போதனாமுறைப் பள்ளித் தலைவர் உயர் திரு. G. ரகோத்தமராவ் B. A., L. T. "ஆதாரக் கல்வி" என்பதைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார். கிழக்கு வட்டாரக் காரியதரிசி ஸ்ரீ M. S. ராஜுலு வந்தனோபசாரங்கூற தேச வாழ்த்துடன் கூட்டங் கலைந்தது.

o o o o

1951 பிப்ரவரி 9 முதல் 13 தேதிவரை இரண்டாவது தென்னிந்திய முதியோர்க் கல்வி வாரத்தை நடத்த தென்னிந்திய முதியோர்க் கல்விச் சங்கத்தாரால் ஒரு மத்திய கமிட்டி, கல்வி மந்திரியைத் தலைவராகக்கொண்டு அமைக்கப்பட்டது. பொதுத் தேர்தலில் வயது வந்தோர்க்கு ஓட்டுரிமை உண்டாகையால் முதியோர்க் கல்வியைப் பரப்புவதற்கு அவசியம் என மந்திரி மாதவமேனன் அவர்கள் குறிப்பிட்டார்.

o o o o

திரு. வி. சீனுவாசப்பிள்ளையவர்கள் 21-11-50 இறைவனடிசேர்ந்தார் என்பதைக் குறித்து ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறோம். 27 வருடங்களாக ஆசிரியராக இருந்து பற்பல சங்கங்களோடு தொடர்புகொண்டு 1947 மார்ச்சில் நடந்த மாகாண ஆசிரிய மகாநாட்டிற்குத் தூதுசென்றவர். அவர் குடும்பத்திற்கு ஆசிரியர்களின் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

o o o o

வெங்கடாபுரம் கைத்தொழிற் பெண் பாடசாலை ஆண்டுவிழா இம்மாதத்தில் நடைபெற்றது. வரவேற்புப் பேசுகையில் ஆதாரக் கல்வி ஆசிரி



அட்டை 2-ல் பார்க்க.

# ஒலிபரப்பு

(சி. பாலசுப்பிரமணியம்)

ஆதாரக்கல்வி:—இப்பத்திரிகை நமது வேண்டுகோளின்படி ஒவ்வொரு சிறு வட்டத்திற்கும் தனிப்பட்ட ஆசிரியர்களுக்கும் 1948 ம் ஆண்டு மே முதல் பத்திராதிபரவர்களால் அனுப்பப்படுகிறது. ஒவ்வொருவரும் இதன் மூலம் அவரவர்கள் எண்ணங்களையும் புத்தம் புது கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளலாம். இது ஆசிரியர்களுக்காகவே மிகுதியாக உழைத்து வருவது கண் கூடு. நமக்கென்று தனி வெளியீடு கிடையாது. வேண்டுமென்று கோரியும் கல்வி இலாகாத் தலைவர் நிராகரித்திருக்கிறார். பல சங்கங்களினின்றும் "ஆசிரியர்களுக்கென ஒரு தனி பத்திரிகை இருக்க வேண்டுமென்பதைவற்புறுத்தி தீர்மானஞ் செய்து அனுப்பினால் நல்லதல்லவா? பலரது ஒன்றுபட்ட கருத்தே ஒன்றை உருவாக்கக் கூடிய தென்பதை தாரக மந்தரமாகக் கொள்க. இதனைச் சங்கங்கள் செய்யும் என்று எண்ணுகிறோம்.

ஆதாரக் கல்வி பத்திராதிபர் நமது வேண்டுகோளை நிறைவேற்று முகத்தானே பணி புரிகிறார். அன்னவர் நமக்கு உதவி புரிவதற்கு நாம் எவ்வளவு கடமைப் பட்டுள்ளோம் என்பதை உன்னிப் பாருங்கள். காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் பெரிதல்லவா? இந்தச் செய் நன்றியை மறத்தல் நன்றல்லவே "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியும்" என்ற மணிவாசகத்துக்கு இணங்க பணமின்றேல் எங்ஙனம் தொண்டு ஓங்கும்? மறதி காரிய நாசம். ஆகவே அனைவரும் பத்திரிகை வரும் நாளிலிருந்து பாக்கியைச் செலுத்தி அவர்களது ஆதரவையும் அன்பையும் அளிக்க முன் வருவார்களாக. தவிர ஸ்ரீபெரும்புதூர் வட்டத்திலுள்ள 139 பள்ளிகளும் பள்ளிக்கு ஒன்று வீதம் வரவழைக்க முற்பட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். இது நமது ஒற்றுமை வளர்ச்சியின் முயற்சியை ஊக்குவிக்குமோர் அளவு கோலாகும். பொறுப்பையும், கடமையையும், அவசியத்தையும் உணர்ந்து இதன் மூலம் சமூக வளர்ச்சிக்கான செயல் புரிவார்கள் என்று நம்புகின்றோம்.

ஆசிரியர்கள் தங்கள் தேவைகளையும் எண்ணங்களையும் இதில் வெளியிடுகின்றார்கள். அவைகளை ஆட்சியாளர், ஸ்தல ஸ்தாபனங்கள், மானேஜர்கள், மற்றையோர் துருவிப் பார்த்து இயன்றவைகளை அமுலாக்க முயற்சிப்பதே அவர்கள் தலையாய கடனாகும். அதுவே அவர்களது மதிப்புக்கும் ஓர் உரைகல். உளுத்துப்போன, சமூகத்தை

ஒடுக்கவல்ல பழைய சட்டங்களை இன்றைய நிலைக்கு ஏற்றபடி மாற்றியமைப்பதன்றோ சுதந்தர நாட்டிற்கு அழகு! நாடு நம்மதென மதித்து நம் தலைவர்கள் தரும் சிறந்த திட்டங்களை ஏற்று நடத்த விழிப்புடனிருப்பதை ஏனையோர் அறியாதது ஏனோ?

ஆசிரியர்கள் ஒருவர்க்கொருவர் அவர்களது அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டு சிறந்த செயலாற்றுபவர்களாக விளங்கவேண்டுமென்பதே நம் அவா. அஃதேயுமன்றி ஒவ்வொருவரும் கட்டுரை எழுதவும் உரை நடை வரையவும் பழகிச் சிறந்த எழுத்தாளராகவும், நூலாசிரியராகவும் விளங்கக்காண வேட்கையுமுண்டு. பலராது சீரிய கருத்துக்களை புடைப் படைவைத்து, ஆராய்ந்து, மெய்யறிவையும், விழிப்பையும் கொடுக்கும் வகையிலே சீர்திருத்தக்காரராகத் திகழின் என்னும் என்ற நினைப்பும் உண்டு. அயரா உழைப்பால் தொண்டாற்றி புகழ்பெறு வகைக் கொள்வது தானே இன்பம்! இவை எல்லாம் எண்ணுமா உள்ளம்?

சிறு வட்டங்கள் கூடிக்கலையும் அளவிலே இன்னமும் இருப்பதாக அறிகிறோம். ஏன் அதில் கலந்து கொள்கின்றனர்? காரணம், வெளிப்படையாய் உள்ளதே, சிறு விடுதி இழக்காமலிருக்கும் பொருட்டு, செயலாளர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு வழக்கமான கூட்டத்திற்குப் பிறகு மற்றவர்களை இருக்கச் செய்து மானேஜ்மெண்டுகள், அரசியலார், அதிகாரிகள், ஆசிரியர்கள் முதலியோர்கள்பால் காணும் குறைகள், நிறைகள், கல்வி சம்பந்தமான அரசியலார் கொள்கைகள், பிரசங்கங்கள், கருத்துகள் முதலியன பற்றி ஆராய்ந்து அதன் முடிவை அந்தந்த தாலூகாக் கமிட்டிகளுக்கு அவ்வப்போது அனுப்பி காரியசித்திக்கு வழிகோல முயன்றால் பெருநலமடையலாம் அல்லவா? இதர ஆசிரியர்களும் பொறுப்புணர்ச்சியுடன் சங்கச் செயலாளர்களுக்கு உறுதுணையாயிருந்து பிரச்னைகளை ஆர்வத்துடன் அலசிப்பார்க்கும் வகையாலே கட்டுப்பாட்டை விருத்தி செய்து கொள்வதோடு மதி நுட்பமும் நூலறி புலமையும் பெறலாமன்றோ!

சங்கச் செயலாளர்களும் பிற ஆசிரியர்களும்:—திங்கள் தோறும் சில வட்டங்களில் எல்லா ஆசிரியர்களும் கூடுகின்றார்கள். கல்வி ஆய்வாளர்கள் ஆணைப்படி எங்கோ மானாலும் இருக்கின்றார்கள். அங்கு அறிந்து செல்வது பற்றி கூறத் தேவையில்லை. பல

நமக்கு இடையூறாக அநேக நிர்பந்தங்களும் தடைகளும் உள, எனினும் நாம் விரும்புவது போல் தமிழ் நாடு ஆரம்ப ஆசிரியர்கள் ஐக்கியத்தை உருவாக்கும் பொறுப்பு செண்டர் செயலாளர்களிடமே உள்ளது. அவர்



# எடுகேஷன் டிபார்ட்மெண்ட்

## சர்க்கார் (G. O) உத்தரவுகள்

ஆரம்பப் பள்ளிகளை அங்கீகாரம் செய்வதுபற்றியும் உதவி செய்வது பற்றியும் உள்ள சட்டங்களுக்குத் திருத்தம்.

(G. O. M. S. No. 2570

எடுகேஷன் 17 அக்டோபர் 1950.)

21 ஆகஸ்ட் 1939 எடுகேஷன் டிபார்ட்மெண்ட் குறிப்பு No. 2433 யுடன், 29 ஆகஸ்ட் 1939ம் தேதிய போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டின் பாகம் 1—Bயில் 556—568 பக்கங்களில் பிரசுரிக்கப்பட்ட, ஆரம்பப் பள்ளிகளை அங்கீகாரம் செய்வது பற்றியும் அவற்றிற்கு உதவி செய்வதுபற்றியும் உள்ள சட்டங்களுக்குக் கீழ்க்கண்ட திருத்தம் செய்யப்படவேண்டும்.

### திருத்தம்.

அதிகாரம் III:—பள்ளிக்கூட கட்டடங்கள், விளையாடுமிடங்கள் ஆகியவற்றிற்கு கிராண்ட் செய்வதுபற்றிய சட்டங்கள்—விதி 8 – கிணறு வெட்ட கிராண்டுகள்—இந்த விதியில் முதல் வாக்கியத்திற்குப் பிறகு "மேனேஜ்மெண்டார்கள் பள்ளிக்கூடத்தின் தேவைக்குப் போதுமான எளிய முறையில்தான் கிணறுகளை வெட்டவேண்டும். எல்லா கிணற்றுத் திட்டங்களுக்கும் கிராண்ட் தொகை ரூ. 500 என்று வரையறுக்கப்படவேண்டும்" என்பதைச் சேர்த்துக்கொள்ளவும்.

### ஆங்கிலோ இந்தியப் பாடசாலைகளுக்குள்ள ஒழுங்குச் சட்டங்களுக்குத் திருத்தம்.

(G. O. M. S. No. 2871

இதில் உள்ள ஆர்டிகிள் 131 (C) க்குப் பதிலாகக் கீழ்க்கண்டதைச் சேர்க்கவேண்டும்:—

131 (C) "ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் தேவைகளைக் கவனித்த பிறகு ஆங்கிலத்தைப் போதனா பாஷையாகக் கொள்ள விரும்பும் ஆங்கிலோ இந்தியரல்லாத பிள்ளைகளை, பள்ளிக்கூடத்தின் மொத்தத் தொகையில் 50 சதவீதத்திற்குமேல் சேர்த்துக்கொள்ள சென்னை டைரக்டர்ஆப்பப்ளிக் இட்ன்ஸ்ட்ரக்ஷன் ஒரு ஸ்பெஷல் உத்தரவு மூலம் ஏதாவதொரு பள்ளியை அனுமதித்து, மேலும் அவ்வாறு செய்வது அர

கள் தங்கள் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிப் பழகி, பரஸ்பர உணர்ச்சியை உண்டாக்கவும், வீழ்ந்த ஐக்கியம் வீறிட்டெழ நாடிநரம்புகளிலெல்லாம் இன்று புதிய இரத்தத்தைப் புகுத்த வேண்டியப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டியவராவார்கள். அன்பே அனைத்தையும் தரும். ஆகவே முதலில் நமது நற்குணப் பண்புகள் வளர முயலவேண்டும் நன்னடத்தை இல்லா ஒருவன் பிறரைத்திருத்த முயற்சிப்பது அறிவீனம். எல்லாப் பிரச்னைகளையும் விழிப்புடனும், நடு நிலையிலிருந்தும், ஆராய்ந்து சீரழிந்திருக்கும் சமூகத்திற்கு உதவ முன்வர வேண்டுகின்றோம்.

சாங்கத்திற்கு அதிகப்படி செலவை உண்டாக்காதிருந்தால் ஆங்கிலோ இந்தியரல்லாத பிள்ளைகள் மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கையில் 50 சத வீதத்திற்குமேல் அந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கலாம்."

G. O. M. S. No. 2962,

எடுகேஷன். 3-11-1950.)

திருத்தங்கள்.

அதிகாரம் 1:—அங்கீகார விதிகள்.

விதி 13 (2)—(i) இந்த விதியின் இரண்டாவது வாக்கியத்தில் "அசக்தி" என்ற வார்த்தைக்குப் பிறகு "அல்லது வேறு எதாவது நல்ல காரணம்" என்பதைச் சேர்க்கவும்,

(ii) இதில் ஆறுவது கிளாவில் (பகுதியில்) கீழ்க்கண்டதை ஒரு துணைப் பாராவாக சேர்த்துக் கொள்ளுக.

"எந்தப் பாட்சாலையின் மானேஜ்மெண்டாவது எந்த நிரந்தரமான அல்லது டெம்பரெரி ஊழியரை கீழ்ப்படியாமை, கெட்ட நடத்தை, தேக அசௌக்யம், தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் ஆகியவற்றிற்காகக் குற்றம் சாட்டி, பள்ளிக்கூடத்திற்கு அதன் வளர்ச்சிக்கு இன்றியமையாத காலமாயிருந்தால் 3 மாதங்கள்வரை தள்ளி வைக்கலாம். அதுமாதிரி விஷயங்களிலெல்லாம் உடனேயே உபாத்தியாயரை சஸ்பெண்ட் செய்திருப்பதை ரிஜிஸ்தார் போஸ்ட் மூலம் டெபுடி இன்ஸ்பெக்டருக்குத் தெரிவித்துவிடவேண்டும். ஜில்லா கல்வி அதிகாரி அவ்வனம் சஸ்பெண்ட் செய்தது நியாயமற்றது என முடிவு செய்தால் மேனேஜ்மெண்டார் சஸ்பெண்ட் செய்யப்பட்டவருக்கு அவர் அப்படி செய்யப்படாமலிருந்தால் என்ன சம்பளம், அலவன்ஸ் தரவேண்டியிருந்திருக்குமோ அவற்றைத் தரவேண்டும். அப்பொழுது லீவிலிருந்த நாட்களாகவே எண்ணப்படும்.

(iii) பிரிவு (vii)ல் இருக்கும் பாராவில் "அது கிடைத்த மூன்று மாத காலத்திற்குள்" என்பதைச் சேர்க்கவும்.

அதிகாரம் II:—உதவிச் சட்டங்கள்

விதி 4 (5):—(1) முதல் வாக்கியத்திலுள்ள "ஒரே மேனேஜ்மெண்டின் கீழுள்ள" என்பது விலக்கப்படவேண்டும்.

(ii) முதல் பாராவின் முடிவில் கீழ்க்கண்டதைச் சேர்க்கவும்.

ஸ்கேல் கிராண்டைவிட அதிகமாகத் தரப்பெறும் உபாத்தியாயர் விஷயத்தில், அவர் லீவிலிருக்கும் போது லீவ் சம்பளத்தை ஸ்கேல் கிராண்ட் படியாகவோ, அல்லது அவர் வேலையிலிருந்தபோது அளித்துவந்த படியோ கொடுக்க மேனேஜ்மெண்டின் இஷ்டத்தைப் பொறுத்தது.

(iii) இந்த விதியின் துணைப்பாராவில் "ஒரு மாதம்" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "இரு மாதங்கள்" என்பதைச் சேர்க்கவும்.

இதே விதியின் கடைசியில் கீழ்க்கண்டதைச் சேர்க்கவும்.

"மேனேஜர் கலியாணமான ஸ்திரீ ஆசிரியைகளுக்கு பிரசவ லீவ் முழு கிராண்டுடன் 2 மாத காலம்வரை கொடுக்கலாம். சாஸ்வதமற்ற (Non-permanent) ஆசிரியைகள் பிரசவங்களுக்கு, அவர்களுக்குத் தகுதியான சாதாரண லீவ் மட்டும் எடுத்துக்கொள்ளலாம். சாஸ்வத



# முதியோர் கல்வி அரசாங்கத்தின் பொறுப்பு

(P. S. சுப்பையா)

ஒரு நாட்டின் நாகரீகம், கலை வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, அரசியல் நிலை ஆகியவை எல்லாம் அதனுடைய ஜனங்கள் அடைந்த கல்வி நிலையைப் பொறுத்தது. 1949 சென்ஸஸ் கணக்குப்படி. இந்தியாவின் முதியோர்த் தொகை 18 கோடி இதில் 1 கோடியே எழுபது லக்ஷம்தான் படித்தவர்கள் அதாவது 10% கூட இல்லை ஒரு அரசாங்கத்தின் கடமைகளில் முதலாவது ஜனங்களைக் கல்வி பெறச் செய்வதுதான். (குழந்தைகளுக்கும் சரி, பெரியவர்களுக்கும் சரி) இன்று ஆளும் அரசியலார் (அவர்கள் உண்மையில் செய்வதுபோல) இந்திய ஜன நாயகத்தின் வளர்ச்சி இப்போதுள்ளவர்களுக்கும் இனி வரும் சந்ததியளார்களுக்கும் அளிக்கும் படிப்பு வசதிகளில் தான் உள்ளது என அறிய வேண்டும்.

சில தேசங்களில் நூற்றுக்கு நூறு இல்லாவிட்டாலும் ஏராளமான தொகையினர் படிக்கிறார்கள். உதாரணமாக ஜப்பானில் நூற்றுக்கு 99 பேர்கள் வெறுமனே படித்தவர்கள் மட்டுமல்ல, சமூகப் பொறுப்புகளைத் தாங்கும் அளவுக்குக் கல்வி பயின்றிருப்பவர்கள். துருக்கியில் 1945-46 சென்ஸஸ்படி 60 சத வீதம் இளைஞரும் 40 சத வீதம் முதியவரும் படித்தவர்கள். இந்தியாவின் நிலை வேறு விதமாக வருந்தத் தக்கதாக உள்ளது, தொடர்ச்சியாக அரசியல் விடுதலை பெறாமல் அடிமையாயிருந்து அந்நியர் ஆளுகைக் குட்பட்டிருந்ததால்.

'இளமையிற்கல்' என்ற பழமொழியைக் கூறிய ஔவை என்னும் மூதாட்டி வாழ்ந்த இந்நாடு, நினைப்பிலடங்காக் காலத்தும் கல்விக்கு நல்ல கௌரவ மளித்த நாடு, இந்நிலையிலிருப்பது விதியின் விளையாட்டே தான். உண்மையான விஷயம் என்னவெனில் நாம் அந்நிய ஆட்சியால் நசுக்கப்பட்டோம், ஆகவே சுதந்திரமாக எண்ணவும் நடக்கவும் முடியவில்லை.

---

மற்ற ஆசிரியை ஒருத்தி முழு கிராண்டுடன் லீவ் கொடுக்கத் தகுதியற்றவளாக இருந்தாலும், அல்லது அவளுடைய மொத்த லீவ் 2 மாதங்களுக் குட்பட்டதானாலும், பிரசவ லீவ் இரண்டுமாத காலத்திற்குள் லீவ் தரப்படவேண்டும்.

விதி 7 (1):—கீழ்க்கண்டதை (iv) பிரிவாகச் சேர்த்துக்கொள்ளவும்.

(iv) "அதிகாரிகளால் ஒழுங்கற்றதென்று கருதப்படும் சர்வீஸ் உடைய ஒரு உபாத்தியாயரின் சர்வீஸ் முடிவடையும்."

ஒளவை உரைத்ததுபோல் நடந்திருப்போமானால் இன்று முதியோர்க் கல்வி திட்டமே கொண்டிருக்கமாட்டோம்.

இப்பொழுது நாம் முன்னேறிச் சென்று சென்றகாலத் தவறுகளுக்கீடு செய்யவேண்டும்; வேகமாகவும் ஆழ்ந்த கருத்தோடும் வேலை புரியவேண்டும். கருத்தற்ற பரிசோதனைகளுக்கோ, வாக்கு வாதங்களுக்கோ இப்போது நேரமில்லை. உண்மைகளை நேருக்கு நேர் பார்த்து உண்மையாளர்களாக நடப்போமாக. முதலாவதாகவும் முக்கியமானதாகவும் முதியோர்களின் சௌகரியத்தை ஒட்டி முதியோர்க் கல்விச் சாலைகள் முதியோர்க் கல்விச் சங்கங்கள் ஆகியவற்றிக்கு கால அட்டவணை, தயாரிக்கவேண்டும். கடுமையானதான பொருத்த மற்ற சட்டம் கூடாது. உள்ளூர் விதிகளே கால அட்டவணையை நிர்ணயம் செய்யவேண்டும்.

குழந்தைகளை விட முதியவர்களுக்குக் கிரகிக்கும் சக்தி நிறைய உண்டு. ஆகவே அவர்கள், குழந்தைகள் 5 நாட்களில் படிக்கக் கூடியதை ஒரே நாளில் படிக்க முடியும். குழந்தைகள் 5 மணியில் கவனிப்பதை அவர்கள் 1 மணியில் கவனிக்க முடியும். ஆகவே, ஒரு இடத்தில் முதியோர்க் கல்விச் சாலை 20 அல்லது 30 முதியவர்களுக்காக ஏற்படுத்தினால் அவர்கள், வாரத்தில் 2 நாட்கள் நீண்ட நேரம் உட்கார்ந்து கொண்டு படிக்கலாம். அம்மாதிரி முடிவுக்கு ஒரு வித ஆக்ஷேபணையுமிருக்காது. இது மாதிரி விஷயத்தில் சிறிது விட்டுக் கொடுத்தால் ஏராளமான தொகையினர் படிக்கவருவர்; நல்ல முடிவும் ஏற்படும்.

முதியோர்களை படிப்புச் சாலைகளுக்கும் சமூகக் கல்விச் சங்கங்களுக்கும் தவறாது வரும்படி செய்யவும், அவற்றில் இச்சை உண்டாகும்படி செய்யவும், எல்லா விதமான செய்கைகளையும் மேற் கொள்ளவேண்டும். அதாவது நல்ல தரமான ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்குத் தேவையானதை அல்ல, அவர்களுக்கு உரியதைத் தயங்காது வழங்க நீங்கள் சம்மதித்தால் தான் சரியான தரமான ஊழியர்கள் கிடைப்பார்கள்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களை உபயோகப்படுத்துவதோ, அல்லது மற்ற உபாத்தியாயர்களை உபயோகிப்பதோ வளர்ச்சி தராது. அவர்கள் ஏற்கெனவே அதிக வேலை செய்பவர்கள்; தவிர முதியவர்கள் இயற்கையை அவர்கள் அறியாதிருக்கவும் கூடும். ஆகவே கொண்டுள்ள சிறந்த நோக்கத்திற்கு இம்முறை வழிகாட்டாது. நீங்கள் அவர்களுக்குச் சிறிது அலவன்ஸ் அளித்து அவர்கள் நாட்டின் சிற்பகள் என்று நயவஞ்சகமாகப்புகழ்கிறீர்கள். 'ஸ்டண்ட்' நம்மை வெகுதூரம் அழைத்துச் செல்லாது. ஆகவே இதை விட்டுவிட்டு ஒரு ஒழுங்கான



தேவைப்படும் ஊழியர்களை (சம்பளம் பெறும் ஊழியர்களைத்) திரட்டவேண்டும்.

ஆண் பெண் என்ற வித்தியாசம் தேவையில்லை. அவர்கள் தயாராக முன் வந்து முதியோர்க் கல்வி வேலையை, (அரசாங்கம் அவர்களது ஊழியத்திற்கு ஏற்ற ஊதியம் தருமாயின்) செய்வார்கள். அவர்களெல்லோரும் முழு நேர வேலை செய்யப்போகிறவர்களாக இருக்கமாட்டார்களாதலால் அரசாங்கத்தின்பளு அதிகமிருக்காது. ஆசையும் அர்ப்பணிப்பும் கொண்ட கல்லூரி மாணவர்கள், எந்த வயதுடைய ஆண்கள் அல்லது பெண்கள், அரசாங்க ஊழியர்கள், உபகாரச் சம்பளம் பெறுபவர்கள் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படலாம். அவர்கள், தங்களுடைய ஆசையை உருவகப்படுத்தி வளர்த்து பக்குவப் படுத்தக் கூடிய ஒரு பயிற்சி பெறவேண்டும். 10 வருஷங்களுக்குள் நாம் நூற்றுக்கு நூறு படித்தவர்களாகி விடுவோம் என்று நிச்சயமாக நம்புகிறேன். கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள முக்கியமான பட்டணமும் 50 ஆயிரம் ஜனத்தொகை உடையதுமான பொள்ளாச்சியில் நான் வசிக்கிறேன். ஐந்து மாதங்களில் நாங்கள் 10 முதியோர்க் கல்விச் சாலைகள் ஏற்படுத்தியுள்ளோம். 300 ஆண் பெண் அடங்கிய முதியவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கிறோம். இதே மாதிரியான நிலையங்கள் சுற்றுப்புற கிராமங்களிலும் நிறுவியிருக்கிறோம். அவற்றில் ஏராளமான முதியவர்களைச் சேர்த்திருக்கிறோம். நாங்கள் திருப்திகரமான முன்னேற்றம் உண்டாக்கி வருகிறோம். பொள்ளாச்சி தாலுகா முதியோர்க் கல்வி கமிட்டியின் செயல்களினாலும் நிர்மாண அமைப்புகளினாலுமே இவற்றைச் செய்கிறோம். நமது அரசாங்கம் அதுமாதிரியான பல கமிட்டிகள் கொண்டதாக ஆகவேண்டுமென நான் விரும்புகிறேன்.

## குழந்தைக் குற்றவாளிகளை ஐரோப்பா கையாளும் முறைகள்

ஆங்கிலம்.
பேர்டினன்ட் டாஷி.
தமிழாக்கம் "சுராகசி"

ஸ்காண்டிநேவியா, ஸ்விட்ஜர்லந்து போன்ற சிறிய திறமையுடன் நிர்வாகம் செலுத்தப்பெறும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இளம் குற்றவாளிகளின் வளர்ச்சி அதிகமில்லை. என்றாலும் பிரிட்டனை அடுத்துள்ள பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளின் நிலை பிரிட்டனைப் போல்தான் இருக்கிறது. ஒரு வருடத்தில் பிரான்ஸில் 40,000 இளம் குற்றவாளிகள் தோன்றுகிறார்கள். இவர்களில் 27,000 பேர்கள் சீர்திருத்தப்பயிற்சி முகாம்களிலும் ஏனையோர் "பெற்றோர் கட்டுப்பாடு" என்றதனுக்குட்பட்டு மிருக்கின்றனர். பெற்றோர் கட்டுப்பாடு என்

றால் வீடுகளிலோ அல்லது வெளியிலோ சாப்பிடுவதாய் இருந்தால் அவ்விடங்களிலோ பெற்றோர் கண்காணிப்பிற்குள் இருப்பது என்பதே பொருளாகும். மேலே நான் கூறிய தொகை 1939-ம் வருடத்திய இளம் குற்றவாளிகளின் தொகையைப் போல் மூன்று மடங்கு அதிகமாகும்! ஆகவே, பிரெஞ்சுக்காரர்கள் தங்களது சீர்திருத்த முறைகள் சரியானவையா என்றே சந்தேகப்படவேண்டியதாகிறது.

இதன்பிறகு இளம் குற்றவாளிகள் பாதுகாப்பு முகாம்களிலிருந்து சுகாதார மந்திரியின் பொறுப்பில் விடப்பட்டனர். அவர் கையாளும் முறை முற்றிலும் வேறானது. தண்டனை கொடுப்பதைப் பின்பற்றாமல் தவறு செய்வதைத் தடுத்து இளம் குற்றவாளிகளைத் திருத்துவதே இவரது முறையாகும். கடுமையான பிரம்படி 1789 புரட்சிக்குப் பிறகு தரப்படுவதேயில்லை. இப்பொழுது கூட பிரெஞ்சுக்காரர்கள் 12 அல்லது 13 அடிகள்வரை தருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள் என்றாலும் பிரம்படி தருவதை கடைசி ஆயுதமாகத்தான் உபயோகிக்கிறார்கள்.

இப்பொழுது பிரெஞ்சுமுறைகளை மேலும் கொஞ்சம் பார்ப்போம். எல்லா நகரங்களிலும் பெரிய பட்டணங்களிலும் சிறுவர் விசாரணைக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு நீதிபதி தானாக எதையும் செய்ய முடியாது. நீதிபதி ஸ்தலத்திற்கு வெளியாரான இருவர் (இவர்களில் ஒருவர் பெண்) நீதிபதியுடன் உடனிருந்து முடிவு கட்டுவர். இதனால் இளம் குற்றவாளிகள் அதிக நாள் சிறையிலிருந்துவிட நேருகிறதோ என்று எண்ணாதீர்கள்.

அவர்கள் அதிகநாள் கம்பிக்குள் கிடப்பதில்லை. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு வரவேற்புக் குழு இருக்கிறது. இதுவே கண்காணிப்புக் குழுவாகவும் வேலை செய்கிறது. எதைக் கண்காணிப்பது தெரியுமா? இளம் குற்றவாளிகள் எப்படி வேலை செய்கிறார்கள், எப்படி விளையாடுகிறார்கள், எப்படி தூங்குகிறார்கள், மற்றப் பிள்ளைகளுடன் எப்படிபழகுகிறார்கள் என்றெல்லாம் கண்காணித்து வருவார்கள்.

ஒரு வைத்தியர், பொதுநல உத்தியோகஸ்தர், உபாத்தியாயர் ஆகியோர் அடங்கிய இவர்கள் குழு, நீதிபதிக்குத் தங்கள் எண்ணத்தை வெளியிடுவார்கள். இவர்கள் எண்ணம் வக்கீல் வாதங்களைத் தவிடுபொடியாக்கிவிடுகிறது. பெற்றோர்கள் அன்பில்லாமலிருப்பதும் ஜாக்கிரதையாக இல்லாமலிருப்பதும்தான் சிறுவர்கள் குற்றங்களுக்குக் காரணங்கள் என்று தெரிகின்றன. ஆகவே திருப்பி யளிக்கக்கூடிய சக்தியுள்ள பெற்றோர்கள் அவர்கள் பிள்ளைகள் திருடியவற்றுக்கு ஈடுசெய்யவேண்டுமென்று கேட்கப்படுகிறார்கள். இது வரவர இப்போது அதிகமாகிவருகிறது

ஒரு சில இளம் குற்றவாளிகள் தாங்கள் படிக்கும் சில பத்திரிகைகளும் பார்க்கும் சில படங்களும் தான் தங்களைப் பணம் சம்பாதிக்க— அதாவது திருட — ஊக்குகின்றன என்று கூறுகிறார்கள்.

பிரான்ஸில் ஒரு பெரிய கஷ்டம் அங்கு நிறைய சீர்திருத்தப் பயிற்சி முகாம்களில்லாததுதான். அங்கு இருப்பவை எல்லாம் ஒன்பதுதான். இரண்டு பெண்களுக்கு. இவை எல்லாம் நிரம்பி யிருக்கின்றன.



இதனால் மற்றொரு வழி பின்பற்றப்படுகிறது. ''நிலத்திலே குழந்தைகளை முன்னுக்குக் கொண்டுவா; நிலத்தைக் குழந்தையால் முன்னுக் கொண்டுவா'' என்பது பழமொழி இது விஷயத்தில் பின்பற்றப் படுகிறது. இளம் குற்றவாளிகள் நிலங்களில் பயிர் செய்ய அனுப்பப்படுகிறார்கள். அரசாங்கப் பாதுகாப்பிடங்கள் பிள்ளைகளுக்குப் போதாதிருப்பதால் தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் முகாம்களிலும் இளம் குற்றவாளிகள் விடப்படுகிறார்கள். இவை சுமார் 160க்கு மேலுள்ளன. இங்கு மொத்தத்தில் மூன்றிலொரு பாகமுள்ள பெண் குற்றவாளிகள் விடப்படுகிறார்கள். இவர்களெல்லோரும் திருட்டுக்காகவோ கெட்ட நடவடிக்கைக்காகவோ வருபவர்கள். மேலே குறிப்பிட்ட தனிப்பட்ட விடுதிகள் தர்மத்தினால்தான் நடைபெற வேண்டி யிருக்கின்றன. அரசாங்கம் போதிய உதவி செய்வதில்லை.

இனி இதாலிய முறைகளைப்பார்ப்போம். இங்கு இளம் குற்றவாளிகள் நல்ல பெயரெடுத்து வெளிவராவிட்டால் 21-வயதுவரை சீர்திருத்தப் பயிற்சி முகாம்களில் இருக்க நேரிடுகிறது. இதனால் வருந்துவதற்கு மாறாக, அவர்கள் தங்கள் வீடு போய்ப் பார்த்துவிட்டுவர சில தடவை அனுமதிக்கப்படுகிறார்கள். வெளி நாடுகளுக்கு 'வெளியில் வசிக்க''ப் பழக்குவதற்காக இவர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள். பின்புதான் வெளி உலகத் தொடர்பு அவர்களுக்குக் கிட்டும்.

இதாலிய படங்கள், இப்போது வெளி வருபவை, அவர்களின் விசாரணை, தண்டனை சட்டங்களை வெறுத்து பிரசாரம் செய்கின்றன. அகில உலக சமூகக் குற்ற நிவர்த்தி தலைவர் டாக்டர் டிடுலியோ. ராஜ்யமே இளம் குற்றவாளிகளை எடுத்து போஷிக்கவேண்டுமென்கிறார்.

செப்டம்பர் 10ட பாரீஸில் நடைபெற்ற இரண்டாவது உலக குற்ற நிவர்த்தி காங்கிரஸ் கூட்டத்தில் டிடுலியோ இதுபற்றிப் பேசினார். அக்கூட்டத்தில் 60 நாடுகளின் பிரதிநிதிகள் கூடியிருந்தனர். கம்யூனிஸ்ட் நாடுகள்மட்டும் வரவில்லை.

கொஞ்சம் மேற்கு ஜெர்மனி பக்கம் பார்வையைச் செலுத்துவோம். ஐரோப்பா முழுவதிலும் இங்குதான் நிலைமை மிக மோசமென்று சொல்லலாம். ஏற்கனவேயுள்ள 5 லட்சம் வேலையில்லா இளைஞர்கள், பள்ளிக் கூடத்திலிருந்து வெளிவரும் 14 வயது ஆண், பெண்கள் எல்லோரும் வேலையைத் தேடுபவர்கள்! இருந்தும், லட்சம் இளம் குற்றவாளிகள் குறைந்துவிட்டார்கள். 16 வயதுக்குக் குறைந்த ஜர்மானியக் குழந்தை தண்டிக்கப்படுவதில்லை. பெற்றோர்கள்தான் பொறுப்பாகவேண்டும். ஆனாலும் குற்றங்கள் அதிகமாவதால் இளைஞர் பொதுநல உத்தியோகஸ்தர்கள் குற்றவாளிகளைப் பயிற்சி முகாம்களில் சேர்க்கிறார்கள். ஜெர்மானியன் நோக்கமெல்லாம் இளம் வயதினரை ஒழுக்கமுடையோராகவும் சுறுசுறுப்புடையோராகவும் ஆக்குவதுதான்!

எனவே சில சமயம் இளம் குற்றவாளிகள் பொதுநல சேவை செய்ய வேண்டியதாகிறது. அவர்கள் நந்தவனம், நீந்தும் குளங்கள், விளையாடுமிடங்கள் ஆகியவற்றைக் கட்டுகிறார்கள், எந்த வயதுக்காரன் செய்தாலும் குற்றம் குற்றந்தான் என்ற எண்ணம் வலுப்பட்டு வருகிறது

சிறியவர்கள், குற்றவாளிகள் என்று விளம்பரம் செய்யப்படுவதை வெறுப்பவர்கள். இப்படி விளம்பரம் செய்தால் இளம் குற்றவாளி தானாகத் திருந்தக்கூடும். இம்மாதிரியான சில முறைகளைத்தான் வெளிநாட்டார் பின்பற்ற எண்ணுவதாக நான் நினைக்கிறேன்.

# ஈயார்த் தேட்டை தீயார் கொள்வர்

(P. அண்ணாமலை ரெட்டியார்)

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று அமர கவி பாரதியாரால் நம் நாடு பாராட்டப்பெற்றது. இந் நாட்டிலேதான் கம்பர், வள்ளுவர், இளங்கோவடிகள் போன்ற சிறந்த புலவர்கள் பலர் தோன்றினார்கள். அவ்வாறே, நச்செள்ளையார், காக்கைப்பாடினியார், ஔவையார் போன்ற பெண்பாற் புலவர்களும் தோன்றினார்கள். இப்பெண்பாற் புலவர்களுள் ஔவையாரைப்பற்றி அறியாத மாணவர்களே இல்லையென்று கூறலாம். சிறுவர் முதல் பெரிய ஞானிகள்வரை படித்தறிதற்குகந்த பல நூல்களை இயற்றியுள்ளார். அவைகளுள் மாணவர்களுக் கேற்றவை, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்பவைகளே. ஔவைப்பிராட்டியார் சிறந்த கருத்துக்களை, நுட்பமான விஷயங்களைச் 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்னும் முறைப்படி அழகாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் இவ்விரண்டு நூல்களையும் அகர வர்க்கத்திலே ஓடிச் செய்யுட்களாகப் பாடியுள்ளார். இவைகளைச் செய்யுட்கள் என்று கூறுவதைக் காட்டிலும் பழமொழிகள் என்று சொல்லுவதே பொருத்தமாகும்.

இப் பழமொழிகளுள் "ஈயார்த் தேட்டை தீயார் கொள்வர்" என்பதும் ஒன்று. இது கொன்றைவேந்தனில் வந்துள்ளது. இதன் அர்த்தத்தைக் கவனிப்போம். "ஈ" என்று சொன்னதுமே பறக்கும் ஈ தான் நமக்கு ஞாபகத்திற்கு வரும். இந்த அர்த்தம் கொள்ளும்போது "ஈ" என்பது பெயர்ச்சொல். இப் பழமொழியின் ஈயார் என்ற சொல்லிலுள்ள ஈ என்பதற்குக் கொடு என்பது பொருள். இப்பொருளில் 'ஈ' வினைச்சொல் ஆகும். ஆகவே. ஈயார் என்றால் கொடாதவர் என்று பொருள்படும். தேடு—ஐ — தேட்டையென்றாயிற்று. தேட்டை என்றால் செல்வம் என்று பொருள். தேடிச் சேர்க்கப்படும்காரணத்தினால் இப்பெயர் பெற்றது. திரை கடல் ஓடியும் தேடவேண்டியது திரவியம் அல்லவா?

இவ்வாறு வருந்தித் தேடும் செல்வம் நல்ல வழியில் சம்பாதிப்பதாக இருக்கவேண்டும். செல்வம் என்றாலே ஆள் விட்டு ஆள் மாறிக் கொண்டே செல்வதென்று அர்த்தமாகும். செல்வம் இவ்விதம் மாற்றம் அடைந்துகொண்டேயிருந்தால் தான் மக்களுக்கு நன்மை யுண்டாகும். உதாரணமாக ஒருவன் ஓர் அணா வைத்துக்கொண்டிருப்பதாகக் கொள்வோம். அவன் அதை ஒரு கடைக்காரனிடம் கொடுத்துப் பழம் வாங்குகிறான். அந்தக் கடைக்காரன் அவ்வணாவைக் கொடுத்து வீட்டிற்குக் கீரை வாங்குகிறான். கீரை விற்றவள் அப்பணத்திற்குப் பூ வாங்குகிறாள். இப்படியே அந்த அணா ஒரு ஆளைவிட்டு இன்னொரு ஆளிடம் போகும்போது கொடுத்தவனுக்கு ஏதாவது ஒரு நன்மையைச் செய்யும் காசை வீணாக உண்டியில் பல வருஷங்கள் வைத்திருப்பதால் பயன் என்ன? ஓர் அணாவே இவ்வளவு நன்மை செய்யுமென்றால் ஆயிரம், லக்ஷம், கோடி அளவு பணம் நன்மை தருமென்று கூறவும் வேண்டுமோ? இதைக்கருதி அல்லவா "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்றனர். ஈயாத லோபிகளை நோக்கிப் "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்த கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்" என்றழைத்து வைகின்றனர். செல்வத்தைத் தமக்கும் பயன் படுத்தாமல் பிறர்க்கும் கொடுக்காமல் பணம காக்கும் பூதம்போல் மண்ணிலோ அல்லது இரும்புப் பெட்டியிலோ புதைத்துவைத்தலைக் காட்டிலும் தபால் ஆபீஸிலும், தேசிய சேமிப்பு நிதியிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் சேமித்துவைப்பது நல்லது. இவ்வாறு செய்வதால் சொத்துக்கும் பயமில்லை; வட்டியும்பெறலாம். கடன் வேண்டுவோர் அப் பேங்குகளிலிருந்து சொல்ப வட்டிக்குப் பணம்பெற்றுத் தத்தம்கைத்தொழில்களையும், வியாபாரத்தையும் விருத்தி செய்துகொள்ளலாம்.

மேற்கூறியவாறெல்லாம் செலவு செய்யாதவருடைய செல்வத்தை அதாவது ஈயார்த் தேட்டையைத் தீயார் கொள்வர் என்று ஔவை சொல்லியுள்ளார். இந்த லோபி, தான் செல்வம் பெற்றிருந்தாலும் அச் செல்வத்தால் யாதொரு பயனையும் அடையாததனால் அவன் அதைப் பெற்றிருந்தும் இழந்துவிட்டவனாகவே கருதப்படுவான். இதையே:—

உண்ணான் ஒளிநின்றான்
ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர்
துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத்
திருப்பானேல் அ ஆ
இழந்தானென்
றெண்ணப் படும்

என்றொரு புலவர் பாடியுள்ளார்.

"எவனொருவன் உண்ணாமலும், புகழுக்குரிய தரும காரியங்களைச் செய்யாமலும், சுற்றத்தாருடைய துன்பங்களைப் போக்காமலும், ஏழை எளியவர்களுக்கு வழங்காமலும் இருக்கின்றானோ அவன் தன் செல்வத்தை இழந்தவனாகவே காணப்படுவான்" என்பது இப் பாடலின் பொருள். இந்த உலோபி உயிருடன் உள்ளபோதோ அல்லது இறந்த பிறகோ இவனுடைய செல்வம் தீயோரால் அபகரிக்கப்படலாம்.

தீயார் என்னும் சொல்லுக்கு எதிர் வார்த்தை நல்லார் என்பது. பிராணிகளிடத்திலே அன்பும், குற்றம் செய்ய நாணமடைதலும், உபகார குணமுடைமையும், ஓர் உயிர் வருந்தும்போது மனமிரங்கும் தன்மையும், உண்மை பேசுதலுமாகிய குணங்களைப் பெற்றிருப்பவர் நல்லோராவர். இத்தகைய நல்லாரைக் காண்பது நல்லதல்லவா? இவர்களுக்கு நேர்மாறாகக் கொலை செய்தலும், திருடுதலும், தகாத ஆசை கொள்ளுதலும், புத்தியை மயக்கும் கள் முதலியவற்றைக் குடித்தலும், சூதாடுதலுமாகிய துஷ்ட காரியங்களைச் செய்வோர் தீயோராவர். இத்தகைய தீயோரைக் காண்பதும் தீதல்லவா? கொடாத உலோபிகளின் செல்வம் தீயவர்களால் பறிக்கப்படும் என்பது திண்ணம். இந்த உலோபிகள் இருத்தலைக் காட்டிலும் இல்லாமையே மேலென்று புலவரொருவர் மனம் நொந்து கூறியுள்ளார். "ஈயாத லோபி இருந்தென்ன போயென்ன எட்டிமரம், காயாதிருந்தென்ன காய்த்து பயனென்ன" என்பதே அப் பாட்டு.

இப் பழமொழியை விளக்க ஒரு கதை சொல்கிறேன் :—

முன்னொரு காலத்தில் தனவந்தன் ஒருவன் இருந்தான். அவன்

உலோபி. எல்லோரும் அவனை 'ஈயாப் பிண்டன்' என்றே அழைத்தனர். நாளும் பணம் சேர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். யாசிப்பவர்களுக்குக் கொடுத்து இன்பம் அடையும் குணம் அவனிடத்தில் இருந்ததே இல்லை. ஏழை ஒருவனுக்கு உயிர் போவதாயிருந்தாலும் கிஞ்சித்து உணவும் கொடுக்கவேமாட்டான். அவன் பிச்சைக்காரர்களுக்குப் பயந்து தன் மாளிகையின் கதவை எப்பொழுதும் மூடியே வைத்திருந்தான். தன் எச்சில் கையால் காக்கையும் ஓட்டமாட்டான் என்றால் அவன் உலோபத்தனத்தை என்னென்று சொல்லுவது?

ஒருநாள் அத் தனவந்தன் தனக்கு வரவேண்டிய பாக்கிப் பணத்தை வசூலிக்கும்பொருட்டு வெளி நாட்டிற்குச் சென்றான். பயணம் கப்பலில் நடந்தது. எதிர்பாராத முறையில் பெரும் புயல்காற்று அடித்தது, பலத்த மழையும் பெய்தது. கப்பல், மாலுமிகளின் கட்டுக்கடங்காமல் கடலில் திசைதப்பி ஓடியது. கொந்தளிப்பு அதிகமாயிற்று. கப்பலிலிருந்த எல்லோரும் அஞ்சி நடுங்கினர். கப்பலோட்டியோ இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்தான். அக்கப்பல் ஒரு குன்றில் மோதிக்கடலுள்மூழ்கியது. அந்தோ அனைவரும் மடிந்தனர். அந்த உலோபியும் இறந்தான். அவனுக்குப் புத்திரசந்தானமே இல்லை. "கூடுவிட்டிங்கு ஆவிதான் போயின பின்பு ஆரே அனுபவிப்பார் பாவிகாள் அந்தப் பணம்" என்ற பாட்டிற்கு உதாரணமானான். அவன் சொத்துக்கள் அவனுடைய ஏழை பந்துக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. அவர்களோ ஏழைகளாயிருந்தும் நற்குணம் படைத்தில்லாமல் இயற்கையாகவே தீக்குணம் படைத்தவர்களாயிருந்தனர். தமது பூர்வ நிலைமையை அறவே, மறந்து வெகு ஆடம்பரமாகவும் அட்டகாசமாகவும் வாழத் தொடங்கினர்.

அந்த உலோபி வாழ்ந்த வாழ்க்கையையும் அவன் செல்வத்தை அடைந்த தீயோர் வாழ்க்கையையும் கண்ட பெரியார் ஒருவர் "ஆஹா! இதென்ன ஆச்சரியம்! இறந்து போன தனவந்தன் மீண்டும் உயிர் பெற்றுவந்து தன் பொருள்களையெல்லாம் கேட்பானேயாகில் அவன் சுற்றத்தாராகிய இத்தீயோர் அவன் இறந்த காலத்தில் அடைந்த துக்கத்தைவிட மீண்டும் வந்து பொருளைக் கேட்கும் காலத்தில் பெருந் துக்கம் அடைவார் அன்றோ?" என்று தமக்குள் சொல்லிக்கொண்டார். ஈயார்த் தேட்டைத் தீயார்தான் கொள்வர்.

இந்தக் கதையிலிருந்து நாம் என்ன நீதியை அறிகிறோம்? "செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்பேம் எனினே தப்புந பல". அதாவது செல்வம் பெற்றதன் பயன் அதைத் தரித்திரர், நோயாளி முதலியோர்க்குக் கொடுத்தலும்; கோயில், கல்வி முதலிய தரும காரியங்களுக்கு உதவுதலுமேயாகும். அவ்வாறன்றி தாமே அனுபவிக்கவேண்டுமென்று எண்ணினால் அதனால் ஏற்படும் தீமைகள் பலவாகும். இதையே சுருக்கமாக "அறஞ்செய விரும்பு" என்றார் ஔவைப் பிராட்டி. எனவே நம்மால் முடிந்த உதவியை எல்லார்க்கும் செய்து நல்லோராக வாழ்வோமாக.





# ஆரம்ப பள்ளியில் ஆட்சி நூல்

P. N. கல்யாணசுந்தரம்

ஆரம்பப்பள்ளிக்கு சர்க்கார் இயற்றியுள்ள தற்காலப் பாடதிட்டத்தை (Syllabus) ஆசிரியர்கள் அறிவோம். நடைமுறையிலும் கூடிய மட்டில் ஆசிரியர்களாகிய நாம் பாடதிட்டங்களைப் பூர்த்தி செய்து வருகிறோம். குறிப்பாக செய்முறை வேலைகள் 'ப்ராக்டிகல் வொர்க்' தற்போதுமட்டும் அல்ல எப்போதுமே வற்புறுத்தப்படுகிறது. அதற்காக பாடவாரியாகச் சார்ட்டுகள், மாடல்கள், முதலியன தயாரிக்கிறோம். மாணவர்களின் திறமையை வெளிப்படுத்த எத்தனையோ முறைகளைக் கையாளுகிறோம்.

எப்பாடத்தைத் திறம்படப் போதிக்க முற்படினும் ஓர் ஆசிரியர், முன் கூட்டியே அப்பாடத்திற்கு உதவியாக உள்ள துணைப்புத்தகங்கள், சிலபஸ், இவற்றை ஆராய்ந்து அதன் பிறகே-பாடதிட்டத்தை மாதவாரியாகவோ, அதன் பிறகு வாரத்திற்கு வேண்டிய அளவையோ நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக ஆசிரியர் குறிப்பிட்ட வாரத்தில் நடக்க வேண்டிய வகுப்பறை வேலைக்கு குறிப்புகள் தயாரிக்கிறார். (Notes of Lessons). அப்போதே ஆசிரியர் அப்பாடத்திற்கு வேண்டிய உபகரணங்கள் அல்லது மாணவர் மனதில் விஷயத்தை நன்கு பதியச் செய்யத் தாம் மேற்கொள்ளும் நூதன வழிகள்-இவற்றைப் பாடக்குறிப்பில் குறிக்கவேண்டும். எல்லாப் பாடங்களுக்கும் சார்ட்டுகள், மாடல்கள்வேண்டியிரா. சில பாடங்களுக்கு மாணவர்களையே உபகரணங்களாக உபயோகிக்க நேரும். அதற்காக ஆசிரியர்கள் மாணவர்கள் நிற்பதுபோல் நடப்பதுபோல் சித்திரம் வரைந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. அது அனாவசியமும் கூட. (உம்) பெரிய, அதைவிடப் பெரிய, மிகமிகப் பெரிய உயரமான, அதைவிட உயரமான: மிகமிக உயரமான, போன்ற சொற்களை விளக்க, வகுப்பில் உள்ள மாணவர்களையே நாம் உபயோகித்துக் காட்டி விளக்கலாம் அல்லவா!

அதுபோன்று மாணவர்களின் உதவி கொண்டே மாணவர்களுக்குப் போதிக்கும் 'பாடம்' அல்லது ஆட்சி நூல் எல்லாப் பாடங்களுக்கும் உள்ள விதி இதற்கும் பொருந்துமாயினும் இப்பாடம் போதிக்கும் ஆசிரியர் (Text-Book) பாடப் புத்தகத்தைக் கடைசியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும், பாடம் ஆரம்பிக்கும் போதே மாணவர்களை வரிசையாகப் படிக்கச் செய்யக்கூடாது. (இம்முறை இப்போது மறைந்து வருகிறது)

ஆரம்ப வகுப்புக்களிலே சர்க்காரின் பாடத்திட்டத்தில், ஆட்சி நூல் பற்றி உள்ள திட்டங்களை ஆழ்ந்து படித்தால்தான் அருமை புலனாகும். இப்பாடத்தில் உள்ள முக்கியமான இரண்டு விஷயங்கள் வருமாறு:-

1. Spirit of Independence தன் உணர்ச்சி (சுதந்திர உணர்ச்சி).

2. Respecting the feelings of others—பிறர் மனம் புண்படாதவாறு நடத்தல்.

ஆஹா! என்ன அழகான, வாழ்க்கைக்கு உபயோகமான தலைப்புக்கள். இதனை ஆசிரியர்களாகிய நாம் சரிவரப் போதித்துவிட்டால் மேற்சொன்ன இரண்டு பாடங்களை 'சிவிக்ஸ்' போதிக்கும் ஆசிரியர் தம் முழுத்திறனையும் காட்டிப் போதித்துவிட்டால் ஆழமாக மாணவர் மனதில் அவை பதிந்துவிட்டால் வருங்கால மக்களாக அவர்கள் திகழும்போது இன்று காணும் சமூகப் பூசல்களும், மக்களிடையே உள்ள ஊழல்களும் தலை காட்டுமா?

இந்தியாவின் குரு மஹானாகிய காந்திஜீயும் நம் மக்கள் சுதந்திர உணர்ச்சி பெறவேண்டும்; அயல் நாட்டாரால் மதிக்கப்படவேண்டிய நற்குணங்கள் பெற்று பிறர் நலம்கருதும் சீலர்களாக விளங்கவேண்டும், என்றே பாடுபட்டார்.

போது மக்களிடம் இன்று காணும் குறைபாடுகள் சில:— நம் மக்களிடையே 'சிவிக் கான்ஷியன்ஸ்' அதாவது (சிவிக்ஸ் மனப்பான்மை. இது என் சொந்தப் பதம்.) பிரஜா உணர்ச்சி ஏற்படவேண்டும். அப்போதுதான் அவனவன் தன் கடமைகள், உரிமைகள், என்ன என்ன என்பதை அறிய முடியும். சில ஊர்களில் கவனிக்கிறோம் மிஸ்டர் / அல்லது மிஸஸ். தன் வீடும் வெளிப்புறமும் சுத்தமாக இருக்க வேண்டுமென்று கூட்டிய குப்பையை அடுத்த வீட்டு ஓரமாகக் கொட்டிவிடுவது, அல்லது தெருக்கூட்டும் குப்பைக்காரன் வந்து போன பிறகு எடுத்துத் தெருவில் குப்பைகொட்டி நடமாடும் தெருவை அசுத்தப்படுத்தல்; 'துப்பு இங்கே' என்று இருக்கும் தொட்டியில் தம்பலத்தைத் துப்பாது அதைச் சுற்றிலும் துப்பி இடத்தை அசுத்தப்படுத்தல்; பொது இடங்களாகிய பஸ் ஸ்டாண்டுகள் (பஸ்ஸில்கூடத்தான்) ரெயில்வே பிளாட்பாரம், நடை பாதைகள் இவைகளில், வாழைப்பழத்தோல் எறிதல்; வெற்றிலைக் காம்புகள் போடல்; சுண்ணாம்பு தடவல்; காகிதக் குப்பை வீசல், நாசி உதறல், காறி உமிழ்தல் முதலிய கைங்கரியங்களால் அசுத்தப்படுத்தி அவ்விடங்களை ஈக்கள் மொய்த்து அருவருக்கத்தக்க இடங்களாக மாற்றுகின்றனர்.

'மேடைமீது நடவுங்கள்' வெளியே கை நீட்டாதீர்கள்' சப்தம் செய்யாதீர்கள்' 'அசுத்தம் செய்யாதே' 'துப்பு இங்கே' முதலிய எச்சரிக்கைப் போர்டுகள் உள்ளவரை மக்களுக்குப் பிரஜா உணர்ச்சி அதாவது கடமைகளை அறிந்து நடக்கும்



உணர்ச்சி ஏற்படவில்லை என்பது தெரிகிறதல்லவா? கற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகிற தென்பதற்கு அறிகுறி தோன்ற வேண்டுமானால் இப்போர்டுகள் இருக்க அவசியம் நேராதபடி பொது மக்களுக்கு உணர்ச்சி ஏற்படவேண்டும். இவ்வுணர்ச்சியை ஊட்டுவது தான் சிவிக்ஸ் பாட போதனையின் நோக்கம் ஆகிறது.

கட்டுப்பாடு:—இன்னொரு உதாரணம், பாருங்கள். மக்கள் பஸ் ஏறும் இடத்திலும் ரேஷன் வாங்கும் இடத்திலும் கண்ணியமின்றி நடந்துகொள்ளுகின்றனர்; ஒருவரை யொருவர் நெட்டித் தள்ளிக்கொண்டும் கட்டுக் கடங்காமலும் மிருக வெறியுடன் காரிய சாதனை, சுயநலம் இவைகளைப் பின்பற்றுகிறார்கள். இஃது கிராமங்களில்மட்டும் அல்ல நாகரீகம் எதிர்பார்க்கப்படும் நகரங்களிலும் காணப்படும் தினசரிக் காட்சிகளில் சில. எதிர்கால மக்களிடம் இக்குறைகள் அகற்றப்படவேண்டுமானால் ஆசிரியர்கள் தாம் அந்த பணியைச் சாதிக்க முடியும், ஆரம்ப வகுப்புக்களிலேயே மாணவர்களுக்குக் கட்டுப்பாடு, சுயநலமின்மை, ஒழுங்கு, புலனடக்கம், கீழ்ப்படிதல், அதிகாரத்தைச் சரிவர வகித்தல் முதலிய 'ஆட்சிநூல்' பாடத்தின் மூலம் நடைமுறையில் கற்பிக்கப்படல் வேண்டும்.

குறித்த காலத்தில் கடமையைச் செய்தல்:—'வண்டி புறப்பட ஒருமணிநேரம் முன்பு டிக்கட் கொடுக்கப்படும்' என்று ரெயில்வே ஸ்டேஷனில் போர்டு தொங்கும். ஆனால் ரெயில் வருவதற்கு 10-நிமிஷம் முன்னர்தான் டிக்கட் கொடுக்கப்படும். அதற்குள் மக்கள் குழுமி டிக்கட் வாங்கும் சந்திற்குள் பல, கைகளை விடுவதும், போட்டியில் இன்னல்கள் உறுவதும், காண்கிறோம். இஃது ஏன்? 'நமக்கேனய்யா ஊர் வம்பு' இதையெல்லாம் நாம் கேட்கலாமா? என்பார் ஸ்ரீமான் பொதுஜனம். படித்தவன் ஒருவன் வேறு வழியாகச் சென்று டிக்கட் வாங்கிக்கொண்டு போய்விடுவான். நியாய புத்தியுள்ள படித்தவர்களும், அறியாமையில் மூழ்கிய கிராமவாசிகளும்தான் இடையில் கஷ்டப்படுகிறார்கள்.

'சரி ரெயில் தொல்லை வேண்டாம்! 'பஸ்'ஸுக்காவது போவோம். அங்கே மட்டும் என்ன வாழ்கிறது! 'பஸ் எப்போது சார் புறப்படும்', 'அங்கே 10 மணிக்கு' என்பார் சிலர். '10-15 ஆகிவிட்டதே!' என்ன சார் கண்டக்டர்! என்றால் 'ட்ரைவர் சாப்பிடப் போயிருக்கிறார் சார்!' புறப்படவேண்டியதுதான். இப்படியாகக் குறித்தகாலத்தில் குறித்த இடத்தை அடைவதோ! குறித்த காரியத்தைச் செய்வதோ! நம் மக்களிடையே இன்று காணப்பட்டால் ஆச்சரியப்படலாம்! என்ற அளவில் இருக்கிறது.

பெரிய மணிக்கூடுகளில் ராக்ஷஸ கடிகாரங்கள் மட்டும் முட்களாகிய பெரிய சிறிய கைகளைப் பொது மக்களுக்குக் காட்டிக்கொண்டுதான் உள்ளன. ஆயின் தவறு யார்மேல்? விடை நாலுபேர் மனது வைத்தால்

தான். அந்த நாலுபேர் யார்? அதுதானே புரியாத புதிர்.

ஆகவே நம் பள்ளிகளில் காலச்சிக்கனம், காலந்தாழ்ந்து வருதலின் கஷ்டம் இவைகளை 'சிவிக்ஸ்' பாடத்தில் போதிக்கிறோம். மரியாதை (Manners) ஓர் சிறந்த பிரஜையிடம் காணப்படவேண்டிய குணம் மரியாதையாக நடந்து கொள்வதேயாகும். இஃது இந்நாளில் 'போலி' மரியாதையாக விளங்குவதை அகற்றப் பாடுபடவேண்டும், உதாரணமாக மாணவர்கள் ஆசிரியர்கள் வகுப்பில் நுழையும்போது எழுந்து நின்று 'வணக்கம்' என்று சொல்லுகிறார்கள். சற்று நேரம் சென்று கவனித்தால் மாணவரில் சிலர் ஒழுங்கீனமாகச் சாய்ந்து கொண்டு உட்காருவதும் அல்லது காலையே ஆசிரியர்க்கெதிராக நீட்டிப் பெஞ்சியில் அமர்வதையும் (ஆய்ந்து கவனிப்பின்) காண நேரும். அப்போது ஆசிரியர் என்ன செய்யவேண்டும். பின்வருமாறு கூறவேண்டும். குழந்தைகளே! நீங்கள் உண்மையாகவே எனக்கு வணக்கம் செலுத்துவதானால் என்னிடம் உங்களுக்கு அன்பு இருக்க வேண்டும்; உண்மைப்பக்தி இருந்தால் என்னிடம். உங்களுக்குப் பயம் தேவையில்லை நான் பார்க்கும்போது சரிவர உட்காருவதும், கவனியாதபோது ஒழுங்கீனமாக உட்காருவதும் நீங்கள் செய்துவிட்டு, வணக்கம் என்று உதட்டளவில் சொல்வதானால் நானே முதல் வணக்கம் தெரிவிக்கவேண்டாம், என்று சொல்லுங்கள். அப்போது அச்சொற்கள் மாணவர்கள் மனதில் மின்சாரம் எனப்பாயும். அவர்கள் தவறை உணர்வார்கள். சரியாக நடந்து கொள்வார்கள். (இஃது கட்டுரைக்காக நான் எழுதியது அல்ல அனுபவத்தில் வெற்றி கண்டபின் எழுதிய குறிப்பு.)

ஆகவே ஆரம்ப வகுப்புகளில் ஆட்சி நூலில் உள்ள திட்டங்களாகிய குடும்பம், அங்கத்தினர்கள், வீடு, கிராமம், கடமைகள் மரியாதை சுதந்திர உணர்ச்சி முதலிய தலைப்புக்களில் நடத்தும் பாடம் வெற்றிபெற அமைய கீழ்க்கண்ட குறிப்புக்களை அநுசரியுங்கள். ஆசிரியர்கள் வேலை எளிதாகிவிடும். பள்ளியின் கௌரவம் உயரும். மாணவர்கள் கடமை உணர்ச்சியோடு நடப்பதனால் கல்வி முன்னேற்றமும் காணப்படும்.

வகுப்பறையில் மாணவர்களுக்குப் **பதவிகள் அளித்தல்** வகுப்பறையின் சுத்தத்தைக் கவனிக்க ஒரு மாணவன். அவன்தான் அதற்குப் பொறுப்பு. ஒரு சிறு காகிதத் துணுக்குக்கூட இல்லாமல் வகுப்பு தூய்மையாக இருக்க அவன் பார்த்துக் கொள்வான்.

அதுபோல் மேஜை நாற்காலிகள், பெஞ்சுகளைத் துடைத்துச் சுத்தம் செய்தலும் வகுப்பில் தொங்கும் டயம்டேபில் முதலிய சார்ட்டுகளைக் கவனித்துக் கொள்வதும் ஒருவனது பொறுப்பு (Dignity of Labour). இந்த வேலை இழிவு இதுதான் உயர்வு என்ற தாழ்வு மனப்பான்மையை ஒழிக்க இது



உதவும். ஏனெனில் வாரா வாரம் மாணவர்கள் தம் பதவிகளை மாற்றிக்கொள்ள வேண்டியிருப்பதால் ஒரு வேலை உயர்ந்தது அதைத்தான் நான் செய்வேன் என்ற எண்ணம் அகன்றுபோகும்.

மூன்றாமவனுக்கு இடைவேளைகளில் மாணவர்களுக்குத் தலைமை தாங்கி 'க்யூ' வரிசையில் அவர்களை அழைத்துச் சென்று, அழைத்துவரும் வேலை. மற்றொரு மாணவன் விளையாடும் நேரத்தில் மாணவர்கள் சிதறிப் போகாமலும். சச்சரவிடாமலும் கண்காணிப்பது.

நான்காம் மாணவர்த் தலைவன் மாணவர்கள் வகுப்புக்கு வருமுன் தினசரி காலை வேளைகளில் அவர்களது நகம், பல், உடை சுத்தம் முதலியன கவனித்து வரல். (இஃது செட்கிராஸ் மாணவனின் கடமை.)

இதுபோல் ஒவ்வொரு வகுப்பிலும் ஏற்படுத்திவிட்டால் எவ்வளவு நேர்மையுடனும், கட்டுப்பாடுடனும், மாணவர்கள் நடப்பார்கள் என்பதை அறிய ஆசிரியர்கள் மகிழ்ச்சி அடைவர். (இந்த முறை பல பள்ளிகளில் ஏற்கனவே நடந்துவருகிறது. புதிய ஆசிரியர்களுக்கும் தெரிவதற்காக எழுதுகிறேன்.)

மேல் வகுப்புகளில் மாணவர்களில் ஊக்கமுற்ற சிலரை பள்ளியின் பொதுச் சுத்தம், பள்ளியின் சுறுசுறுப்புச் சுத்தம் இவற்றைக் கவனிக்கவும், விழாக்கள் பள்ளிகளில் நடக்கும்போது இட அமைப்பு, வரவேற்பளித்தல், ஆசனங்கள் அடைதல், விழா முடியும்வரை அமைதி, ஒழுங்கு முதலியவை கவனிக்கவும், தொண்டர்களாகப் பயிற்சி அளிக்கலாம். பள்ளிக்காகவும், பொதுவாக 'Flag-day' கொடி விற்பனை முதலிய செய்து நிதி திரட்டவும், மாணவர்களுக்குப் பதவிகள் அளிப்பது வெற்றியைத் தரும். C. I. D. அதாவது மறைவில் கவனித்து மாணவர்கள் குற்றங்களைக் கண்டு நிவர்த்தி செய்யவும் மாணவர்கள் நியமிக்கப்பட்டால் பள்ளியில் உள்ள 'விஷமிகளையும்', திருந்தாத கெட்டப் பிள்ளைகளையும், கண்டறிந்து நிவர்த்தி செய்வதில் ஆசிரியர்களுக்குப் பேருதவியாக மாணவர்கள் விளங்குவார்கள்.

ஆகவே ஆசிரியர்கள் 'சிறு குழந்தைகள் என அவர்களைக் கருதாமல் அவர்களுக்கு ஏற்ற பொறுப்புக்களைத் தந்து, அப்பதவிகளை அவர்கள் சரிவரக் கவனிக்கிறார்களா? தலைவனுக்கு மற்றவர்கள் அடங்கி நடக்கிறார்களா? தலைவன் கர்வத்தால் அதிகார மமதையால் தவறுகள் செய்யாமல் நேர்மையாக இதர மாணவர்கள் மீது அன்பாக ஆட்சி செலுத்துகிறானா? என்பதையெல்லாம் ஜாக்கிரதையாகக் கண்காணித்தல் வெகு அவசியம். அப்போது பள்ளியின் ஆட்சியும் அழகுபெற அமைந்து 'ஆட்சி நூல்' போதனை 100க்கு 100% வெற்றியை அளிக்கும்.

## தைத்திரிய உபநிஷதம்

### "ஆசி"

### 2. ப்ரஹ்மானந்தவல்லி—பேரின்பப் படர்கொடி.

**இறை வணக்கமும் பரம்பொருள் விளக்கமும்:**

**இறைவணக்கம்—நலங்கோரல்:**

*ஓம் நலம் எமக்கு (ஆகுக) மித்திரன்; நலம் வருணன்;*

* * *

*காக்குமாக என்னை! காக்குமாக உரைப்போனை!!*

**இறை வணக்கம்—பயன் கைகூடக் கோரல்:**

*(பரமன்) எங்களிருவரையும் சேர்த்துக் காப்பாராக;*
*எங்களிருவரையும் சேர்த்துப் புசிக்கச் செய்வாராக;*
*நாங்களிருவரும் சேர்ந்து வன்மையுறுவோமாக;*
*நாங்களிருவரும் கற்றது ஒளிர்வுற்றதாகுக;*
*(நாங்களிருவரும்) பகைமை கொள்ளாமலிருப்போமாக;*
*ஓம் தண்மை (சாந்தி), தண்மை, தண்மை (இலங்குக).*

**பரம்பொருள் விளக்கம்.**

*பிரம்மத்தை யறிந்தோன் பரமநிலை எய்துகிறான். அதனைக் குறித்து இது கூறப்பெறுகிறது: "ஸத்யம் (உண்மை), ஞானம் (அறிவு), அனந்தம் (அளவின்மை) பிரம்மம் (பரம்பொருளாகும்). (மறைத்து) வைக்கப்பெற்றுள்ளது குகைக்குள், உயர்ந்த ஆகாசத்தில் என்று எவன் அறிவனோ அவன் அடைகின்றான், எல்லா விருப்பங்களையும் சேர்ந்து, எல்லா முணர்ந்த பிரம்மத்துடன்" என்று.*

**பரம்பொருளும் படைப்பும்.**

*அந்த இவ் ஆன்மாவினின்றே ஆகாசம் (விசும்பு) தோற்றங்கொண்டது; விசும்பினின்று வாயு; வாயுவினின்று அக்னி (அனல்); அனலினின்று அப்பு (நீர்), நீரினின்று நிலம்; நிலத்தினின்று ஓஷதிகள் (பூங்கொடிகள்); பூங்கொடிகளினின்று உணவு; உணவினின்று புருஷன் (மனிதன்); அந்த இம்மனிதனே உணவின் சாறு நிறைந்தோன். அவனுக்கு இதுவே சிரம்; இது வலது பக்கம்; இது இடது பக்கம்; இது ஆன்மா (உடல்); இந்த வால் (கீழ்ப்புறம்) உறுதி நிலை. அதனைக் குறித்தும் இந்த சுலோகம் உளது: (1)*

*[சிக்ஷாவல்லி யென்ற பயிற்றுமுறைப் பகுதியில் கருமங்களுக்கு முரணாகாமல் பிரம்ம வித்யையை யடையத் தகுதியாவதற்கான உபாஸனை*



*முறைகள் கூறப்பெற்றன; உள்ளத்து ஒளிரும் ஆன்மாவின் இலக்கணமும் கூறப்பெற்றது. இந்த பிரம்மானந்த வல்லியெனும் பேரின்பப் பகுதியில், ஸம்ஸாரமெனும் விதையையே களைந்தெறிய, பிரம்மத்தின் இயல்பும் அவ்வுணர்வின் உயர்வும் விளக்கமும் விவரிக்கப்படுகிறது.*

*சிக்ஷாவல்லியின் தொடக்கத்தில் இறைவணக்கங்கூறி, அதனால் அங்கு உபதேசிக்கப்பெற்ற எல்லா உபாஸனை முறைகளும் நன்கு கைகூடப் பெற்றதன் காரணமாகத் தனது நன்றியை யறிவிக்க இறுதியிலும் இறை வணக்கங் கூறப்பெற்றது. உபாஸனை முறைகளெல்லாம் பேரின்ப விளக்கம்பெறத் தகுதி யுறவே யாகலின், இதனை எற்பதிலும் ஒருவகை இடையூறும் நேராதிருக்க இப்பகுதியும் இறை வணக்கத்துடனேயே தொடங்குகிறது. சிக்ஷாவல்லியின் முதல் அனுவாகமாகவுள்ள நலங்கோரலெனும் இறை வணக்கத்துடன், ஆசானுக்கும் சீடனுக்கும் இடையே ஒருவகைக் கருத்து வேற்றுமையும் எழாது, உண்மைப் பொருளை விரைவில் உணர்வதற்கான நுட்பங்கள் துலங்குதலெனும் பயன் கைகூடக் கோருதலாகவுள்ள இறைவணக்கமும் கூறப்பெறுகிறது.*

**இறைவணக்கம்—நலங்கோரல்.**

*இதன் விளக்கத்தை சிக்ஷாவல்லியின் முதல் அனுவாகத்தின் கீழ்க் காணவும்.*

**இறைவணக்கம்—பயன் கைகூடக்கோரல்:**

*உபாஸனையில் உபாஸிக்கப்படும் பொருளினும் உபாஸகன் வேறுபட்டவன் என்ற உணர்வு இருந்துகொண்டே வருகிறது. அதற்கேற்ப, "நலம் எமக்கு (ஆகுக)" என்று இருவருக்கும் சேர்த்து நலங்கோரினும், அதன் இறுதியில், "காக்குமாக என்னை, காக்குமாக உரைப்போனை" என்று பிரித்துக் கோரும் மனப்பான்மை வந்துவிட்டது. பரம்பொருள் உணர்வு பெறப் புகும் பகுதியில் பிரித்துக் கூறும் வேற்று மனப்பான்மைக்கு இடமில்லை யென்பதை வுணர்த்துவதே போன்று இருவருக்கும் சேர்த்துக் கோருவதாகமட்டும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.*

*கற்பதிலும் கற்பிப்பதிலும் முறையே சீடனுக்கும் ஆசானுக்கும் ஒருவகை இடையூறும் குறுக்கிடாதபடி இருக்கக் கோருதலையே எங்களிருவரையும் சேர்த்துக் காப்பாராக என்பது உணர்த்துகிறது. ஆசானுடைய விளக்கத்தால் சீடனது அவித்யை யெனும் அறிவின்மை நீங்கி அவன் பேரின்பத்தில் மகிழ்வதை ஆசானுங்கண்டு மகிழ்ச்சி யடையுமளவும் வாழ்ந்திருக்கக் கோருதலையே சேர்ந்துப் புசிக்கச் செய்வாராக என்பது குறித்து நிற்கின்றது. நோய் நொடிகள், மனச்சோர்வு முதலியன சீடனையோ ஆசானையோ அணுகாது, பயன் கைகூடுமளவும் உடல்வன்மையையும் மனோ வன்மையையுங் கோருதலை சேர்ந்து வன்மையுறுவோமாக என்பது தெரிவிக்கிறது. மறதி, கலக்கம் முதலிய குற்றங்கள் ஆசானையோ சீடனையோ கவராது, மறைமொழிகளின் உண்மைப்பொருள் துலங்குமாறு வேண்டலே கற்றது ஒளிர் வுற்றதாகுக என்பதால் அறியப்படும். சீடன் பணிவுடனும் ஒழுக்க முறையுடனும் நடந்துகொள்ளவில்லை யென்று ஆசானுக்கோ, ஆசான் நன்கு விளக்கவில்லையென்று சீடனுக்கோ மனக்கசப்பு எற்படின், ஆசான் சில மறை பொருள்களை விளக்காமலிருக்க நேரும்; நன்கு விளக்கியபோதிலும் சீடனது தவறான மனப்பான்மையால் தெளிவு எற்படாமல் இருத்தல்*

கூடும். இவ்வகை வேற்றுமை மனப்பான்மைகளால் பயன் கைகூடாது போய்விடும். அவ்வாருகாமல், ஈசன் வடிவே ஆசான் என்ற உயர் மனப்பான்மை உண்டாகி, அன்பு வளர்ந்து, உண்மை யுணர்வுபெறக் கோருதலைக் குறிக்கவே, பகைமை கொள்ளாமலிருப்போமாக எனப்பட்டது.

மும்முறை தண்மை (சாந்தி) கூறப்பெற்றதன் குறிப்பை சிக்ஷாவல்லி யின் முதல் அனுவாகத்தின் கீழ்க் காணவும்.

## பரம்பொருள் விளக்கம்:

**பிரம்மத்தை யறிந்தோன் பரம நிலை எய்துகிறன் என்ற ஸூத்திரமே** போன்ற இந்த வாக்யம் பரம்பொருட் கல்வியின் நோக்கத்தைச் சுருங்கக் கூறுவதாக உளது. பிரம்மம் (பரம்பொருள்) என்பது யாது? என்பதை நன்கு அறிதலெனும் உணர்வுபெற்ருேன் பரமநிலை (எதனினும் வேறு உயர்நிலை இல்லையோ அத்தகைய உயர் நிலையை, அதாவது பிரம்மமாம் பரம்பொருளையே) அடைகின்ருன் என்று கூறுகின்றது. பரம்பொருட் கல்வி (பிரம்ம வித்யை)யைப் பயிலுவது எப்படி? அதனுல் ஏற்படும் பயன் யாது? என்ற இரண்டு வினுக்களுக்கும் விடை கூறியதாகிறது. மற்ற கல்விகளைப்போலல்லாது, இக் கல்வியில் பரம்பொருள் யாது? என்பதை நன்கு அறிதலெனும் உணர்வு பெற்ற மாத்திரத்தால் அதன் பயனுகிய உயர்நிலையெனும் பரம்பொருளையே அடைந்தவனுகின்ருன்.

பிரம்மம் என்ற சொல் எல்லையின்றிப் பெருகிய பொருள், அதாவது, உண்மையிலேயே எங்கும் நிறைந்த பொருள் என்று பொருள்படுகிறது. எங்கும் நிறைந்த பொருள் ஒன்ருகத்தான் இருக்க முடியும். இரண்டாவதாக ஒரு பொருள் இருப்பதாகக் கொண்டால், இப்பொருள் விளங்குமிடத்தில் அது பரவியிருக்கவில்லை யென்ற குற்றம் சார்ந்து, எங்கும் நிறைந்ததெனக் கூற இயலாது போய்விடும். கௌரவித்துக் கூறலாகுமேயன்றி, உண்மை நிலை விளக்கமெனக் கூறுவதற்கில்லை. ஆகலின் பிரம்மம் என்ற பரம்பொருள் ஒன்றே உளது; இரண்டாவதாக வேருெரு பொருள் இல்லை என்று ஏற்படுகிறது. ஆனுல், நடைமுறையில் நமது புலன்களால் நாம் காண்பது பல்வேறு பொருள்களாகவே இருக்கின்றது. இதன் உண்மையை யறியப் புகுதலே பரம்பொருட் கல்வியின் நோக்கம். ஒன்றே எங்குமுளதாகியபோது, அதனை அறிவதும், விளக்கம் பெறுவதும் அதனுலேதான் ஆகவேண்டும். இப்பொருளினும் வேருக நம்மைக் கருதி, உண்மையறியப் புகுதலென்பதே எங்ஙனம் பொருந்துமென்ற வினு உடனே எழக்கூடும். நாம் எந்த நிலையில் இருக்கின்ருேமோ அதினின்றுதான் உண்மை நிலையை யறியவேண்டியிருக்கிறது. உலகம் உண்மையென்று நமக்குத் தோற்றமளிப்பது அப் பரம்பொருளின் இருப்பினுல்தான். மனிதனது உள்ளத்தில் 'நான்' என்று கூறிக்கொள்ளும் பொருளாக விளக்கமுறுகிறது. இடத்தாலும், காலத்தாலும் ஓரளவுக்கு உள்பட்டதாக இருந்தபோதிலும், 'நான்' என்பது தொடர்ந்து இருந்துகொண்டே வந்து மனிதனது சரிதையையே கூறிவருகிறது. அறிவிற் செறிந்து கிடக்கும் இந்த 'நான்', இடத்திற்கும் காலத்திற்கும் உட்பட்டுவிட்டதால் அவித்யையெனும் அறிவின்மை சூழ்ந்து தன்னை வேறுபட்டவனுகக் கருதச்செய்து, அவாவெனும்



ஆசையை எழச்செய்து, வினைபுரியத் தூண்டச்செய்து அதன் பயனையும் புசிக்கச் செய்கிறது. இந்த 'நான்' என்று தனித்தனியே ஒவ்வொருவரும் கூறிவரும் பொருள் யாது என்று விசாரித்துக்கொண்டே போனுல் அது மீண்டும் ஒரே பரம்பொருளென்ற உணர்வையே தரும். மொழி யிலக்கணத்திலும் இந்த 'நான்' என்ற சொல்லுக்குப் பன்மை இல்லையென்றே கூறவேண்டும். 'நாம், நாங்கள்' என்ற பன்மைச் சொற்கள் உளவே என்று உடனே வினவக்கூடும். சற்று யோசித்துப் பார்த்தால், நானும் நீயும் (நீங்களும்) அல்லது இவனும் (இவர்களும்) அல்லது அவனும் (அவர்களும்) சேர்ந்துதான் நாங்கள் என்றும், தொகுப்பு முறையில் நாம் என்றும் பொருள் படுகிறதேயன்றி, நானும் நானும் சேர்ந்தல்ல என்பது விளங்கும். நீ, நீ என்று இருவரையோ, மேற்பட்ட நபர்களையோ சுட்டிக்காட்டி நீங்களெனலாம்; அவ்வாறே இவர்கள், அவர்கள் என்ற சொற்களையும் ஊகிக்கலாம்; ஆனுல் நான் என்று தன்னை ஒருவனைத்தவிர்த்து மற்ருெருவனைச்சுட்டிக் காட்ட இயலாது. தன்னைக்குறித்து விசாரிக்கத் தொடங்கின் பரம்பொருள் ஒன்றே என்ற உணர்வு ஏற்படுவதால் பரம்பொருட் கல்வி (பிரம்ம வித்யை) ஆத்ம வித்யை (தன்னைக் குறித்த கல்வி) என்றும் வழங்கப்படுகிறது. ஆன்மா என்று மருவி வழங்கப்படும் ஆத்மா என்ற சொல்லே 'எங்கும் நிறைந்த பொருள்' என்றுதான் பொருள் படுகிறது. ஆகவே ஆன்மாவே பரம்பொருள் என்ருகிறது. இவ்வாறு ஒன்றெனை உணர்ந்தோன் ஆத்ம வித் (ஆன்மாவை யுணர்ந்தோன்) எனப்படுவான். பரம்பொருளினும் வேருன பொருள் இல்லையென்ற உணர்வுவந்ததும் அதில் ஒன்றிவிடுவதால், தனியே அடையக்கூடிய நிலையும் வேறு இல்லை. ஆகவே பரம்பொருளை யறிந்தவன் அடையக்கூடிய நிலையும் அப் பரம்பொருளே. இதுவே பரமநிலை, எல்லாவற்றினும் உயர்ந்த நிலை. பிரம்மத்தை யறிதலென்பது நூன்முகமாகவோ, ஆசான் முகமாகவோ பிரம்மத்தின் விளக்கம் பெறுவது மட்டுமன்று; இடத்தாலும் காலத்தாலும் ஓர் அளவுக்கு உட்பட்ட புத்தியாலறியும் தன்மையைக் கடந்து, இடம், காலமென்ற அளவு இன்றிய உணர்ச்சிபெறலே. நிர்விகல்ப ஸமாதியெனும் யோக நிலையில் இவ்வாறு உணரப்படும். பரம்பொருட் கல்வியின் முழுப்பயன் இதுவே. நாம் தற்போது இருக்கும் நிலையாகிய பகுப்பு, தொகுப்புகளாலான உணர்வினின்று பகுப்புகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டே போனுல், பகுப்பு தொகுப்புகளின்றிய ஒரே பரம்பொருளென்ற முடிவுக்குத்தான் வர முடியும். ஆனுல் பகுப்புகளையே வெகுகாலம் ஏற்றுவந்த காரணத்தால் உடல், உயிர் என்ற இரு பகுப்புகளையாவது ஏற்கவேண்டுமென்ற நிலையுடன் நின்றுவிடுவதே புத்தியின் பொது இயல்பாகிறது. இந்த இரு பகுப்புகளைப் பெருக்கிக் கொண்டே போவது த்வைதம் (இருமை) என்றும், இந்த த்வைதம் உலக நிலையில் பொருந்துமேயன்றி உண்மை நிலையாகாது என்பதை உணர்வதே அத்வைதம் (இருமையற்றது) என்றும் ஒரு வகையிற் கூறலாம். இருமைக்கும், இருமையற்ற நிலைக்கும் இடையேயிருந்து தயங்கும் நிலையும் ஒன்று உண்டு. இருமையற்ற நிலையே உண்மை நிலையென்ற முடிவுக்கு வரத் தயங்குவதால் இந்நிலையும் த்வைதமென்றே கூறத்தகும். இம்மூன்று கொள்கைகளையே பல நிலைகளில் பரம்பொருட் கல்வி பயிற்சியளிக்கிறது. இங்கு நாம் விளக்கப் புகுந்திருப்பது இருமையற்ற கொள்கையை அனுசரித்ததேயாகும்.

பிரம்மமென்ற சொல்லிலேயே அதன் இலக்கணமும் ஒருவாறு அடங்கியுளதெனினும் தனிப்பட்ட விளக்கம் வேண்டியது அவசியமாகலின், அதனைத் தெரிந்து இது கூறப்படுகிறது என்று தொடங்கி விளக்கங் கூறப்பெறுகிறது. பிரம்மமென்பது ஸத்யம் (உண்மை) ஞானம் (அறிவு), அனந்தம் (அளவின்மை) என்ற மூன்று தன்மைகளை முக்கியமாகக் கொண்டதெனப் பட்டது. உண்மையென்பது இருப்பு; மாறுதலடையாமல் எப்போதும் இருத்தல் என்ற தன்மையைக் குறிக்கிறது. இருத்தல் என்றது எதற்கும் அடிப்படையான பண்பாகும். இத்தன்மையை ஏற்காவிடின் அதனைக் குறித்துக் கூறவோ, உணரவோ இயலாது. இன்மை யென்பது இருத்தலின் எதிர்மறைப் பண்பாகிறதே யன்றி, தனித்து விவரிக்க இயலாத நிலையாகும். இத்த இருப்பு, உள்ள பொருளினும் வேறாக இருக்க இயலாதாயினும் இருத்தலென்ற தன்மை உணர்ச்சியுடைய வஸ்துவிற்கே புலனாகிறது. உணர்ச்சி யென்பது இல்லாவிடின் இருப்பின் மதிப்பே இன்றியதாகிவிடும். ஆகலின் இருப்பும் அதன் உணர்வும் பிரித்துக் கூற இயலாதனவாக உள. ஆனால் உணர்வும் உணரப்படுவதும் ஒரே தன்மையுடைத்தாகக் கொள்வதற்கில்லை. உணர்வு என்பது ஒரு பொருளாகாது. உணரப்படுவதோ ஒரு பொருளாகும், பொருளென்றதும் இடமும் காலமும் சூழ்ந்த ஓர் அளவுக்கு உட்பட்டதெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. உணர்வோ அந்த அளவுக்கு உட்பட்டதல்ல; அளவு கடந்தது. ஆகலின் அறிவு (உணர்வு) அளவின்மை யெனும் தன்மையுடையதாகிறது. இவ்வாறு பிரம்மம், உண்மை (ஸத்யம்—இருப்பு), அறிவு (ஞானம்—உணர்வு), அளவின்மை (அனந்தம்—முடிவின்மை) என்ற தன்மைகளை முக்கியமாகக் கொண்டுளது. இம்மூன்று தன்மைகளையுங் கொண்டு ஸத்சிதானந்தம் என்ற ஒரே கூட்டுச் சொல் பெரிதும் வழங்கப்படுகின்றது. ஸத் என்றால் இருப்பு என்றே பொருள் படுகிறது. இச்சொல் புலனாகும் இருப்பு, புலனாகாத நுண்ணிய இருப்பு என்ற இரண்டையும் குறிக்கவல்லதாகவும் உளது. சித் என்றால் உணர்வு (அறிவு) என்று பொருள் படுதலின் இது ஞானம் என்பதைக் குறிக்கிறது. ஆனந்தம் எனின் எங்கும் இன்பம் சூழ்ந்த நிலை (பேரின்பம்) என்று பொருள்படுகிறது. அளவின்றிய நிலையில் (அனந்தத்தில்) இருப்பதே பேரின்பம் (ஆனந்தம்). அற்பத்தில் ஆனந்தம் இராது. ஆகவே ஆனந்தமென்ற சொல் அனந்தத்தைக் குறிக்கிறது.

இந்த பிரம்மம் உள்ள மெனும் குகையில் நுண்ணியத்வாரம் போன்ற ஆகாசத்தில் (விசும்பில்) மறைத்து வைக்கப்பெற்றதே போன்று இருப்புக் கொண்டுள்ளது என்று ஆராய்ந்தறிந்து உணர்வோன், அந்த ஞானவடிவாகிய பிரம்மத்தில் இருப்புக்கொண்டு எல்லா விருப்பங்களையும் அடைந்தவனாகின்றான் என்று (மறைந்து) வைக்கப்பெற்றுள்ளது... எல்லா முணர்ந்த பிரம்மத்துடன் என்று என்பது உணர்த்துகின்றது. சிக்ஷாவல்லியின் ஆறாவது அநுவாகத்தில் கூறப்பெற்ற உள்ளத்து ஒளிரும் பரமன் உபாஸனையின் விளக்கமாகவே இப்பகுதி உளது. குகையென்றது உணர்வோன், உணர்வு, உணரப்படும்பொருள் என்பனவற்றின் காரணமாக விளங்குகின்ற அறிவு நிலையாம் உள்ளத்தைக் குறிக்கிறது. உயர்ந்த ஆகாசமென்றது புறத்தேயுள்ள ஆகாசத்தினும் வேறாக அகத்தும் நுண்ணிய துளை(த்வார) அளவு ஆகாசம் உளது என்பதைச் சிறப்பித்துக்



கூறுவதாகும். அல்லது, படைப்பு தோன்றுவதற்கு முன் அது பிரம்ம மெனும் ஆகாசத்துள், குகைக்குள் வைக்கப்பெற்றுள்ளதுபோல் வெளிப்படாத நிலையில் இருந்தது என்றுங் கொள்ளலாம். ஆனால், பிரம்மத்தின் இருப்பை, உள்ளத்தில் ஒளிரும் ஆன்மாவை யறிதலாலேயே, எளிதில் உணரக் கூடுமாகலின், உள்ளத்தையே குகை யென்றும், அதனுள் விளங்கும் ஆகாசத்தையே உயர்ந்த ஆகாசமென்றும் குறிக்குமென்பதே மிகப் பொருந்தும். ஆன்மாவை யுணர்வதால் அது ஞானவடிவும் ஆனந்த நிலையும் ஒரே பொருளுமாகிய பிரம்மமேயாகி விடுவதால், அதனினும் வேறாக அடையக் கூடியதும் எதுவுமில்லாததால், எல்லா விருப்பங்களையும் அடைந்தவனாகின்றான் எனப்பட்டது. இந்தப் பேரின்ப இருப்பின் காரணமாகவே புலன்களால் நுகரப்படும் போலி இன்பம் நமக்கு ஏற்படுகிறது. மாசுற்ற புலன்களின் வழியே நுகரப்படுவதால் இந்த இன்பமும் நீடித்திராமல் அவ்வப்போது தோற்றங்கொண்டு மறைந்துவிடுகிறது.

## பரம்பொருளும் படைப்பும்:

மனிதனது அறிவின் காரணமாக இயற்கைப் படைப்பினின்று தனக்கு வேண்டுவனவற்றைப் படைப்பித்துக் கொள்வதுபோல், பரம்பொருளின் 'சித்' (ஞானம்) என்ற தன்மையின் காரணமாக இயற்கைப் படைப்பு ஏற்பட்டதென்று மனித நிலையிலுள்ள நாம் கொள்ளவேண்டியிருக்கிறது. பரம்பொருளுக்கு ஆகவேண்டுவது ஒன்றுமில்லையாயினும் இது ஒரு லீலை, விளையாட்டுபோன்றது எனலாம். இந்த விளையாட்டில், ஆன்ம நிலையே முதல் நிலை. இந்த ஆன்மாவினின்றே படைப்பு தொடங்குகிறது. இந்த நிலையை ஹிரண்ய கர்ப்ப நிலையென்றுங் கூறுவர். இந்த ஆன்மா என்ற சொல் அளவுக்கு உட்பட்ட நிலையென்று பொதுவாக வழங்கப்படினும், அதன் உண்மை நிலை பிரம்மமேயாகலின் பிரம்மமென்ற பொருளிலும் வழங்கப்படும். இந்த ஆன்மாவினின்று ஐம்பூதங்கள் தோன்றின. பூதமெனின் தோற்றங்கொண்ட பொருள் என்பதுதான் சொற்பொருள். முதன் முதலில் அப் பரம்பொருளாகிய இந்த ஆன்மாவினின்று தோன்றியது ஆகாசம். இச்சொல் எங்கும் ஒளிர்ந்திருப்பது என்று பொருள்படும். இக்காரணத்தால் சில இடங்களில், ஆன்மா அல்லது பரம்பொருளையே குறிக்குமாறு பயன் படுத்தப் பெற்றுள்ளது. ஆகாசம் இடத்தைக் குறித்தற்கு இடந்தருகிறது. காலம் துணை புரிகிறது. தோற்றங்கொண்ட இந்த ஆகாசத்துடன் ஓசை (சப்தம்) எனும் தன்மை இணைப்புற்றிருக்கிறது. ஆகாசத்தினின்று இதனினும் தெளிவுறவுள்ள காற்று (வாயு) ஊறு (ஸ்பர்சம்) எனும் மற்றொரு தன்மையுடனும் இணைப்புற்றுத் தோற்றங்கொண்டது. இதனையே மெய் (த்வக்) எனும் புலனால் முதன் முதலாக அறியக்கூடுமாகையால், வாயுவே! நீதான் கண்கூடான பிரம்மமாக இருக்கிறாய் என்று இறை வணக்கத்தில் கூறப்பெற்றது. வாயுவினின்று, அதனினும் தெளிவுற்றுள்ள அக்னி என்பது ஒளி (அல்லது நிறம்) என்ற மற்றொரு தன்மையையுஞ் சேர்த்துத் தோன்றிற்று. அக்னி (அனல்) என்பது வெப்பத்தையும் ஒளியையுங் குறிக்கும். இது ஊன் கண்ணுக்குப் புலனாகும் நிலையில் உள்ளது. அக்னியினின்று, சுவையென்ற மற்றொரு தன்மையுடனுங்கூடி அப் (நீர்) என்றது தோற்றங்கொண்டது. நீர் என்றதால் இளக்கம் (த்ரவத்வம்) கொண்டதைக் குறிக்கும். ஐந்தாவதாக, நாற்றம் (கந்தம்) என்ற மற்றொரு

தன்மையையுங்கொண்டு நிலம் (ப்ருத்வீ) என்ற பூதம் தோன்றிற்று. நிலம் என்றது உறுதி யுடைமையைக் குறிக்கும். இதுவே ஐம்பூதங்களின் படைப்புமுறை. (தாது வகுப்புகளை பூதப்படைப்பின் முதற் பகுதியாகக் கூறலாம்). நிலத்தினின்று ஓஷதிகள் (பூங்கொடிகள்) தோற்றங்கொண்டன. (தாவர வகுப்புகளை இரண்டாவது பகுதியாகச் சேர்த்துக் கூறலாம்). ஓஷதிகளினின்று உணவு உண்டாயிற்று. உணவினின்று புருஷன் (மனிதன்) தோற்றங்கொண்டான். (ஓரறிவு முதல் ஆறறிவுபடைத்த மனிதன் ஈறாகவுள்ள ஜீவவகுப்புகளை மூன்றாவது பகுதியாகக்கொள்ளலாம்).

இவ்வாறு புருஷனுக்கும் பிரம்மத்திற்கும் தொடர்ந்த இணைப்புள்ள தான படைப்பு முறையை யறிவதே பரம்பொருளுணர்வுக்கு எளிதான உபாயமாகும். மாயையின் மாயத்தால் பிரம்ம நிலையினின்று மாறுதலடைந்தோனாகக் கொண்ட மனிதன் மீண்டும் அந்த நிலையினன் என்பதை உணர்வதற்கு இம்முறை பெரிதும் பயன்படக்கூடியது நவீன தத்துவ நூல் வல்லுனர்களின் நிலையற்ற, கலக்க விளக்கங்கள்போலல்லாது எக்காலத்திற்கும் பொருந்திய படைப்பு விளக்கமாகும் இந்த ஐம்பூத விளக்கம். இனி ஐந்து கோசங்கள் (உறைகள்) என்ற முறையே ஆன்மாவின் இருப்பு விளக்கப்பெறுகிறது.

புருஷன் என்றதும் அவனுடைய உடலெனும் உருவமே கண்ணுக்குப் புலனாகிறது. இவ்வுடல் உணவால் வளர்ந்ததென்று அறியாதவர் இரார். இதனையே அந்த இம்மனிதன் உணவின் சாறுநிறைந்தோன் என்று கூறுகிறது. அருந்திய உணவு, சாறாகி, அது உதிரமாகி, ஊன், கொழுப்புகளாகி, எலும்பு, மஜ்ஜைகளாகி, வீரியமுமாகி ஆண் பெண் சேர்க்கையால் உடலின் உற்பத்திக்குக் காரணமாவதால் உணவின் சாறு நிறைந்ததே மானிட வடிவம் (அன்ன மயம்). அந்த வடிவத்திற்கு 'இதுவே சிரம், இது வலது பக்கம், இது இடதுபக்கம்...என்று ஆசான் சுட்டிக்காட்டுகின்றான். பக்கமென்றது சிறகு என்று பொருள்படுதலால் பறவையின் இரு சிறகுகள்போன்று இரு பக்கமுமுள்ள இரு கைகளைக்குறிக்கும். 'எனது ஆன்மா' என்று மனிதன் தனது மார்பைத் தொடுவதால், உடலின் நடுப்பகுதியே இங்கு ஆன்மா என்ற சொல்லால் குறிக்கப்படுவதாகும். இது வால் என்றது உடலினின்று நீண்டு உடலைத் தாங்கி நிற்கும் கால்களைக் குறிக்கும்.

பிறைச் சந்திரனது நிலையை மற்றொருவனுக்குச் சுட்டிக் காட்டுகையில், அது மரக்கிளையின் நுனியிலிருக்கின்றதென்று கூறி, பின்பு அதனை உணர்த்துவதுபோல், அன்னமய கோசமே ஆன்மா என்று முதலில் கூறப்பெற்றுள்ளது. உருக்கிய உலோகம் வார்ப்படமாக ஆக்கப்படுவதுபோல் கோசங்கள் விளங்குகின்றன. மற்ற கோசங்களையும் பறவையை உவமையாகக் கொண்டே கூறப்போவதால், சிறகு, வால் என்று இங்கு பறவையின் உவமையில் கூறப்பெற்றுள்ளது. ஒவ்வொரு கோசமும் ஓர் உறுதி நிலையைக் கொண்டுள்ளது என்று கூறிவந்து, ஐந்தாவது கோசம் பிரம்மத்தில் உறுதி நிலை கொண்டுள்ளது என்று கூறப்போவதால், இந்த வால் உறுதி நிலை எனப்பட்டது. அன்னமய கோசத்தை இவ்வாறு முதலில் கருதவேண்டுமென்று கூறி, அதனைக்குறித்த மேற்கோள் ஒன்றை இரண்டாவது அனுவாகத்தில் உரைக்கப் போவதால் அதனைக் குறித்தும் இந்த சுலோகம் எனப்பட்டது. அதனை அடுத்த இதழில் விளக்குவாம்]. (1)

...-600 008




# கலையரங்கு

1. ஸ்ரீ பாகவதக் கதைகள் விலை ரூ. 3—0—0
2. ஆஹ்னிக காண்டமெனும்
நித்ய கர்மானுஷ்டான விதிகள் விலை ரூ. 1—0—0

பிரசுரித்தோர்: நே. ஏ துரைசாமி ஐயங்கார்,
தக்ஷிணதேச கிரந்தாலயம்,
7. ரங்கராயர் அக்ரஹாரம், கும்பகோணம், (S. I. Ry.)

இந்த இரண்டு புத்தகங்களும் வரப்பெற்றோம். பதினெண் புராணங்களில் ஒன்றெனப் பெரிதும் போற்றப்படும் பாகவதம் ஸ்கந்தங்களெனும் பன்னிரண்டு பகுதிகள் கொண்டது பகவானுடைய அவதாரங்களை அதிலும் முக்கியமாக ஸ்ரீ கிருஷ்ணவதார சரித்திர விசேஷங்களை விவரித்துக் கூறும் நூல் இது. பகவத் பாகவத சரித்திரங்களை வ்யாஜ்யமாகக்கொண்டு ஆத்ம தத்துவங்களைப் போதிக்கும் அரிய நூல். பகவானுடைய லீலைகளாகவும், பக்தர்களின் வரலாறுகளாகவும் கூறப்பெற்ற நிகழ்ச்சிகள் யாவும் அத்யாத்யப் பொருள் பொதிந்துகிடக்கின்ற உபதேசங்களாகும்.

எளிய தமிழ் நடையில் கதைகளின் போக்குக் கெடாமல் எழுதியுள்ளார். பாலர் முதல் முதியோர்வரை படித்துப் பயன் பெறக்கூடிய நூலாக விளங்குகிறது. ஆகையால் இது ஒவ்வொரு கிருஹத்திலும் அத்யாவசியமிருக்கவேண்டிய கிரந்தமென்று ஆசிரியர் கூறுவது மிகையாகாது.

ஸ்மிருதி முக்தாபலமென்பது வைத்யநாத தீக்ஷிதரென்பவரால் இயற்றப்பெற்ற தரும சாஸ்திரத் தொகுப்பு நூலாகும். தமிழ நாட்டில் இது பெரும்பாலோரால் பிரமாண க்ரந்தமாக ஏற்கப்பட்டு, பின்பற்றிவரப்படும் தரும சாஸ்திர நூலாம். வைத்யநாத தீக்ஷிதீயமென்றே இந்நூல் வழங்கப் பெறுகிறது. ஆஹ்னிக காண்டமென்பது இந்நூலின் ஒரு பகுதியாகும். இதில் நித்திய கர்மானுஷ்டான விதிகள் கூறப்பெறுகின்றன. கிரந்த லிபியில் மூலத்துடன் தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்று இருந்துவருகிறது. மே. ஏ. நடேச சர்மா அவர்கள் இப்பகுதியின் ஸாரத்தை 128 பக்கங்களில் கொடுத்துள்ளார். விழித்தெழுதல், பல் துலக்குதல் முதல் புசித்தல், துயிலுதல்வரை ஒவ்வொரு காரியமும் செய்யப்படவேண்டுவதன் விதி விலக்குகளைக் கூறியிருக்கின்றார். எல்லோரும் படித்துப் பயன் பெறத் தகுந்த நூல் என்பதிலையமில்லை.

**கதர்மலர்—ஸர்வோதய பிரசுரங்கள்.**

கிடைக்குமிடம்:— அகில பாரத சர்க்கா சங்கம,
கதர்மலர்—ஸர்வோதய பிரசுராலயம், வீரபாண்டி, திருப்பூர்.

இப் புத்தகத்தில் கதர், நூற்புக் கணிதம், கிராம சேவை, காந்திஜீ நிர்மாணத்திட்டங்கள், விநோபாஜியின் அறவுரைகள் முதலியவைகளை விளக்கும் புத்தகங்களின் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது. இப் புத்தகங்கள் நூல் நிலையங்களிலும், ஒவ்வொருவர் வீட்டிலும் இருப்பதற்குகந்தவை. இவைகளை எதிர்கால இந்தியாவை உருவாக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் படித்து காந்திஜீ கனவுகண்ட ராம ராஜ்யத்தை நிலவச் செய்வார்களென்று நம்புகிறோம்.

திருவாளர் தேவயானி அவர்கள் எழுதிய 'பொற்றைப் பூம் பொழில்" என்ற நூல் எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. விலை அணா 0—9—0.

Registered No. M. 5171

# நாட்டாண்மைக் கழக ஆரம்ப ஆசிரியர் 7-வது மகாநாட்டில் பிரேரேபிக்க வேண்டிய தீர்மானங்கள்

1. இலவசக்கல்வி, ஆசிரியைகளின் குழந்தைகட்குக் கொடுப்பது போல் கழக ஆரம்ப ஆசிரியர்களின் குழந்தைகட்கும் அளிக்கவேண்டும்.

2. ஜில்லாபோர்டு ஆரம்ப ஆசிரிய, ஆசிரியைகட்கு ஜில்லா போர்டில் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்க அரசாங்கம் உத்திரவளிக்கவேண்டும்.

3. ஆசிரியர் சங்கக் கூட்டதினங்களையும் சேர்த்து 220 நாட்களாக எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் அனுமதியளிக்கவேண்டியது

4. சட்ட சபைகளில் உயர்பள்ளி ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஸ்தானம் வழங்கி இருக்கிறது. ஒரு லக்ஷத்தைம்பதாயிரம் ஆரம்பாசிரியர்களையும் சேர்த்து 3 பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் 4 ஸ்தானங்கள் வீதம் கொடுத்து ஆரம்பாசிரியர்களின் கவுரவத்தையும் உரிமையையும் காப்பாற்றும்படி அரசாங்கத்தாரை வேண்டிக்கொள்ளுகிறது.

5. சென்னை ராஜ்ஜியத்தில் ஆரம்ப ஆசிரியர்கள் அவர்கள் விரும்பும் கட்சிகளிலும் சேர அனுமதிப்பதோடு அதற்குத் தடைசெய்யும் G. O. 1280 உத்தரவை நீக்கவேண்டும்.

6. 200 பிள்ளைகளுக்கோ, 4 ஆசிரிய ஆசிரியைகளுக்கோ குறைந்துள்ள எல்லா ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் தலைமைப்படி அளிக்கவேண்டும்.

7. 5 ஆண்டு சர்வீஸ் உள்ள ஹையர்கிரேட்ஆசிரியர்கள், ஆசிரியைகள் Secondary போதனா முறை பரீக்ஷைக்கு நேரிடையாக போக உத்திரவு அளிக்கவேண்டும்.

8. ஜில்லா போர்டு P. F. கணக்குகளை 31-3-50ல் உள்ளது வரையில் உடனே அனுப்பவேணுமாய் கழகத்தாரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. P. F. கடன் முடிந்த உடனே தேவையானால் தலைமை ஆசிரியர்களின் அத்தாக்ஷியின்மேல் உடனுக்குடன் அளிக்கவேண்டும்.

10. ஆசிரியர்களின் சிவில் லிஸ்டு அனுப்பவேண்டும்.

11. சர்வீஸ் புத்தகத்தை ஆசிரியர், ஆசிரியைகளுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை காண்பிக்கவேண்டியது

12. ஐக்கிய நாணயச்சங்கம் அமைத்து கொடுக்கவேண்டும்

13. ஒரு ஆண்டுக்கு ஒரு ஆசிரியரின் சம்பள உயர்வை நிறுத்தினால் மறுவருடம் சென்ற வருஷத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு இரண்டாகக் கொடுக்கவும்.

14. ஜில்லா போர்டாரின் உத்திரவுப்படி எந்த காரியத்திற்கும் ஜில்லாபோர்டு ஆபீஸுக்கு வருவதாய் இருந்தால் அவ்வாசிரியருக்கு T. A. கொடுக்கவும்.

15 அலுவலகத்திற்கு ஆசிரியர்கள் வரும் நாட்களை தாலூக்கா வாரியாக நிர்ணயிக்கவும்,

16 ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் தபால் செலவை 50% வீதம் அதிகப்படுத்தவும் வேண்டும்.

17. மேற்படி மகாநாட்டின் பொதுச் செலவுக்கு விதிக்கப்பட்ட சந்தா அணா 0-4-0 சென்டர் காரியதரிசிகள் வசூல் செய்து டிசம்பர் 10 தேதிக்குள் கன்வீனர் P. பாலசுப்ரமணியம் பென்னலூர் ஸ்ரீ பெரும்புதூர் போஸ்டு என்ற முகவரிக்கனுப்பவும்.

Edited and Published by Sri A. K. S. Sarma, 87. Acharappan St., Madras
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint St. Madras—1